Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 62 | சர்வதேச மின் செய்தித்தாள் | 27 நவம்பர் 2023




"தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்த நிமிர்ந்தான்;அடிமை விலங்குகளால் பிணைக்கப் பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்."

தமிழீழ தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்.

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
































## விளம்பரத்துக்கு அழையுங்கள்: 437.345.4203




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**எமது மண்ணுக்காக,
எமது மக்களுக்காக, இன்னுயிர்களை
அர்ப்பணித்த தியாகிகளை இன்று
நாம் நமது இதயத்தின்
ஆலயங்களில் நினைவு கூர்ந்து
கௌரவிக்கின்றோம்.
ஒரு புனித இலட்சியத்துக்காக
வாழ்ந்து, அந்த
இலட்சியத்துக்காகப் போராடி, அந்த
இலட்சியத்தை அடைவதற்காக
தமது வாழ்வைத் தியாகம்
செய்த மாவீரர்கள்
மகத்துவமானவர்கள்.**







## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# ஒரு வேங்கையின் வீரச்சாவு லெப். சங்கர்!

**லெப். சங்கர்...**
**ஆயுதப்படைகள் வலைவிரித்துத் தேடும் செ. சத்தியநாதன்.**

இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கொரில்லா வீரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன்.

கண் திறக்காத பூனைக்குட்டியாக - நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்குத் தன்னைத் தானே அர்பணிக்கக் காத்திருந்த வீரமறவன். அரசபடையின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச்செல்லுகையில் - சுற்றி நின்று, கமாண்டோக்கள் சரமாரியாக குண்டுகளைத் தீர்த்த போது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அணைத்துகொண்டவன்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடிகுண்டுகளின் தயாரிப்புக்களிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரச படைகளின் தீவிரக்கண் காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி அவன் கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் விழிகள் சுற்றப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும் கூட ஒரு கொரில்லா வீரன் எள்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்தி விட்டு தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளைப் பத்திரிகையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும், அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப் போராளி சரணடைவது என்பது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது.

குறிப்பாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டங்களில் விடுதலைப் போராளிகளை ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனுமதிக்கும் போக்கானது, அரச படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்து விடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினான்.

படுகாயமுற்ற நிலையிலும் கூட மதில் தாண்டிப் பாய்ந்து, தங்கள் கொரில்லாப்பிரிவின் மற்றொரு மறைவிடத்தை நோக்கித் தப்பிச் சென்றவன், பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்து விட்டோம் எனத் தெரிந்த பின்தான் இடுப்பிலிருந்து ரிவால் வரை எடுத்துக் கீழே வைக்கிறான். உயிரோடும் ஆயுதத்தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரனின் சாவு அவனுடையது.

இனிமேல் "சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கி விட முடியும்" என்று பாசிஸ சர்வாதிகாரி ஜே.ஆர். ஜயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது, நெல்லியடியில் அரச படைகள் மீது சங்கர் நடத்திய கொரில்லாத் தாக்குதல் "தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது" என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது.







ஜீப் சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே எடுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்க்கும் வாலகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறி வைக்கும் அவனது சாதுரியம் அசலானது. நெல்லியடியில் அரசபடையினர் பீதியுற்ற நிலையில் சங்கர் கால்களை அகல விரித்து, பக்கவாட்டில் நின்று அரசபடையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி போலீஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கொரில்லாத் தாக்குதலின் வெற்றிக்குச் சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் போலிஸ் நிலையங்கள் உசார்படுத்தப்பட்டிருந்த நிலையில், மாடிக் கட்டிடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத் தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலுக்கூடாகத் தாக்குதல் நடத்துவது எனபது விஷப் பரீட்சை தான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்து விட முடியும்? ஜி 3 துப்பாக்கி சகிதம் படுத்துக் கிடந்து சங்கர் சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்கு பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் அப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகிக்கிறான்.

எந்த விதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கொரில்லாத் தாக்குதலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு. எதிரிப்படைகள் ஸ்தலத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தை செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும் போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விக்ஷயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பண்போடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனி மதிப்பு



சகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழு மூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நின்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் வழிகாட்டலிலும், இராணுவக் கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற - தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளினால் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும் என்று அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

சாகும் தறுவாயிற் கூட அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்கவில்லை. "தம்பி தம்பி" என்றதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண் கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனான்.

"ஒரு உண்மை மனிதனின் கதை" என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர் அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதையே ஒரு வீர காவியம் தான்.






## போராட்டத்தின் முதல் இழப்பும்; தலைவரின் உணர்வலையும்!

**எமது முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த உடனே, தலைவர் அவர்கள் தம் கைப்பட தனது உணர்வுகளை எழுதியிருந்தார்; அதைக் கீழே தருகிறோம்.**

சத்தியநாதன் (சங்கர்)

**மறைவு : 27. 11. 82**

**இரவு 6. 05 மணி**

*அதர்மத்தை அழிக்க எழுந்த மகாபாரத தர்மப் போரிலே தர்மத்தைக் காக்க முதல் களப் பலியாகிய அரவாணைப் போல், சிங்கள அதர்மர்களிடத்தில் தர்மயுத்தம் நடாத்தி எமது தமிழீழ நாட்டை மீட்கப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளில் முதல் களப்பலியாகிய சத்தியநாதனே ! நீ உனது பெயருக்கேற்ப சத்தியத்திற்காகப் போராடி வீரமரணம் அடைந்துவிட்டாய். இதையிட்டு நாம் கண்ணீர் சிந்துவோம் என்றா நினைக்கிறாய். இல்லை, இல்லை. ஒரு வீரனின் வீரமரணத்தைக் கண்டு இன்னொரு வீரன் அழமாட்டான். அழுதுவிட்டு அடங்கிவிடும் பேடிக்கூட்டமல்ல நாம். தொடர்வோம் உன்பாதையில்; அடைவோம் உன்னைப்போல் வீரமரணத்தை அல்லது தமிழீழத்தை.*





# தமிழீழ தேசியக் கொடி பாடல்

ஏறுது பார் கொடி ஏறுது பார்
ஏறுது பார் கொடி ஏறுது பார் – இங்கு
ஏறுது பார் கொடி ஏறுது – தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி – எட்டுத்
திக்கிலும் மானத்தைச் சேர்த்த கொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி –புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது – தமிழ்
மக்களைக் காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது – புலி
வீரத்தின் கொடியிது – மா
வீரரின் கொடியிது (ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது – பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினிலே
சாற்றிய கொடியிது – தமிழ்
ஈழத்தின் கொடியிது – புலி
ஏந்திய கொடியிது (ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனைக் கொடியிது – சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது – சம
தர்மத்தின் கொடியிது – எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது – பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது – தமிழ்
தேசத்தின் கொடியிது – எங்கள்
தேசியக் கொடியிது (ஏறுதுபார்)

## தமிழீழத் தேசியச் சின்னங்கள்

கார்த்திகை பூ



செண்பகம்



கொடிச் சின்னம்



சிறுத்தை



வாகை



தமிழீழ வரைபடம்



# தமிழ செய்திகள்



## எமக்கு நிதி தேவையில்லை நீதியே வேண்டும்!

### திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி

நவம்பர் 15, 2023



திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு புதன்கிழமை (15) காலை இடம்பெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவி நாங்கள் நிதிக்காக போராடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகவே போராடுகின்றோம். எமக்கு இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லை. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தேடி சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள்.

அவர்களுக்கு இதுவரையில் எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. ஆனால் இலங்கை அரசு அதனை புறம்தள்ளிவிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக வரவு செலவு திட்டத்தில் 1000 மில்லியல் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

நாங்கள் நிதிக்காக போராடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகவே போராடுகின்றோம். எமக்கு இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லை.

சர்வதேச விசாரணை ஒன்றே எமக்கான நீதியை பெற்றுத் தரும். எனவே அதை வலியுறுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள்.

சர்வதேச சமூகத்தின் பார்வையில் எங்களுடைய போராட்டம் பேசுபொருளாக மாறி உள்ள நிலையில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதமாக இம்முறை வெளியிடப்பட்ட வரவுசெலவு திட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்ட விடயம் கண்டனத்துக்கு உரியது.

இவ்வருடம் பொங்கல் தினத்தில் யாழ்ப்பாத்தில்வைத்து யாரும் காணாமல் ஆக்கப்படவில்லை என தெரிவித்த ஜனாதிபதி இப்போது குறித்த விடயத்திற்காக நிதி ஒதுக்குவதாக தெரிவித்திருக்கின்றார் அப்படியானால் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதனை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா? என கேள்வி எழுப்புகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய நாம் தொடர்ச்சியாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவே போராடி வருகின்றோம். இந்நிலையில் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கும் வகையில் அதற்கு இழப்பீடு வழங்குவதாகக்கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்றப் பார்க்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்!

### யாழ் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறுவுகளின் சங்கத் தலைவி

நவம்பர் 15, 2023

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்காக நாம் 14 வருடங்களாக போராடி வருவது நிதிக்காக அல்ல, நீதி கோரியே என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தலைவி சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டு பாதீட்டில் காணாமல் போனவர்களுக்கு என பெரும் நிதி ஒதுக்கி உள்ளார்கள்.

எங்கள் பிள்ளைகள் வீதியிலையோ காடுகளிலையோ காணாமல் போனவர்கள் அல்ல. மன்னிப்பு அளிப்பதாக அவர்கள் கூறியதை கேட்டு, சரணடைந்தவர்கள், எங்கள் வீடுகளுக்குள் புகுந்து கைது செய்யப்பட்டோர். அவர்களையே காணாமல் ஆக்கியுள்ளார்கள்.

இது தொடர்பில், சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் கோரி வருகிறோம். விசாரணைகளை மேற்கொள்ளாது நிதியை தர முயல்கின்றனர்.

காணாமல் போனோருக்கான நிதியினை, தென்னிலங்கையில் காணாமல் போனருக்கு வழங்குங்கள். எங்களுக்கு இந்த காசு வேண்டாம். நாங்கள் தேடுவது எங்கள் பிள்ளைகளையே..

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களில், 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து விட்டனர். ஆனாலும் நாங்கள், தொடர்ந்து உறவுகளை தேடி வருகிறோம். எனவே காசு தந்து எங்களை ஏமாற்ற வேண்டும். நாங்கள் காசு வாங்க வர மாட்டோம். எங்களுக்கு நீதியே வேண்டும்.

14 வருடங்களாக தொடர்ந்து போராடுவது காசுக்காக இல்லை. எங்கள் பிளைகளுக்காகவே போராடி வருகிறோம் என மேலும் தெரிவித்தார்.




## மனித புதைகுழி விடயத்தில் அரசாங்கம் மெத்தன போக்கினை காட்டுகிறது!

### முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

நவம்பர் 20, 2023

இன்றையதினம் கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்கும் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்கு தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணியானது நீண்ட இடைவெளிக்கு பின்பு இன்று அடுத்த கட்டமாக இடம் பெறுகின்றது.

அரசாங்கமானது நினைத்தால் நிச்சயமாக இந்த உடலங்கள் சம்பந்தப்பட்ட ஒரு தெளிவான அறிக்கையை தரலாம் ஆனால் அகழ்வு பணியினை மேற்கொண்டு முடிவுகளை சரியான வழியிலே செய்ய வேண்டும் என்று ஏனையவர்கள் கோரிக்கை விடுமளவிற்கு அரசாங்கம் அந்த நடவடிக்கையில் மெத்தன போக்கினை காட்டுவது போல் தெரிகின்றது.

இன்றும் முதலில் நம்பிக்கை இருக்கவில்லை. இருந்தாலும் அதன் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களால் குறித்த பணி நடைபெறுகின்றது. ஆனால் தொடர்ந்தும் அகழ்வு பணி நடைபெற வேண்டும். இதற்கான முடிவுகள் கிடைக்க வேண்டும் என்பது தான் மக்களுடையதும் எங்களுடையதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.



உண்மைத்தன்மை வெளிப்பட வேண்டும். பொறுப்பு கூறல் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் பொறுப்பு கூறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு என மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க தவறுவதனாலே தமிழர் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற முனைகின்றார்கள்!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

நவம்பர் 15, 2023

சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க தவறுவதனாலே தமிழர் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற முனைகின் றார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

கொக்குதொடுவாய் 15 ஆம் கட்டை பகுதியில் குடியேற்ற முயற்சி இடம்பெறுவதாக அப்பகுதி மீனவர்களால் தெரி விக்கப்பட்டதனையடுத்து இன்று நேரில் களவிஜயம் மேற் கொண்டு அவ் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரி வித்தார்.

ஏற்கனவே புலிபாய்ந்தகல் அதனோடு சேர்ந்த பகுதிகளி லும் அத்துமீறி தொழில் மேற்கொண்டிருந்ததனை சுட்டிக் காட்டி பிரதேச செயலகத்திற்கு அறிவித்திருந்தோம். அதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதேச செயலகத் தினால் தகவல் வழங்கி இருந்தார்கள்.

இந்நிலையில் கொக்குதொடுவாய் வடக்கு கடற்தொழில் சங்க தலைவருக்கு எதிராக குறித்த பகுதியில் தொழில் செய்யும் நபர் ஒருவரால் குறித்த இடத்தில் தாம் தொழில் மேற்கொள்வதிலிருந்து அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக முறைப்பாடு போடப்பட்டமையடுத்து கொக்கு ளாய் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசா ரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

அவர்கள் பொலிஸ் நிலையத்தில் கூறும்போது புத்தபிக்கு தங்களுக்கு தந்த இடம் எனவும், இந்த இடத்தினை எடுத்து விட்டோம். ஆகவே வாடி போட்டு தொழிலினை மேற் கொள்வோம் என்ற வகையில் கடற்தொழில் சங்க தலைவ ரோடு கதைத்திருக்கிறார்கள்.

நீரியல் வள திணைக்களத்தினர் சட்டவிரோத நடவடிக் கைகளை எடுக்க முனைவதில்லை. இவ்வாறான நிலை யில் தான் குடியேற்றங்களை இலக்கு வைத்து புலிபாய்ந் தகல் தொடக்கம் இப்பகுதிவரை சிங்கள மக்கள் குடியேறி தமிழ் மக்களை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்ட வடிவத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு இருக்கையில் நாங்கள் இவ்விடத் திலுள்ள வாடிக்கு அருகே சென்று பார்த்த போது அவர்கள் வைத் திருந்த சட்டவிரோத மான சுருக்கு வலையினை மூடி விட்டு வாக னத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள். பட்டப்பகலிலே சுருக்கு வலையினை கொண்டு தொழில் செய்யும் நடவடிக்கைகள் இவ்விடத்தில் அரங்கேறி கொண்டு இருக் கின்றது.

முல்லைத்தீவில் கடற்தொழில் திணைக்களம் என்னத்திற் காக இருக்கிறார்கள்? சட்ட விரோத நடவடிக்கைகளை பார்ப்பதற்கா? அல்லது சட்டவிரோத தொழிலை ஊக்குவிப் பதற்கா? கொக்குளாய் தொடக்கம் பேய்ப் பாறைப்பிட்டி வரையான இடங்களை முல் லைத்தீவு கடற்தொழில் திணைக்களம் கடல் சார் நடவடிக்கைகளை கண்காணிக் கவேண்டியது அவர்களது பொறுப்பு. வேலைகளை செய் யாது சம்பளம் எடுக்கவா இங்கே இருக்கிறார்கள்.

சரியான சட்டதிட்டங்களுக்கு அமைய பதிவு செய்து அந்த பதிவுகளின் மூலமாக தொழில் செய்பவர்களை தவிர அத்து மீறி குடியேறி தங்கள் குடும்பங்களை கொண்டு வந்து குடியேற்றி இந்த இடங்களை அழிக்க வேண்டும். அல்லது தமிழ் மக்களை துரத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.




இவ்வாறான நடவடிக்கைகளை விட்டு உங்களுடைய இடங்களுக்கு செல்லுங்கள். இங்கே வந்து சட்டவிரோத தொழில், குடியேற்ற முயற்சி ஊக்குவிப்பு நடவடிக்கை யையும் மேற்கொள்ள வேண்டாம் என்பதை கேட்டு கொள்கிறேன் . இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் கதைக்க இருக்கின்றேன். அத்து மீறிய சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பது தான் மக்களதும் எமது கோரிக்கையு மாக உள்ளது என மேலும் தெரிவித்தார்.

# 28 ஆண்டுகளாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்!

நவம்பர் 16, 2023

எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள் என கடந்த 28ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுத்து வரும், "குரலற்றவர்களின் குரல்" அமைப்பு தெரிவித் துள்ளது.

அது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 2006 ஆகஸ்ட் 14ஆம் திகதி, இலங்கைக்கான பாகிஸ் தான் உயர்ஸ்தானிகர் மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு, 16ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை, "நிரபராதிகள்" எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை கடந்த 10ஆம் திகதி அன்று விடுதலை செய்துள்ளது.

குறித்த வழக்கில், மாத்தளையை சேர்ந்த குடும்பஸ்தரான சுப்பிரமணியம் சுரேந்திரராஜா சார்பில், சட்டத்தரணிகள் திரு. தணுக்க நந்தஸ்ரீ, S. அனுஷாங்கன் மன்றில் முன்னிலையாகி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையில் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது வாதாட்டத் தின் மூலம் வலுவிழக்கச் செய்திருந்தார்.

அதேவேளை, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித் தனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா வும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் சார்பில், முன்னால் நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணி கனகா சிவபாத சுந்தரம் அவர்களும் முன்னின்று வழக்கினை திறம்பட நெறிப்படுத்தியுள்ளனர்.

ஒரு சந்தேகநபரை "நிரபராதி" என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15ஆண்டுகள் எடுத்துள்ளதென்பது உண்மையில் கவலை தரும் விடயமே. இருப்பினும், மிகநீண்டகாலங்களாக துன் பங்களை மாத்திரமே அனுபவித்துவந்த இவர்கள் விடுதலை பெற்று அவர்தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெரும கிழ்ச்சியை தருகிறது.



இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் மீத மிருக்கும் எமது உறவுகள், "எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!" எனக்கூறி விழிகலங்க வழியனுப்பி வைத்துள்ளனர்.

ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேகநபர்களாக நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், 15முதல் 28ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10பேரையும், ஜனாதிபதி பொது மன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் வினயமுடன் வேண்டுகை செய்கின்றோம்.

எவ்வாறாயினும், கடந்த பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற "குரலற்றவர்களின் குரல்" அமைப்பானது,

மீதமுள்ள 14தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில்,நடைமுறைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விடுதலைப்போராட்ட திரைப்படங்கள், நாடகங்களில் நடித்து தமிழ் மக்களின் மனங்களில் இடம்பிடித்த மாணிக்கம் ஏரம்பு ஐயா காலமானார்!

நவம்பர் 18, 2023

விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களது போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் போன்றவற்றில் தனது கலைப் பங்களிப்பினை வழங்கிய மாணிக்கம் ஏரம்பு இன்று (18) அதிகாலையில் வட்டுக் கோட்டை துணவி பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் கால மானார்.

23.04.1942 அன்று பிறந்த இவர் சிறு வயது தொடக்கம் நடிப் பில் ஆர்வம் கொண்டு பல மேடை நாடகங்களில் நடித்து வந் தார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களது தனி ஈழப் போராட்டம் வலுப்பெறுவதற்கு தன்னாலான கலைப் பங்களிப்பினை வழங்கி வந்தார்.

போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூத்துக்கள் உள்ளிட்ட நாடகங்களில் தனது பங்களிப்பை வழங்கி வந்ததுடன், அவை சார்ந்த கலைஞர்களுக்கு பல்வேறு வகையில் வழிகாட்டி வந்தார்.

அத்துடன், வெளிநாடுகளுக்கு சென்றும் தனது நாடகங்களை வழங்கி ரசிகர்களை கவர்ந்தார்.

இவர் வயது மூப்பு காரணமாக தனது 91வது வயதில் இன்றைய தினம் மறைந்தார். இலங்கையின் திரைத்துறைக்கு இவரது மறைவு பேரிழப்பாகும்.



# தமிழீழத் தேசிய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு விசுவமடு, கண்டாவளை! 16.11.2023












# மன்னார் மாவட்டம் அடம்பனில் தமிழீழ தேசிய மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு!

நவம்பர் 16, 2023

மன்னார் மாவட்டத்தில் வாழும் தமிழீழ தேசிய மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் ஆகியோரை ஒன்றிணைந்து, 15.11. 2023 காலை11 மணியளவில் மன்னார் அடம்பன் பிர தேசத்தில் 130 மாவீரர்களின் பெற்றோர், உறவுகளுடன் 150 மேற்பட்டோர் பங்குபற்றலுடன் மாவீரர்பெற்றோர் மதிப்பளிப்பு உணர்வு பூர்வமாக நடைபெற்றுள்ளது.

இம்மதிப்பளிப்பில் அருட்தந்தையர்கள், முன்னைநாள் போராளிகள் மற்றும் மாவீரர் பெற்றோர்கள் மக்களென பலர் பங்குபற்றியிருந்தனர்.











# வட்டுக்கோட்டையில் பொலிசாரின் சித்திரவதையில் சித்தங்கேணி இளைஞன் உயிரிழப்பு!

நவம்பர் 19, 2023

கைகள் இரண்டையும் பின்புறமாக கட்டி தூக்கி அடித்து , சித்திர வதை புரிந்ததுடன், பெற்றோல் ஊற்றிய பொலித்தீன் பையொன்றினால் முகத்தை மூடி சித்திரவதை புரிந்தனர் என, பொலிஸாரினால் சித்திரவதையால் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படும் இளைஞன் வைத்தியசாலையில் கூறிய காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.






யாழ்ப்பாணம் மல்லாகம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சித்தன்கேணி பகுதியை சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 25) எனும் இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் வட்டுக்கோட்டை பொலிசாரின் சித்திரவதையால் தான் இளைஞன் உயிரிழந்துள்ளார் என குற்றம் சட்டி வருகின்றனர்.

அந்நிலையில், உயிரிழந்த இளைஞன் வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது, தனக்கு நடந்த சித்திரவதை தொடர்பில் பேசிய காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

அதில் “என்னை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கினர். கைகள் இரண்டையும் பின்புறமாக கட்டி தூக்கி தாக்கினார்கள். துணி ஒன்றினால் முகத்தினை மூடி கட்டி தண்ணீர் ஊற்றி தாக்கினார்கள். பெற்றோல் ஊற்றிய பொலித்தீன் பை ஒன்றினை முகத்தில் போட்டு சித்திரவதை புரிந்தார்கள்.

பின்னர் எனக்கு குடிக்க சாராயம் தந்தார்கள். தாக்குதல்கள் சித்திரவதைகள் தொடர்பில் வெளியில் சொல்ல கூடாது என கடுமையாக என்னை மிரட்டினார்கள்.

பொலிஸாரின் தாக்குதலுக்கு பிறகு என்னால் சாப்பிட முடியவில்லை. என தெரிவிக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

அதேவேளை, உயிரிழந்த இளைஞனை கடந்த 08ஆம் திகதி விசாரணை ஒன்றுக்காக வட்டுக்கோட்டை பொலிஸார் அழைத்தனர். அவர் தனியே செல்ல பயத்தில் நண்பர் ஒருவரையும் கூட அழைத்து சென்று இருந்தார்.

பொலிஸ் நிலையம் சென்ற இருவரும் வீடு திரும்பாததால் மறுநாள் 09ஆம் திகதி பொலிஸ் நிலையம் சென்று விசாரித்த போது , பொலிஸார் உரிய முறையில் பதில் அளிக்கவில்லை.

பின்னர் 10ஆம் திகதியும் நாம் அவர்களை தேடி பொலிஸ் நிலையம் சென்ற போது உயிரிழந்த அலெக்ஸ்சின் கதறல் சத்தம் எமக்கு கேட்டது. நாம் அவரை காட்டுமாறு கோரிய போது பொலிஸார் எம்மை மிரட்டி அனுப்பினார்.



அதனை அடுத்து நாம் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்தோம்.

அந்நிலையில் 10ஆம் திகதி உயிரிழந்த அலெக்ஸ் மற்றும் அவருக்கு உதவியாக சென்ற அவரது நண்பர் மீது , வழக்கம்பரை பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற களவு சம்பவத்ததுடன் தொடர்புடையவர்கள் என குற்றம் சாட்டி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

நீதிமன்றில் அவர்களை முற்படுத்திய போது, அவர்கள் இருவரும் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலையே இருந்தனர் என உறவினர்கள் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் அவர்களை தடுத்து வைத்திருந்த போது, அலெக்ஸ்சின் உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டதால், சிறைச்சாலை நிர்வாகத்தால் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் மீது உறவினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே உயிழப்புக்கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர் படுகொலை இரவோடிரவாக வீதி மூடல்!

நவம்பர் 20, 2023

வட்டுக்கோட்டை பொன்னாலை வீதி இரவு முற்றாக மூடப்பட்டுள்ளது. அச்சங்காரணமாகவே வீதி மூடப்பட்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நிலையில் உயிரிழந்த நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன் நேற்றையதினம் (19) உயிரிழந்துள்ளார்.

அவர் உயிரிழக்க முன்னர் வழங்கிய மரண வாக்குமூலத்தில் பொலிஸார் செய்த பல சித்திரவதைகள் அம்பலமாகின.

இந்நிலையில் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு கருதி சுன்னாகம், மானிப்பாய், இளவாலை, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன் விசேட அதிரடிப் படையினரும் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது.

உயிரிழந்த இளைஞனுக்கு நீதி வழங்காமல் சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வெறுமனே இடமாற்றம் வழங்கிவிட்டு பொலிஸார் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது விசனத்தை ஏற்படுத்தியுள்ளது



சங்கத்தமிழ்

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது!

நவம்பர் 20, 2023




யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில் இன்றைய தினம் திங்கட்கிழமை பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இரும்பு பாதுகாப்பு வேலிகள் வீதியில் வைக்கப்பட்டும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் ஏனைய பொலிஸ் நிலை யத்தில் இருந்து மேலதிகமாக வரவழைக்கப்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளை ஞன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், மல்லாகம் நீதவான்



நீதிமன்றின் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலை யில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞனை பொலிஸார் கைது செய்து சித்திரவதைக்கு உட் படுத்தியதால் தான் இளைஞன் உயிரிழந்தார் என உற வினர்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில் , பொலிஸார் தன்னை எவ்வாறு சித்திரவதை செய்தனர் என கூறும் உயிரிழந்த இளைஞனின் காணொளி ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

இந்நிலையில் இளைஞனின் உறவினர்கள், நண்பர்கள் ஊர வர்கள் மற்றும் பொதுமக்களை திரட்டி பாரிய போராட்டம் ஒன் றினை பொலிஸ் நிலைய பகுதியில் முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படை யிலையே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமை யில் ஒரு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த விசா ரணைக்கு ஏதுவாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டள்ளனர்.

அத்துடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்



யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தினால் பிறிதாக ஒரு விசா ரணையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# கடுமையாக தாக்கப்பட்டதால் உயிரிழந்துள்ளார் உடற்கூற்று பரிசோதனையில் வெளியான தகவல்!

நவம்பர் 20, 2023



அலெக்ஸ் என்ற 26 வயதான நபர் 8ஆம் திகதி கைது செய்யப் பட்டு 10ஆம் திகதி மல்லாவி நீதிமன்றத்தினால் விளக்க மறியலில் வைக்கப் பட்டார். இதன்போது கடுமையாக தாக்கப் பட்ட அவர் நுரையீரல் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என சட்ட மருத்துவ அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் இன்று திங்கட்கிழமை மதியம் யாழ் போதன வைத்தியசாலையில், சட்டவைத்திய அதிகாரி உ. மயூரதனால் உடற்கூறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இறப்பு குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மல்லாகம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சித்தன்கேணி பகுதியை சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

உடற்கூற்று பரிசோதனையில் இயற்கை மரணமில்லை எனவும் சித்திரவதை மற்றும் அடி காயமே உயிரிழப்பிற்கு காரணம் என தெரியவந்துள்ள நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உப பரிசோதகர் (ஞஜ) உள்ளிட்ட நால்வரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள்





OFFICE OF THE JUDICIAL MEDICAL OFFICER
TEACHING HOSPITAL JAFFNA
CAUSE OF DEATH FORM

SR No. ...

Case No. ...

Name and Designation of inquirer ... A. A. ...

Magistrate ...

Name of the deceased Nagaras Alex

Age 26 yr. Sex Male

I, Dr. U. Mayorathan, Consultant JMO/Medical Officer Medico Legal, Teaching Hospital Jaffna do here by makes oath and state as follows,

The above named deceased was admitted to ward no ... Teaching Hospital Jaffna, on ... and expired on ...

The deceased was found to be dead when brought to hospital/ at the scene on 19-11-2023

I have held a postmortem examination on the body of the above named deceased person and I am of the opinion that the cause of death / probable cause of death is

Under Investigation

... Sample taken for Histopathology.

20/11/2023

Date

Signature & official stamp

# வட்டுக்கோட்டை இளைஞனின் சடலத்துடன் போராட்டம்!

நவம்பர் 21, 2023

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திர வதைக்கு உள்ளாகி உயிரிழந்த சித்தங்கேணியை சேர்ந்த நாகராசா அலெக்ஸின் சடலத்துடன் ஊரவர்கள் நீதி கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிரிழந்த இளைஞனின் இறுதி கிரியைகள் சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகன கிரியைக்காக மயானத்திற்கு எடுத்து செல்லும் போது, சடலத்துடன் ஊரவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிசாரின் சித்திரவதையால் அலெக்ஸ் இறந்து 48 மணி நேரம் கடந்தும் இது வரையில் எவரும் கைது செய்யப்பட வில்லை. பொலிஸ் விசாரணைக்குழு 48 மணி நேரத்திற்கு மௌகா விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர் என கூறப்படும் நிலையிலும் எவரும் கைது செய்யப்படாதது பொலிசாரின் விசாரணை மீது எமக்கு திருப்தி ஏற்படவில்லை என்பதுடன் அவர்கள் மீதான சந்தேகமும் வலுத்து வருகின்றன என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



## மட்டக்களப்பில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 19.11.2023





## மட்டு மண்முனை தென் மேற்கில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 20.11.2023





## யாழ். வலிவடக்கு கொல்லங்கலட்டியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 20.11.2023





## முல்லை. கொக்குத்தொடுவாயில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 21.11.2023









# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு 2023.11.20 மீண்டும் தொடக்கம்!








# தமிழீழத் தேசிய மாவீரர் வாரம் ஆரம்பம் யாழ். பல்கலைக்கழத்தில் தொடக்க நிகழ்வு!

நவம்பர் 21, 2023

மாவீரர் வாரம் இன்று செவ்வாய்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் முதல் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.








பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு, பல்கலைக்கழக வளாகத்தி லுள்ள மாவீரர் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதி பல்கலைக் கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற் றுள்ளதுடன் தூபியைச்சுற்றி சிவப்பு மஞ்சள் நிறத்திலான வர் ணக்கொடிகள் கட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக் களத்தில் ஈகம் செய்தவர்கள் நினைவாக, நவம்பர் 27 ஆம் திகதி, மாவீரர் நாள் வழிபாடுகள் நடைபெற்று வரும் நிலையில் நவம்பர் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் வணக்க நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.




# பச்சிலைப்பள்ளியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு!










# உருத்திரபுரத்தில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு!







# வட்டக்கச்சியில் தமிழீழத்தேசிய மாவீரர் நாள் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு!














# முல்லை. முள்ளியவளையில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 21.11.2023








# வடமராட்சியில் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாலயம்!

நவம்பர் 21, 2023

வடமராட்சி - நெல்லியடி மாலி சந்தி பிள்ளையார் கோவில் முன்பாக, மாவீரர் நினைவாலயம் பொதுமக்கள் வணக்கத்துக்காக நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு வருகிறது.





# யாழ். நீதிமன்றில் முன்னிலையாகவுள்ள 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள்!

நவம்பர் 22, 2023

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிசாரின் சித்திவரதையால் உயிரிழந்த இளைஞனின் வழக்கு விசாரணைகளில் இளைஞனின் உறவினர்களின் சார்பில் 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இலவசமாக முன்னிலையாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இளைஞனின் படுகொலை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இளைஞனின் குடும்பத்தினர் சார்பில் , பாதிக்கப்பட்டவர்கள் நலன்காக்கும் நோக்குடன் மன்றில் முன்னிலையாகவுள்ளனர்.

இது தொடர்பில் மூத்த சட்டத்தரணி ந ஸ்ரீகாந்தா தெரிவிக்கையில்,

இளைஞனின் மரணம் கொலை என்பது தெட்ட தெளிவாக தெரிகிறது. இந்த வழக்கு விசாரணைகளின் போது இளைஞனின் குடும்பத்தினர் சார்பில் அனைத்து சட்டத்தரணிகளை முனனிலையாக வேண்டும். குறிப்பாக குற்றவியல் வழக்குகளில் அனுபவம் வாய்ந்தவர்கள் முன்னிலையாக வேண்டும்.

பொலிஸ் காவலில் மரணம் என்பது சட்டத்தின் ஆட்சிக்கே விடுக்கப்பட்ட சவால். அதனை நாம் எதிர்கொள்வோம் இந்த கொலைக்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து நீதிமன்றில் முன்னிலையாவோம் என தெரிவித்தார்.

அதேவேளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும் போது, உயிரிழந்த இளைஞனின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளமையும் ,




உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞனும் மன்றில் தோன்றி தனது வாக்குமூலத்தை பதிவு செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிளி. பரந்தனில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 22.11.2023





# தமிழீழத்தில் மாவீரர்களின் பெயர்கள் திரை நீக்கம்!

நவம்பர் 20, 2023

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள், மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் நாளை செவ்வாய்க்கிழமை (21) ஆரம்பமாகியது.

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாலை 6 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.



1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்கபெற முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கிய நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

**மானிட விடுதலைக்கு உயிர் தந்தார் யாரோ அவர் இனம், மதம், மொழி கடந்து நேற்றுப் போல் இன்றும் நாளையும் என்றென்றும் எதிலும் உயிர் வாழ்வர்**

***"கல்லைறைகள் விடுதலைக் கருவறைகள் - நாங்கள் கைகள் தொழும் தெய்வங்களின் அரியணைகள்"***
































## கிளி. உதயநகரில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 22.11.2023





## முல்லை புதுக்குடியிருப்பு குரவில் பகுதியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 22.11.2023





## மாங்குளம் பனிக்கன்குளப் பகுதியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 23.11.2023





## நல்லூர் பிரதேசத்தில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 23.11.2023





# தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2023

## அம்பாறை தம்பிலுவில் பகுதியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 23.11.2023





## மட்டு. வாகரையில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 23.11.2023





## முல்லைத்தீவு தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி ஆக்கிரமிப்புப் படையினரால் தகர்ப்பு – 23.11.2023






## கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லப்பகுதியில் சிவப்பு மஞ்சள் கொடிகளை அறுத்தெறிந்த சிங்கள கைக்கூலிகள் – 23.11.2023






## மட்டு. தரவை மாவீரர் துயிலுமில்லத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவு தூபியை சிறீலங்கா காவல்துறை உடைப்பு – 23.11.2023






# முல்லை ஒலுமடுப் பகுதியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 23.11.2023





# 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த பாதுகாப்பு தற்போது இல்லை!

## முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

நவம்பர் 23, 2023

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மீனவர்களுக்கு இருந்த பாதுகாப்பு தற்போது இல்லை என முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

சர்வதேச மீனவர் தினத்தினை முன்னிட்டு சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற துவிச்சக்கரவண்டி விழிப்புணர்வு ஊர்வலத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது மீனவர்கள் கொக்கிளாய் தொடக்கம் பேய்ப்பாறைப்பிட்டி வரையான மீனவர்கள் கடலில் நல்ல எழுச்சியோடு மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்தனர். தற்போது மிக கடுமையான முறையில் தென் இலங்கை சட்டவிரோத தொழில் செய்யும் மீனவர்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் .

வடக்கு, கிழக்கு மாகாணத்தினை. எடுத்துக்கொண்டால் வவுனியா தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களும் கடல் பகுதியிலே இருக்கின்றன. வடக்கு, கிழக்கை மையமாக வைத்து கடல் வளங்களை சுரண்டி தென்னிலங்கை மீனவர்கள், சட்டவிரோத தொழில் செய்வதற்கு ஊக்குவிப்பு கொடுத்து அந்நிய நாட்டு மீன்பிடி படகுகள் வந்து இங்கே அட்டகாசமாக தங்களுடைய தொழில்களை செய்வதும், பிடிக்கப்படும் மீன்கள் அல்லது இறால்கள், எல்லாவற்றையும் திரும்பவும், எங்களுக்கு விற்பனை செய்வதும், சர்வதேச நாடுகளில் இருந்து மீனை இங்கே கொள்வனவு செய்வதும், என்ன கேவலமான ஒரு செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த கடல் எங்களுடைய இளைஞர்களின் பாதுகாப்பில் இருந்தது. அந்த நேரம் எவ்வளவு யுத்தம் நடந்து கொண்டிருந்தாலும், எங்களுடைய மீனவர்களுக்கான ஒரு பாதுகாப்பு இங்கே இருந்தது. அந்த பாதுகாப்பை வைத்துக் கொண்டு எங்களுடைய மீனவர்கள் சுதந்திரமாக கடலிலே மீன் பிடித்து வந்தார்கள். ஆழக்கடலெங்கும், மீன்பிடியை நடைமுறைக்கு ஏற்ப தொழிலை செய்து வந்தார்கள். எந்தவித சட்டவிரோத தொழில்களும் இல்லை. அந்நிய ஆதிக்கமும் இல்லை.

2009ஆம் ஆண்டுக்கு பின்னர் எங்களுடையவர்களை மௌனிக்க செய்துவிட்டு அட்டகாசப்படுத்துகின்றார்கள், சட்ட விரோதிகள். அவர்களுக்கு துணையாக இலங்கை அரசாங்கம் துணையாக செயல்படுகின்றது .இதனால் எங்களுடைய மீனவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

அடி மடி இழுவை தொழில், சுருக்குவலை மூலம் மீன்பிடித்தல், வெடி பயன்பாட்டு முறை மூலம் மீன் பிடித்தல், வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல் என பல வித ரகங்களில் மீன் பிடிக்கின்றனர் சட்டவிரோத தொழில்களை செய்து கொண்டிருக்கும்



நிலை மாற்றப்பட வேண்டும். கடல் சூழலியலை சிதைப்பதனை கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது தான் இந்த மீனவர்களுடைய கோரிக்கை.

இந்த மீன்பிடி தொழிலை சரியாக செய்வதற்கு , சரியான முறையிலே நாங்கள் வாழ்வதற்கு, எங்களுடைய மீனவ குடும்பங்கள், வாழ்வாதார நிலைமைகளை, சீர்படுத்தவோ, எங்களுடைய இளைஞர் எழுச்சியாக, தங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இந்த வாய்ப்பை இலங்கை அரசாங்கம். ஏற்படுத்தி தரவேண்டும்.

அரசாங்கமானது சீனாவுக்கும், இந்தியாவுக்கும், வேறு நாடுகளுக்கும், கடல்களை விற்றுக்கொண்டு, எங்களுடைய மீனவர்களை பட்டினி போடும் செயற்பாட்டை நிச்சயமாக நிறுத்தப்பட வேண்டும் விட்டால், எங்களுடையவர்கள் கொதித்து எழும் போது நீங்கள் தாக்கு பிடிக்க மாட்டீர்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என மேலும் தெரிவித்தார்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது வீதியின் ஊடாக செல்லும் சாத்தியக்கூறுகள்!

## முல்லை மாவட்ட சிறப்பு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா

நவம்பர் 24, 2023

கொக்குதொடுவாய் மனித புதைகுழியானது வீதியின் ஊடாகவும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என முல்லைத்தீவு மாவட்ட சிறப்பு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஐந்தாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமை (24) இடம்பெற்ற அகழ்வு பணியானது நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஐந்தாவது நாளாக தொடரும் கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின்போது நான்கு மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பேனா மாக்கர் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்கானர் மூலம் இந்த புதைகுழியானது எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது என பரிசோதனை செய்யப்பட்டது இதன் முடிவுகள் நாளையதினம் அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்றதன் பிற்பாடே கிடைக்கப்பெறும்.

இவ் புதைகுழியானது வீதியின் ஊடாகவும் மற்றைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

எனினும் நாளைய பரிசோதனையின் பின்னரே இறுதி முடிவுகள் என்னால் உறுதியாக கூறமுடியும் என மேலும் தெரிவித்தார்.






# சிறீலங்கா காவல் துறைக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

நவம்பர் 24, 2023

மட்டக்களப்பு தாண்டியடி மற்றும் தரவை மாவீர் துயிலும் இல்லங்களில் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர் தரணி ஆகியவர்களை பொலிசார் வியாழக்கிழமை (23) சேட்டை பிடித்து துப்பரவு பணியை செய்யவிடாது அச்சுறத்தல் செய்த பொலிசாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 26ம் திகதி மாவீரர் தினத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஆதரவுடன் மக்கள் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தாண்டியடி மாவீர் துயிலும் இல்லத் தினை துப்பரவு பணியில்ஈடுபட்டுக் சம்பவதினமான வியாழக் கிழமை (23) கொண்டிருந்தனர் அதன்போது அங்கு சென்ற வவுணதீவு பொலிசார் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண் டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாள் த.சுரேஸ் துப்பரவு பணியை மேற்கொள்ளவிடாது அச்சுறுத் தியுள்ளனர்.

இதனால் அவர்கள் தொடர்ந்து துப்பரவு பணியை செய்ய முடியாது அங்கிருந்து வெளியேறினர் அதேவேளை வாழைச் சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தரவை மாவீர் துயிலும் இல்லத் தில் பொது மக்கள் துப்பரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற வாழைச்சேனை பொலிசார் அவர்களை அச்சுறுத்தியதுடன் தரணி என்ற இளைஞனின் சேட்டை பிடித்து இழுத்து கையடக்க தொலைபேசியை பறித்து அச்சுறுத்தி யுள்ளனர்.

இந்த இரு பொலிஸ் நிலைய பொலிசாரின் அச்சுறுத்தலுக்கு எதிராக நீதி கோரி மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக் குழவிடம் பொலிசாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளான இருவரும் முறைப்பாடு செய்ததுள்ளனர்.



## பாரதிபுரம் பகுதியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு - 24.11.2023







## முரசுமோட்டைப் பகுதியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு - 24.11.2023







## யாழ். பருத்தித்துறை நகரில் மாவீரர் நினைவாலயம் திறந்துவைக்கப்பட்டது -25.11.2023







## தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2023

# முல்லைத்தீவில் மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பாக நீதிமன்ற தடை உத்தரவு!

நவம்பர் 25, 2023

முல்லைத்தீவு தலைமை சிறீலங்கா பொலிஸ் பொறுப்பதிகாரியினால் வழக்கு இல. AR/1400/23 கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீதான கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றைய நாள் (25) மாவீரர் தினத்தை நினைவேந்துவது தொடர்பாக சிலருக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தால் தடை உத்தரவு வழங் கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவீரர் தின நினைவேந்தலில் ஈடுபட முல்லைத்தீவில் ஆறு பேர் அடங்கிய குழுவினருக்கு நீதிமன்றினால் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றில் இன்றைய நாள் முன்னிலையாகி, விடுதலைப்புலிகள் அமைப்பினை நிறுவிய வேலுப்பிள்ளை பிரபாகரனால் 1989 ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 27ஆம் திகதி அந்த அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைவுகூருவதற்கு ஒவ்வொரு ஆண்டும் 11ஆம் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையான நாட்கள் மாவீரர் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அந்நாட்களில் நினைவேந்தல்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

முல்லைத்தீவு, மணலாறு ஒதுக்கக்காட்டு பகுதியினுள் முதல் மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் இலட்சினையுடன் இந்த நினைவேந்தல் இடம்பெற வேண்டும் என எழுத்து மூலம் கட்டளையிடப்பட்டிருந்தது. அது புலனாய்வுப் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம், இம்முறையும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் அணியின் உறுப்பினர்களால் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உயிரிழந்த உறுப்பினர்களை நினைவுகூர மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவு தகவல் வழங்கியுள்ளது.

எனவே, மாவீரர் நினைவேந்தல் என தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப்புலி அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூரும் நிகழ்வுக்கு ஏராளமானவர்களை ஒன்றிணைத்து, அனுமதி பெறாத ஊர்வலம், பேரணி, கூட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் அமைப்பின் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வினை நடாத்துதல், யுத்த நிலை மறந்து அமைதியாக வாழும் பொது மக்கள் மத்தியில் மீளவும் யுத்தப் போக்கினை (LD601) உருவாக்கும். இனங்களுக்குக்கிடையே அமைதி குலைவு ஏற்படும் என கூறியிருந்தார்.

அவரை தொடர்ந்து, CA(WRIT) 737/23 என்ற மேல் முறையீட்டு நீதிமன்ற வழக்கிலே இன்றைய நாள் 1, 4, 5ஆம் எதிர் மனுதாரர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை பிரிவு 106இன் பிரகாரமும், மேலும் வலுவில் உள்ள சட்டங்களின் பிரகாரமும் நடவடிக்கை எடுப்பதற்கு முதலாம் எதிர் மனுதாரரான பொலிஸ்மா அதிபரும் 04ஆம் எதிர் மனுதாரரான பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பணிப்பாளரும் (TID) சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரமும், நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்து, மாவீரர் நினைவேந்தல் என்ற சட்ட விரோத நிகழ்வுக்காக சட்ட ரீதியாக கடமை புரிபவர்களுக்கு தடைகள், பிரச்சினைகள் மற்றும் பாதிப்புகள் ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு, இதனால் மனித உயிர்கள், பொது சுகாதார பாதிப்பு ஏற்படலாம். தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் அமைதியின்மை அல்லது முறுகல் ஏற்படும். இதனை உடனே தடுப்பது அவசியம் எனவும் தெரிவித்த சட்டத்தரணி, கீழ் பெயர் குறிப்பிடப்படுவர்களுக்கு தடை உத்தரவு வழங்குமாறு கோரியதன் அடிப்படையில் நீதிமன்றம் பின்வரும் கட்டளையை பிறப்பித்திருக்கிறது.





நீதிமன்ற கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கீழே பெயர் குறிப்பிடப்படும் நபர்களான நீங்கள் 2023.11.24 ஆம் திகதி இரவு 09.00 மணி தொடக்கம் 2023.11.27ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு மாவீரர் நினைவேந்தல் எனும் பெயரில் நினைவேந்தலை நடாத்துவதற்கும், விடுதலைப்புலிகளின் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதனால் அதன் உறுப்பினர்களாக இருந்து உயிர் இழந்தவர்களை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நினைவு கூருவதற்கும், விடுதலைப்புலிகளின் சட்ட ரீதியற்ற குறிக்கோள்களுக்கு வலு சேர்க்கும் வகையில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூருவதற்கும், விடுதலைப்புலிகள் அமைப்பின் குறிக்கோள்களாக சொல்லப்படும் சட்டத்தால் தடை செய்யப்பட்ட குறிக்கோள்களுக்கு வலு சேர்க்கும் வகையில் விடுதலைப்புலிகளின் சின்னங்கள், புலி சீருடைகள், புலி சீருடையுடன் கூடிய படங்கள் புலிக் கொடிகள், வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்கள் மற்றும் விடுதலைப்புலிகள் தொடர்பான பாடல்கள் மற்றும் விடுதலைப்புலி உறுப்பினர்களாக வெளிப்படுத்தும் பாடல்கள் (சாதாரண சீருடை இல்லாத இராணுவ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் சீருடையுடனான படங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தி உயிரிழந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கு அல்லது விடுதலைப்புலிகள் அமைப்பின் தடை செய்யப்பட்ட குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கும் அல்லது வலு சேர்க்கும் வகையில் பிரச்சாரங்கள் செய்வதற்கோ கூட்டங்கள் நடாத்துவதற்கோ அல்லது உரையாற்றுவதற்கோ, ஊர்வலங்கள் பேரணிகள் நடாத்துவதற்கோ மற்றும் பொது அமைதிக்கும், பொது மக்களின் பொது போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் பேரணிகள், கூட்டங்கள் தொடர்பிலான சட்டங்களை மீறும் வகையில் மேற்குறித்த அடிப்படையில் கூட்டங்கள், நினைவேந்தல், பேரணிகள் நடாத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டு குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106(1)3)ஆம் பிரிவின் கீழ் கட்டளையாக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டு, தடை விதிக்கப்படுவோர் பற்றிய விபரங்களை பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

01. முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வீரசிங்கம் மற்றும் அவருடனான குழுவினர்

02. தமிழ் தேசிய கூட்டமைப்பின் இணை செயற்பாட்டாளர் முத்துக்குமார் வசந்தம் புதுமாத்தளன், முல்லைத்தீவு மற்றும் அவருடனான குழுவினர்

03. முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கந்தையா உதயகுமார் மற்றும் அவருடனான குழுவினர்

04. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அவருடனான குழுவினர்

05. சமுதாய செயற்பாட்டாளர் பீட்டர் இளஞ்செழியன் மணல் குடியிருப்பு முல்லைத்தீவு மற்றும் அவருடனான குழுக்கள்

06. முல்லைத்தீவு தமிழ் சங்க தலைவர் கந்தசாமி கௌரிராசா மற்றும் அவருடனான குழுவினர்.

எனினும், உயிரிழந்தவர்களை விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்ற ரீதியில் அல்லாது ஆன்மாக்கள் என்ற ரீதியில் மாத்திரம் சட்டத்தினை மீறாத வகையிலும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் பொது அமைதிக்கும் பொது போக்குவரத்துக்கும் பாதிப்பு இல்லாமல் இக்காலப்பகுதியில் நினைவு கூருவதை இக்கட்டளை தடை செய்யாது என விளம்பி கட்டளையாக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டிருந்தது.

# யாழ். கைதடியில் தமிழீழத்தேசிய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு – 24.11.2023







# மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு நினைவேந்தல் வலயங்கள் ஒழுங்கமைப்பு!

நவம்பர் 25, 2023

மாவீரர்களது பெயர்களும் பொறிக்கப்பட்டு, அந்தந்த இடங்களில் நினைவேந்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.




இக்குழுவினர் நேற்று (24) கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் கூடியதையடுத்து, அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கனகபுரம் மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் உப தலைவர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவிக்கையில்,

கொள்ள முடியாத அளவுக்கு மக்கள் திரழ் அதிகமாக உள்ளது. அதை ஒழுங்குபடுத்தும் முகமாக, 2009ஆம் ஆண்டுக்கு முன்னரை போல மாவீரர் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றுவிக்க வேண்டும் என்ற எமது பணிக்குழுவின் தீர்மானத்துக்கமைய, இம்முறை துயிலும் இல்ல வளாக 2007ஆம் ஆண்டு வரையிலான மாவீரர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டு ‘அ’ தொடக்கம் ‘ஈ’ வரையான வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்த கல்லறைகள் மற்றும் நினைவுக் கற்கள் என்பவற்றின் பெயர் விபரங்கள் குறித்த வலயங்களில் பதியப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆகவே, அந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் 2 மணித்தியாலங்களுக்கு முன்பே வருகை தந்து, தங்களது பிள்ளைகளின் பெயர் எந்த வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கிறதோ, அந்த வலயத்துக்குள் சென்று சுடரேற்றுவதற்கு தயாராகுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

இந்நிலையில், 2007, 2008, 2009 ஆண்டுகள் வரையும் மாவீரர்களாக இருந்தவர்களது பெயர் விபரங்கள் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை. அவ்விபரங்கள் தலைமைச் செயலகத்தினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்போது அந்த பெயர் விபரங்களும் எதிர்வரும் காலங்களில் ஒழுங்குபடுத்தப்படும்.

இவ்வாண்டு அவ்வாறே பெயர் விபரங்களற்ற மாவீரர்களுக்காக “உ”வலயம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வலயத்தில் பெயர் குறிப்பிடப்படாத மாவீரர்களுக்கான சுடர்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அதைத் தவிர, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் தவிர்ந்த ஏனைய துயிலும் இல்லங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் விளக்கேற்றுவதற்காக ‘ஊ’ வலயம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த வலயங்களின் அடிப்படையில், உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் நேரங்



இவற்றையும் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த வருடம் போன்று இவ்வருடமும் ஐஸ்க்றீம் வியாபாரம் உள்ளிட்ட சிறு வியாபாரங்கள், வர்த்தக நடவடிக்கைகள் துயிலும் இல்லத்திலிருந்து 1 கிலோமீட்டர் தூரம் வரை தடை செய்யப்பட்டுள்ளது.

அன்றைய நாளை புனிதப்படுத்தும் வகையில் வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களை பூட்டி ஒத்தழைக்க வேண்டும்.

மதுபான விற்பனை நிலையங்களை பூட்டி மாவீரர் தின நினைவேந்தலுக்கு ஒத்துழைக்க நிலைய உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், இறைச்சிக் கடைகள் உள்ளிட்டவற்றையும் பூட்டி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், துயிலுமில்ல வளாகத்தின் புனிதத்துவத்தை பேணும் வகையில் அனைவரும் கலாசார உடைகளையே அணிய வேண்டும்.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும்போது செல்ஃபி எடுப்பது உள்ளிட்ட செயற்பாடுகளை தவிர்த்து, நினைவேந்தலுக்கு ஒத்துழைப்பு வழங்க இளைஞர்கள் முன்வர வேண்டும்.



கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் மாவீரர் தின நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை 27ஆம் திகதி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளின் போது, மாவீரர் துயிலும் இல்ல வளாகத்துக்குள் மிகுந்த சன நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

சுடர்களை ஏற்றுவதில் மாவீரர்களின் குடும்பங்கள் பங்கு

காலத்தோடு வருகை தந்து, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்கு அமைவாக அஞ்சலி செலுத்த முடியும்.

மேலும், 27ஆம் திகதி பிற்பகல் 3 மணியுடன் துயிலும் இல்லத்தின் பிரதான வீதியில் போக்குவரத்து தடை விதிக்கப்பட்டு, மாற்று வழியை பிரயோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்று வழியை பயன்படுத்த சாரதிகள் ஒத்துழைக்க வேண்டும்.

அதேவேளை, துயிலும் இல்ல வளாகத்துக்கு இரு பகுதிகளிலும் வாகனங்களை நிறுத்த தரிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், டிப்போ சந்தியிலிருந்து துயிலும் இல்லத்துக்கான குறுந்தூர சேவைகள், தனியார் பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய குறித்த சேவையினையும் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

வெளியிடங்களில் இருந்து வருகை தரும் மக்கள் டிப்போ சந்தியில் அமைந்துள்ள பசுமை பூங்காவில் ஓய்வெடுத்துவிட்டு, பின்னர் குறித்த பேருந்து சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

## வாகரை மாவீரர் துயிலுமில்லம் சிறீலங்கா அரச படைகளாலும் அவர்களோடு சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவாலும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது – 24.11.2023






# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனுக்கு அணிச்சல் (கேக்) வெட்டி கொண்டாட்டம்!

நவம்பர் 26, 2023

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 69 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, இன்றைய நாள் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் அணிச்சல் (கேக்) வெட்டி கொண்டாடப்பட்டுள்ளது.





வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில், வல்வெட்டித்துறை ஆலடி சந்திக்கு அருகில் உள்ள புலிகளின் தலைவரின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணியின் முன்னால் அணிச்சல் (கேக்) வெட்டப்பட்டது.







# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனுக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் பிறந்தநாள் விழா!





நவம்பர் 26, 2023

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 69 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, இன்றைய நாள் ஞாயிற்றுக் கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் அணிச்சல் (கேக்) வெட்டி கொண்டாடப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் பிரத்தியோக ஏற்பாட்டில் தேசியத் தலைவரின் 69வது பிறந்தநாள் மாணவர்களால் (அணிச்சால்) கேக் வெட்டி கொண்டாடப்பட்டுள்ளது.



# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இதுவரை 35 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்பு!

நவம்பர் 26, 2023

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஆறாவது நாளாக நேற்று சனிக்கிழமை (25) இடம்பெற்று நிறைவடைந்திருந்தது.

ஆறாவது நாளாக தொடர்ந்த கொக்குதொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வு நேற்று நிறைவடையும் போது ஐந்து மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினத்துடன் 35 எலும்புகூட்டு தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளதோடு கையில் அணியப்படும் இலக்கத்தகடு ஒன்றும் , மணிக்கூட்டு ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்கானர் இயந்திரம் மூலம் குறித்த புதைகுழியானது எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது என கடந்த இரண்டு தினங்கள் பரிசோதனை செய்யப்பட்டிருந்தது. இதன் முடிவுகள் நேற்றைய நாள் அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்றதன் பிற்பாடே கிடைக்கப்பெறும் என கூறப்பட்டிருந்தது. ஆனால் அதன் தெளிவான முடிவுகளை நாளை திங்கட்கிழமை (27) பெற முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ் புதைகுழியானது வீதியின் ஊடாகவும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ கடந்த தினங்களில் ஊடகங்களுக்கு கருத்து கருத்து தெரிவித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை (26) அகழ்வு பணி இடம்பெறாது விடுமுறை வழங்கப்பட்டு நாளையதினம் ஏழாவது நாளாக அகழ்வு பணி இடம்பெற உள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் (15) வரை அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தது. இவ் அகழ்வு பணியில் 17 எலும்புக் கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையிலும், துப்பாக்கி சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்க தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்த நிலையில் குறித்த அகழ்வு பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் (20.11.2023) அன்று மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனுக்கு நல்லூரில் பிறந்த நாள் கொண்டாட்டம்!

நவம்பர் 26, 2023

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 69 வது பிறந்தநாள் நல்லூரில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மண்டபத்திற்கு முன்பாக இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது 69 மரக் கன்றுகள் சிறுவர்களுக்கு சிறுவர்களாலேயே வழங்கி வைக்கப்பட்டதுடன் இனிப்பு பண்டங்களும் சிறுவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் புகைக்கூண்டுகளும் வான் நோக்கி பறக்கவிடப்பட்டது.








# தமிழீழத்தில் மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர் நாளுக்கான தயார்ப்படுத்தல் நிறைவு!

நவம்பர் 26, 2023



தமிழீழத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் காணப்படுகின்ற துயிலுமில்லங்களில் மாவீரர்களை நினைவேந்துவதற்கான தயார்ப்படுத்தல்கள் நிறைவடைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.




அதற்கு அமைவாக, யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் துப்புரவுப் பணிகள் நிறைவடைந்து நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

இதனைவிடவும், நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக, மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு அங்கு அஞ்சலி நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக கடந்த 21ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், வடமராட்சி - நெல்லியடி மாலி சந்தி பிள்ளையார் கோவில் முன்பாக, மாவீரர் நினைவாலயம் பொதுமக்கள் அஞ்சலிக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு பெருமளவானவர்கள் மாலையில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மேலும், யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள நினைவுத் தூபியில் மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இறுதி நாள் அஞ்சலிக்கான விசேட ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், தேராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு கடற்கரை, இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

இதேநேரம், மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சன், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்திலும், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனைவிடவும், கிழக்கு பல்லைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தினால் விசேட நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருகோணமலை ஆலங்குளத்தில் மாவீரர் நினைவேந்தலைச் செய்வதற்கு நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# கனடிய நாணயக் குற்றிகளில் மன்னர் மூன்றாம் சார்ஸின் உருவப்படம்!

நவம்பர் 15, 2023

கனடாவில் பயன்பாட்டில் உள்ள நாணயக் குற்றிகளில் பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ஸின் உருவப்படம் பொறிக்கப்பட உள்ளது.

அனைத்து நாணய குற்றிகளிலும் விரைவில் இந்த உருவப் படம் பொறிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் சார்ள்ஸ் தனது 75 ஆம் பிறந்த நாளை கொண்டாடும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மறைந்த மகாராணி இரண்டாம் எலிசபத்தின் உருவப்படம் நாணயத்தாள்களிலும் நாணய குற்றிகளிலும் பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவை தொடர்ந்து மன்னராக பதவி ஏற்றுகொண்ட மூன்றாம் சார்ஸ் மன்னரின் உருவப்படம் இனிவரும் காலங்களில் கனடிய நாணயத்தாள் மற்றும் நாணய குற்றிகளில் பொறிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




இந்த மாத இறுதிக்குள் புதிய நாணயக் குற்றிகள் அச்சிடப்பட உள்ளதாகவும் டிசம்பர் மாதம் இந்த நாணய குற்றிகள் புழக்கத்தில் விடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



கிரீடம் இல்லாத மன்னரின் உருவப் படம் ஒன்று நணயப் குற்றிகளில் பொறிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 350 கலைஞர்கள் இந்த நாணயக் குற்றிகளில் பொறிப்பதற்கான உருவப்படத்தை வரைந்து உள்ளனர்.

இந்த வடிவமைப்புகளை பிரித்தானிய பங்கிங்ஹாம் மாளிகைக்கு அனுப்பி அதில் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில், கனடாவின் பிரபல  ஸ்டீவன் ராஷ்டியின் வடிவமைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் அகதிக்கோரிக்கையாளருக்கு ஏற்பட்ட பரிதாப நிலை!

நவம்பர் 18, 2023

கனடாவில் ஒன்ராரியோவின் பிரம்டன் பகுதியில் கூடாரம் ஒன்றிற்கு வெளியே தங்கி இருந்த அகதி கோரிக்கையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



இந்த மரணம் ஓர் எச்சரிக்கை சமிக்ஞை என பிரம்டன் நகர முதல்வர் பெட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கூடுதல் எண்ணிக்கையில் அகதி கோரிக்கையாளர்கள் தஞ்சமடையும் நகர சபைகளுக்கு கூடுதல் உதவி வழுங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அகதி கோரிக்கையாளரின் மரணம் தமது இதயத்தை கனக்கச் செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 40 வயது மதிக்கத் தக்க நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணங்கள் எதுவும் இது வரையில் கண்டறியப்படவில்லை.

உயிரிழந்தவரின் ஆள் அடையாள விபரங்களும் வெளியிடப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகரித்து செல்லும் அகதி கோரிக்கையாளர்களுக்கு அடைக்கலம் வழங்குவதில் நகரசபைகள் சிரமங்களை எதிர்நோக்கி



வருவதாக பிறவுண் தெரிவித்துள்ளார்.

அதிகரித்து செல்லும் அகதி கோரிக்கையாளர் பிரச்சினை குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கனடாவில் யானைத் தந்தங்கள் மற்றும் காண்டாமிருகக் கொம்புகள் இறக்குமதிக்கு வரும் தடை!

நவம்பர் 21, 2023

கனடாவில் யானைத் தந்தங்கள் மற்றும் காண்டாமிருகக் கொம்புகள் ஆகியனவற்றை இறக்குமதி செய்ய தடை விதிக்கப் பட்டுள்ளது.



உலகம் முழுவதிலும் அழிவினை சந்தித்து வரும் யானைகள் மற்றும் காண்டாமிருகங்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

காண்டாமிருகங்களின் கொம்புகள் மற்றும் யானைகளின் தந்தங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் இந்த தடை அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

யானைத் தந்தங்கள் மற்றும் காண்டாமிருகக்கொம்புகள் நாட்டுக்குள் இறக்குமதி செய்வதற்கு விசேட அனுமதி அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்க யானைகளும், காண்டாமிருகங்களும் அழிவடைந்து வருவதாகவும் உயிர்ப் பல்வகைமை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்த தலைமுறையினருக்கு யானைகள் காண்டாமிருகங்கள் என்பனவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கனடாவின் சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் ஸ்டீபன் குயில்பியெல்ட் அறிவித்துள்ளார்.



## தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2023

# தமிழீழத் தேசிய கொடி நாள் மரணிக்காத தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் ஆகியவற்றிற்கான போராட்டம்!

## ஒன்ராரியோ பிரம்டன் மாநகர மேஜர் பட்ரிக் பிரவுண்

நவம்பர் 21, 2023

தமிழீழத்தேசிய கொடி நாள், மரணிக்காத தமிழர்களின் உணர்வு சுயநிர்ணய உரிமை சுதந்திரம் ஆகியவற்றிற்கான போராட்டம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது என கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.



தமிழீழத்தேசிய கொடி நாளைக் குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழீழத்தேசிய கொடி நாள் (21.11.2023) அறிக்கை,

தமிழீழத்தேசிய கொடி நாள் சுதந்திரம் மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றிற்கான தொடரும் போராட்டம் பாரம்பரியம்



மீளுந்தன்மை போன்றவற்றிற்கான குறியீடாக காணப்படுகின்றது.

33 வருடாந்த தமிழீழத் தேசிய கொடி நாள் 2023 21 ம் திகதி சர்வதேசரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்றது தமிழர்களின் சின்னமான கொடியின் முக்கியத்துவம் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையிலும் உலகளாவியரீதியிலும் தமிழர்களின் வரலாறு கலாச்சாரம் நிரந்தரமான உணர்வுகள் என்பவற்றை கௌரவிப்பதற்கான புனிதமான நாளை இந்த நாள் குறிக்கின்றது.

நீதி மனித உரிமைகள் சுதந்திரத்திற்காக முன்னோர்களின் அளப்பரிய தியாகத்தினை நினைவுபடுத்தும் நாளாகவும் தமிழீழக்கொடி நாள் காணப்படுகின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேசமயம் கனடா தமிழர்கள் தாங்கள் தத்தெடுத்த நாட்டிற்கு மிகப்பெரிய பங்களிப்பை செய்துள்ளதுடன், சமூகங்களை வளப்படுத்தி எதிர்கால சமூகத்தினை பொறுப்புணர்வுள்ள சமூகமாக வாழ்வதற்கு வழிகாட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் சட்ட கட்டமைப்புகளிற்குள் தமிழீழத் தேசிய கொடி நாளை கொண்டாடுவது அனைவரையும் உள்வாங்குவது பல்வேறுபட்ட கலாச்சார அடையாளங்களை அங்கீகரிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது.




இந்த தருணம் சுதேசிய மக்களின் உரிமைகளை அங்கீகரித்தல் மனித உரிமைகளிற்காக பரப்புரை செய்தல் இனஐக்கியத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை குறிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

அதேவேளை தேசிய கொடிகளிற்கு அருகில் ஏற்றப்படும் தமிழீழத் தேசிய கொடி ஐக்கியம் சர்வதேச அளவில் மரணிக்காத தமிழ் மக்களின் உணர்வு என்பவற்றை வெளிப்படுத்துகின்றது எனவும் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா – கனடா எல்லையில் வெடிப்பு சம்பவம்!

நவம்பர் 06, 2023

அமெரிக்கா – கனடா எல்லையின் நயாகரா நீர்வீழ்ச்சி பகுதியில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவமானது, பயங்கரவாதத்துடன் தொடர்பு கிடையாது என நியூயோர்க் ஆளுநர் கத்தி ஹோச்சுல் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த வெடிப்பு சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச வெளியிட்டுள்ளன.

நயாகரா நீர்வீழ்ச்சியின் ரெயின்போ பாலத்தில் வாகனமொன்றில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த வெடிப்பு சம்பவத்தை அடுத்து, குறித்த எல்லை பகுதியின்



அனைத்து பகுதிகளும் மூடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த வெடிப்பு சம்பவத்திற்கும், பயங்கரவாத நடவடிக்கைக



ளுக்கும் இடையில் தொடர்புள்ளமைக்கான அறிகுறிகள் எதுவும் கிடையாது என நியூயோர்க் ஆளுநர் கத்தி ஹோச்சுல் தெரிவித்துள்ளார்.

# கனடாவின் கியூபெக்கில் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ள கல்வி, சுகாதாரத்துறை ஊழியர்கள்!

நவம்பர் 22, 2023

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் அரசாங்க ஊழியர்கள்



பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்றைய தினமும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சில தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சங்கங்கள் இன்று அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளன. அரசாங்கம், 10.3 வீத சம்பள அதிகரிப்பினை ஐந்து ஆண்டுகளில் வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது.

மேலும் அனைத்து உழியர்களுக்கும் ஒரு தடவை ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.




எனினும் இந்த முன்மொழிவுகளை தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.

# ஒன்ராரியோ மாகாணத்தில் இடம்பெறும் வாகனக் கொள்ளையை தடுக்க பெருந்தொகை நிதி ஒதுக்கீடு!

நவம்பர் 24, 2023

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் இடம்பெற்று வரும் வாகன கொள்ளைச் சம்பவங்களை தடுக்க பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் இதற்கென 18 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. மாகாண பொலிஸ் பிரிவிற்கு இந்த நிதி ஒதுக்கப்படும் வழங்கப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் அடிக்கடி கொள்ளையிடப்படுவது மாகாணத்திற்கு பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ளதாக மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் மிகவும் சூட்சுமமான முறையில் திட்டமிட்டு கொள்ளையிடப்படுவதாகத் தெரிவிக்கப்படகின்றது.

சில கொள்ளை கும்பல்கள் இதன் பின்னணியில் செயற்பட்டு வருவதகாவும் இவற்றை கண்டு பிடித்து தண்டிப்பதற்கு இந்த நிதி உதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனக் கொள்ளைச் சம்பவங்களை தடுக்கும் 12 விசேட நடவடிக்கைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது.

கடந்த 2014ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வாகனக் கொள்ளைச் சம்பவங்கள் 72 வீதத்தினால் அதிகரித்துள்ளன.




# இஸ்ரவேல் – காசா போரின் எதிரொலி வெறுப்புணர்வு சம்பவங்கள் அதிகரிப்பு!

## ரொரன்ரோ பொலிஸ் பிரதானி மெய்ரோன் டெம்கிவ்

நவம்பர் 24, 2023

ரொரன்ரோவில் இஸ்ரவேல் – காசா போர் காரணமாக வெறுப புணர்வு சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

ரொரன்ரோ பொலிஸ் பிரதானி மெய்ரோன் டெம்கிவ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய எதிர்ப்பு மற்றும் யூத எதிர்ப்பு சம்பவங்களின் எண் ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2022ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் வெறுப்புணர்வு சம்பவங்களின் எண்ணிக்கை 1600 வீதமாக உயர்வடைந்துள்ளது.

குறிப்பாக கடந்த ஒக்ரோபர் மாதம் 7ம் திகதியின் பின்னர் இவ் வாறு வெறுப்புணர்வு சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது.

அச்சுறுத்தல் விடுத்தல், தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் இந்த வெறுப்புணர்வு சம்பவங்கள் பதிவாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.







## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com




# புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான தடை நீக்கம் வரவேற்கத்தக்கது!

பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

நவம்பர் 16, 2023

தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான தடை நீக்கம் வரவேற்கத்தக்கது. ஆனால் 2025-ஆம் ஆண்டிலும் செயல்படுத்தக் கூடாது என பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கக் கூடாது. ஏற்கனவே தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்களை அதிகரிக்கக் கூடாது என்று கடந்த 16.08.2023-ஆம் நாள் பிறப்பித்திருந்த அறிவிக்கையை தேசிய மருத்துவ ஆணையம் திரும்பப் பெற்றிருக்கிறது. மருத்துவக் கல்வி கட்டமைப்புகளை சிறப்பாக உருவாக்கிய தென் மாநிலங்களை தண்டிக்கும் வகையிலான அறிவிக்கை திரும்பப் பெறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஒவ்வொரு மாநிலத்திலும் 10 லட்சம் பேருக்கு அதிக அளவாக 100 எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்பது தான் தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய விதியாகும். இந்த விதி 2024-25 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிப்படி 7.68 கோடி மக்கள்தொகை கொண்ட தமிழ்நாட்டில் 7686 மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டும் தான் அதிக அளவாக இருக்க முடியும். ஆனால், அதை விட அதிகமாக இப்போதே 11,225 எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் இருப்பதால், தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளையும், கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்களையும் ஏற்படுத்த முடியாது.

தேசிய மருத்துவ ஆணையத்தின் அறிவிக்கை குறித்த செய்தி வெளிவந்தவுடன், அதை எதிர்த்து தமிழ்நாட்டில் முதன் முதலாக, கடந்த செப்டம்பர் 29-ஆம் நாள் நான் தான் அறிக்கை வெளியிட்டேன். அதன் தொடர் நடவடிக்கையாக கடந்த 04.11. 2023-ஆம் நாள் பிரதமர் நரேந்திர மோடிக்கும், மத்திய நலவாழ்வுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டாவியாவுக்கும் கடிதம் எழுதினேன். அதன் தொடர்ச்சியாக மத்திய அரசு கொடுத்த அழுத்தத்தின் பயனாக தேசிய மருத்துவ ஆணையம் அதன் அறிவிக்கையை திரும்பப் பெற்றிருப்பது, இச்சிக்கலுக்கு தொடக்கம் முதலே குரல் கொடுத்தவன் என்ற முறையில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இதற்காக பிரதமர், மத்திய நலவாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் புதிய மருத்துவக் கல்லூரிகள், கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்களை ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான தடையை தேசிய மருத்துவ ஆணையம் ஓராண்டுக்கு மட்டுமே நிறுத்தி வைத்திருக்கிறது. இந்த விவகாரத்தில் தொடர்புடையவர்களுடன் கலந்தாய்வு நடத்தி, 2025-26 ஆம் ஆண்டு முதல் தடையை செயல்படுத்த ஆணையம் திட்டமிட்டிருக்கிறது. இது தவறு.

புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கக் கூடாது; ஏற்கனவே தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்களை அதிகரிக்கக் கூடாது என்ற தடைக்கு எதிராக தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் முன்வைத்துள்ள காரணங்கள் அனைத்தும் ஓராண்டுக்கு மட்டும் பொருந்தக் கூடியவை அல்ல காலாகாலத்துக்கும் பொருந்தக் கூடியவை. தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநில அரசுகள் பல பத்தாண்டுகளாக திட்டமிட்டு, தொலைநோக்குப் பார்வையுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவே அங்கு அதிக



எண்ணிக்கையில் மருத்துவக் கல்லூரிகள் உருவாகியுள்ளன. அதற்காக அந்த மாநில அரசுகளை மத்திய அரசும், மருத்துவ ஆணையமும் பாராட்ட வேண்டுமே தவிர, இதுபோன்ற கட்டுப்பாடு விதித்து தண்டிக்கக்கூடாது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு. இந்த நியாயம் ஓராண்டுக்கு மட்டுமானதல்ல... நிரந்தரமானது.

எனவே, ஒவ்வொரு மாநிலத்திலும் 10 லட்சம் பேருக்கு அதிக அளவாக 100 எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்ற ஆணைக்கு ஓராண்டுக்கு மட்டுமின்றி நிரந்தரமாக தடை விதிக்க வேண்டும். தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகள் இல்லாத காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளை மத்திய அரசின் நிதி பங்களிப்புடன் அமைக்கவும் அனுமதி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் வேகமாக பரவும் 'இன்புளுயன்சா' காய்ச்சல்!

நவம்பர் 17, 2023

சென்னையை பொறுத்தவரை மழைக்கால நோய்கள் ஆண்டுதோறும் செப்டம்பர் முதல் ஜனவரி வரை இருக்கும். இதில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்த நோய் பரவல் உச்சத்தில் இருக்கும்.

இந்த வருடமும் காய்ச்சல் பெருமளவு காணப்படுகிறது. பெரும்பாலான ஆஸ்பத்திரிகளில் காய்ச்சலுக்கு சிகிச்சைக்காக ஏராளமானோர் வந்து கொண்டு இருக்கிறார்கள் என்று பொது சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இந்த காலங்களில் வைரஸ் மூலம் பரவும் காய்ச்சல், கொசுக்கள் மூலம் பரவும் காய்ச்சல் ஆகியவை வழக்கமாக பரவும். இந்த ஆண்டும் அதேபோல் காய்ச்சல்கள் பரவி வருகின்றன. இது பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு அரசு மற்றும் ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் காய்ச்சலுக்காக அனுமதிக்கப்பட்டோரின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மொத்தம் 300 பேரிடம் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டது. இதில் இன்புளுயன்சா காய்ச்சல் அதிக அளவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்புளுயன்சா-ஏ வகை காய்ச்சல் தான் அதிகமான அளவில் இருக்கிறது. இந்த வகை காய்ச்சல் கண்டவர்களுக்கு உடல் வலி, அதிகமான காய்ச்சல், தலைவலி, வாந்தி போன்ற அறிகுறிகள் இருக்கும். காய்ச்சல் அதிகரிப்பதை பொறுத்து இவற்றை 3 பிரிவுகளாக பிரிக்கப்படும். லேசான காய்ச்சல், தொண்டை வலி இருந்தால் அவை சாதாரண முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

இதே காய்ச்சல் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகளை தாக்கினால் அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்துகளை மருத்துவர்கள் பரிந்துரைப்பார்கள். அதே நேரம் அளவுக்கு அதிகமான காய்ச்சல், சளி, தொண்டை வலி மற்றும் வாந்தி போன்றவை இருந்தால் அவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் அவர்களுக்கு உயிருக்கு ஆபத்து நேரிடவும்



வாய்ப்பு உண்டு என்று கூறுகிறார்கள் மருத்துவர்கள். காய்ச்சல் பாதித்தவர்கள் நன்றாக ஓய்வு எடுக்க வேண்டும். மேலும் மற்றவர்களுக்கு பரவாமல் இருக்க தனிமைப்படுத்திக் கொள்வது நல்லது என்று அறிவுறுத்தப்பட்டது. எனவே இந்த சீசனில் மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். லேசான காய்ச்சல் கண்டால் ஒன்றிரண்டு நாட்கள் பார்த்து விட்டு காய்ச்சல் குறையவில்லை எனில் உடனடியாக மருத்துவர்களை அணுகுவது நல்லது என்கிறார்கள் சுகாதாரத்துறையினர்.

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம்; 21 அதிகாரிகள் மீது நடவடிக்கை

நவம்பர் 17, 2023

அதிமுக ஆட்சியில் நடந்த தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக அப்போதைய மாவட்ட ஆட்சியர், 17 காவல்துறை அதிகாரிகள், 3 வருவாய்த்துறை அதிகாரிகள் உள்ளிட்ட 21 பேருக்கு எதிராக நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் ஆணையத்தின் பரிந்துரையின்படி நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 21 அதிகாரிகள் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மாவட்ட ஆட்சியராக இருந்த வி.வெங்கடேஷ், தென் மண்டல ஐ.ஜி.-யாக இருந்த ஷைலேஷ் குமார் யாதவ் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட எஸ்.பி.யாக இருந்த கபில் குமார் சரத்கர், துணை வட்டாட்சியராக இருந்த சேகர் உள்ளிட்டோருக்கு எதிராக நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மேலும், 21 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்ன? துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் அவர்களின் பங்கு என்ன? என்பது குறித்து விளக்கம் அளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிடப்பட் டுள்ளது. ஒரு காவல்துறை அதிகாரி மீது மட்டும் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதே, மற்ற காவல் துறை யினருக்கு எதிரான வழக்கு கைவிடப்பட்டதா? என்றும் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

# "சிறையை விட மோசம்" அகதிகள் முகாமில் இருந்து விடுவிக்க கோரும் ராபர்ட், ஜெயக்குமார் வழக்கில் அரசு பதிலளிக்க உத்தரவு!

நவம்பர் 18 2023

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டு சிறைவாசத்துக்கு பிறகு விடுதலை செய்யப்பட்ட பின்னர் திருச்சி - கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ள ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் தங்களை முகாமிலிருந்து விடுவித்து சுதந்திரமாக நடமாட அனுமதிக்கக் கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் ராபர்ட் பயஸ், ஜெயக்குமார். இவர்கள் 32 ஆண்டு சிறை வாசத்துக்கு பிறகு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இருவரும் திருச்சி கொட்டப்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இருவரும் தங்களை கொட்டப்பட்டு அகதிகள் முகாமிலிருந்து தவிடுவிக்கக் கோரி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ராபர்ட் பயஸ் தாக்கல் செய்துள்ள மனுவில், "முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 1991 ஜூன் 10-ல் கைது செய்யப்பட்டேன். இந்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 32 ஆண்டுகளாக சிறையில் இருந்த நிலையில் 11.11.2022-ல் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப் பட்டேன். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளில் இருந்து கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருக்கிறேன். இந்த அகதிகள் முகாம் சிறையை விட மோசமானது. அறையை விட்ட வெளியே வரவும், மற்ற கைதிகளுடன் பழகவும் அனுமதிப் பதில்லை. அகதிகள் முகாமுக்கு மாற்றப்பட்ட நாளிலிருந்து சூரியனை பார்க்க முடியவில்லை.

சிறையிலிருந்து விடுதலையான பிறகும் அதேநிலை தொடர்வதால் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளேன். முகமில் இருந்து விடுதலை செய்யக் கோரி முகாம் அதிகாரிகளிடம் கேட்டபோது இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்தார். என்னை இலங்கைக்கு அனுப்புவது மரண தண்டனைக்கு ஈடானது. இலங்கைக்கு நாங்கள் சென்றால் கண்டிப்பாக கொலை செய்யப்படுவோம். எனவே, நான் இலங்கை செல்ல விரும்பவில்லை. என் மனைவி, மகன், சகோதரி ஆகியோர் நெதர்லாந்தில் வசித்து வருகின்றனர்.

என் மனைவியும், மகனும் எனது அன்பை பெற்றதில்லை. என்னை முகாமிலிருந்து விடுவித்தால் நெதர்லாந்தில் என் குடும்பத்துடன் எஞ்சியிருக்கும் வாழ்நாளை முடிப்பேன். தற்போது முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் என்னால் நெதர்லாந்து செல்வதற்கு உரிய அதிகாரிகளை சந்திக்க முடியவில்லை. இதனால், என்னை கொட்டப்பட்டு முகாமிலிருந்து விடுவித்து, ஓர் ஆண்டு சுதந்திரமாக இருக்க அனுமதித்து, நெதர்லாந்து அல்லது வேறு நாட்டுக்குச் செல்ல அனுமதிக்க உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.



ஜெயக்குமார் தாக்கல் செய்த மனுவில், "என்னை முகாமிலிருந்து விடுதலை செய்து சென்னையில் தனது குடும்பத்தினருடன் வாழ அனுமதிக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

இந்த மனுக்கள் நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. பின்னர் ராபர்ட் பயஸ் வழக்கில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தை எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவிட்டு, மத்திய அரசு நவம்பர் 27-க்குள் பதிலளிக்கவும், ஜெயக்குமார் வழக்கில் தமிழக அரசு நவம்பர் 21-க்குள் பதிலளிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# சிரமத்தின் மத்தியில் கிருஷ்ணகிரி கும்மனூர் கிராமம் பாலம் கட்டப்படுமா?

நவம்பர் 19, 2023

கிருஷ்ணகிரி அருகே கும்மனூர் கிராமத்தில் அறுவடையான நெற்கதிரின் கட்டை தலையில் சுமந்தபடி தென்பெண்ணை ஆற்று நீரை விவசாயத் தொழிலாளர்கள் கடந்து செல்லும் நிலையுள்ளது. இச்சிரமத்தைப் போக்க ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

கிருஷ்ணகிரி அருகே திப்பனப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்டது கும்மனூர் கிராமம். இக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளின் விளைநிலங்கள் தென்பெண்ணை ஆற்றின் மறுகரையை யொட்டியுள்ளது. இங்கு சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் ஆண்டு தோறும் இரு போகம் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாததால், விவசாய பணிகளை மேற்கொள்ள கும்மனூர் விவசாயிகள் ஆற்று நீரில் இறங்கி மறு கரைக்குச் செல்லும் நிலை உள்ளது.

குறிப்பாக, ஆற்றில் நீர் பெருக்கெடுத்துச் செல்லும் போது, ஆற்று நீரில் இறங்கி தங்கள் நிலத்துக்குச் செல்வதோடு, உரம் உள்ளிட்ட விவசாய இடுபொருட்களைத் தலைச் சுமையாக சுமந்தபடி ஆபத்தான முறையில் ஆற்று நீரைக் கடப்பது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. மேலும், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் சுமார் 20 கிமீ தூரம் சுற்றியே விளை நிலத்துக்கு சென்று வர வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது என விவசாயிகள் வேதனை தெரிவித்தனர். இச்சிரமத்தைப் போக்க தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கும்மனூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது: கும்மனூரில் இருந்து 1 கிமீ தொலைவில் உள்ள தென் பெண்ணை ஆற்றைக் கடந்தே எங்களது விளை நிலத்துக்கு செல்ல முடியும். ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் கும்மனூரில் இருந்து மாதேப்பட்டி, செம்பட முத்தூர் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வழியாகச் சென்றே விளை நிலத்தை அடைய முடியும்.

நெல் நடவு, பராமரிப்பு பணி என அறுவடை வரை நாங்கள் 10 அடி ஆழமுள்ள ஆற்றில் இறங்கி நீரை ஆபத்தான முறையில் கடந்தே விளை நிலத்துக்குச் செல்கிறோம். குறிப்பாக, அறுவடைக் காலங்களில் நெற்கதிரைத் தலையில் சுமந்தபடி ஆற்றில் நீரில் மறு கரைக்கு செல்லும் நிலையுள்ளது. கரையில் இருந்து கதிர் கட்டுகளை டிராக்டரில் ஏற்றி களத்துக்குக் கொண்டு சென்று கதிர் அடிக்கிறோம்.



இதனால், எங்களுக்கு அறுவடை கூலி உள்ளிட்ட செலவினங்கள் அதிகரிக்கிறது. இதனால், பலர் வேளாண் தொழிலைக் கைவிடும் நிலையுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



















# சிப்காட் தொழிற்பேட்டைக்கு நிலம் பறிப்பை கைவிடக்கோரிக்கை!

## பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

நவம்பர் 21 2023

திருவண்ணாமலை மாவட்டம் சிப்காட் தொழிற்பேட்டை விரிவாக்கத்துக்காக 11 கிராமங்களிலிருந்து 2700 ஏக்கர் வேளாண் விளைநிலங்களை கையகப்படுத்துவதை கைவிடக் கோரி நாளை பாமக போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: "திருவண்ணாமலை மாவட்டம் சிப்காட் தொழிற்பேட்டை விரிவாக்கத்திற்காக 11 கிராமங்களிலிருந்து 2700 ஏக்கர் வேளாண் விளைநிலங்களை கையகப்படுத்த உழவர்கள் மற்றும் பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், அதைப் பொருட்படுத்தாமல் நிலங்களை கையகப்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு தொடர்ந்து ஈடுபட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. மக்களின் உணர்வுகளை மதிக்காத தமிழக அரசுக்கு தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத அளவுக்கு பாடம் புகட்டுவார்கள் என்பது உறுதி.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகரில் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய சிப்காட் தொழிற்பூங்கா செயல்பட்டு வருகிறது. மொத்தம் 2,937 ஏக்கர் பரப்பளவிலான இந்த தொழிற்பூங்காவில் இரு அலகுகள் செயல்பட்டு வரும் நிலையில், மூன்றாவது அலகை அமைப்பதற்காக 3,174 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த முடிவு செய்திருக்கிறது. அதில் 361 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்கள் தவிர மீதமுள்ள 2700-க்கும் கூடுதலான ஏக்கர் நிலங்கள் தனியாருக்கு சொந்தமான வளமான வேளாண் விளைநிலங்கள் ஆகும்.

செய்யாற்றை ஒட்டிய வட ஆளப்பிறந்தான், மேல்மா, தேத்துறை, இளநீர்குன்றம், குறும்பூர், நர்மாபள்ளம், அத்தி, வீரம்பாக்கம் உள்ளிட்ட 11 கிராமங்களில் பரந்து விரிந்து கிடக்கும் இந்த நிலத்தை இழக்க விரும்பாத உழவர்களும், பொதுமக்களும் நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து 125 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டங்களை நடத்தி வந்தனர். அவர்களை அழைத்து பேச்சு நடத்தி, சிக்கலுக்கு தீர்வு காண வேண்டிய தமிழக அரசு, அடக்குமுறையை பயன்படுத்தி எதிர்ப்பை ஒடுக்கிவிடலாம் என்ற எண்ணத்தில் கடந்த 4-ஆம் தேதி அதிகாலையில் காவல்துறை மூலம் வீடுவீடாக ஆய்வு நடத்தி 27 விவசாயிகளை கைது செய்தது.

சிறையில் அடைக்கப்பட்ட அவர்களில் 7 பேரை குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்தது. இரு நிகழ்வுகளுக்கும் நான் தான் முதன் முதலில் கண்டனம் தெரிவித்தேன். அதைத் தொடர்ந்து மிகப்பெரிய அளவில் மக்கள் எதிர்ப்பு வெடித்த நிலையில், அதற்கு பணிந்து 6 பேர் மீதான குண்டர் சட்ட நடவடிக்கையை தமிழக அரசு திரும்பப் பெற்றது. அத்துடன் நிலங்களை கையகப்படுத்தும் திட்டத்தையும் கைவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மக்களின் உணர்வுகளை சற்றும் மதிக்காமல் நிலங்களை கையகப்படுத்தும் பணிகளை தீவிரப்படுத்த தமிழக அரசு முயல்வதை அனுமதிக்க முடியாது.

சிப்காட் விரிவாக்கத்திற்காக கையகப்படுத்தப்படவுள்ள நிலங்கள் முப்போகம் விளையும் பூமி ஆகும். இந்த நிலங்கள் கையகப்படுத்தப்பட்டால், அவற்றின் உரிமையாளர்கள், அந்த நிலங்களை நம்பியுள்ள தொழிலாளர்களும் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து விடுவர். அதனால், தங்கள் வாழ்வாதாரத்தைக் காக்க தொடர்போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களின் உணர்வுகளை மதித்து நிலம் கையகப்படுத்தும் திட்டத்தை கைவிடுவது தான் மக்கள் நல அரசிற்கு அழகு ஆகும். ஆனால், தமிழக அரசோ, அதனிடமுள்ள அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி நிலத்தைப் பறிக்க துடிக்கிறது.

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பை பெருக்குவதற்கும், வறுமை ஒழிப்பதற்கும் உதவும் தொழில் வளர்ச்சித் திட்டங்களில் சிப்காட் தொழிற்பூங்கா திட்டம் மிகவும் சிறந்தது என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. அந்த வகையில் சிப்காட் தொழிற்பூங்காக்கள் மிகவும் வரவேற்கப்பட வேண்டியவை ஆகும்.

அதிலும் குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதால் அங்கு சிப்காட் தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியம். அத்தகைய தொழிற்பூங்காக்கள் திருவண்ணாமலை மாவட்டத்தின் வந்தவாசி, செங்கம், போளூர் போன்ற பகுதிகளில் அரசுக்கு சொந்தமாக உள்ள தரிசு நிலங்களில் அமைக்கப்பட்டால், அனைவருக்கும் பயனளிப்பதாக இருக்கும். மாறாக, ஒரு பிரிவினருக்காக



அமைக்கப்படும் தொழிற்பூங்கா, விளைநிலங்களைப் பறித்து இன்னொரு பிரிவினரின் வாழ்வாதாரங்களை முடக்கக் கூடாது. தொழிலுக்காக உழவு ஒருபோதும் அழிக்கப்படக் கூடாது. உழவுத் தொழில் காப்பாற்றப்படாவிட்டால், தமிழ்நாட்டு மக்கள் இன்னும் சில ஆண்டுகளில் உணவுக்காக பிற மாநிலங்களிடமும், வெளிநாடுகளிடமும் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படும். அதற்கு அரசு வழிவகுக்கக்கூடாது.

செய்யாறு சிப்காட் விரிவாக்கத்திற்காக வேளாண் விளைநிலங்கள் கையகப்படுத்தப்படுவதை கண்டித்தும், நிலங்களை கையகப்படுத்தும் முடிவை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகரத்தை அடுத்த மேல்மா கூட்டு சாலையில் நாளை (22.11.2023) காலை 10.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறவிருக்கிறது. இந்தப் போராட்டத்திற்கு பாமக தலைவரான நான் தலைமை ஏற்கிறேன். தமிழ்நாடு உழவர் பேரியக்கம் உள்ளிட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் அனைத்து இணை மற்றும் சார்பு இயக்கங்களின் நிர்வாகிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர். பிற உழவர் அமைப்புகள், வேளாண் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அமைப்புகள், சமூக அமைப்புகள், உழவர்கள், வணிகர்கள், இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பாமக நடத்தும் போராட்டத்தில் பங்கேற்று ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு அன்புமணி தெரிவித்தார்.

# உலகத் தமிழர்களின் ஒப்பற்ற முகவரி மேதகு வே. பிரபாகரன் அவர்களுக்கு அகவை நாள் நல்வாழ்த்துக்கள்!

## வ.கௌதமன் – பொதுச்செயலாளர் தமிழ்ப்பேரரசு கட்சி "சோழன் குடில்"

நவம்பர் 19, 2023



அன்பு அண்ணனுக்கு அறுபத்தொன்பதாமாண்டு அகவை நாள் நல்வாழ்த்துகள்.

ஐம்பதாயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட தமிழர் மண்ணை, வீரம் செறிந்த எத்தனையோ மன்னர்கள் ஆண்டதுண்டு. வீரமும் ஈரமும் அறமும் சுமந்து ஆண்ட ஒரே ஒரு மன்னன் எமது அண்ணன் மேதகு வே. பிரபாகரன் மட்டுமே உண்டு.

சிங்களக் காடையர்கள் ஒரு தமிழ்க் குழந்தையை கொதிக்கும் தாரினில் முக்கியெடுத்து தூக்கிய போது "ஏனப்பா நாம அவர்களை திருப்பி அடிக்கவில்லை" என்று தனது கை பிடித்து நடந்து வந்த தந்தையை கேள்விக் கேட்ட பால சிறுவன்.

தகப்பன் தனது கனவினை வெளிப்படுத்திய போது "படித்துவிட்டு அரசாங்கத்தில் சேர்வதல்ல எனது வேலை; நித்தம் நித்தம் செத்துக் கொண்டிருக்கிற எமது மக்களுக்கு தனித்ததொரு அரசாங்கத்தை உருவாக்குவதே எனது தலையாய வேலை" என்று சொன்ன இளம் சிறுவன்.

"எதிரியை விட துரோகியே ஆபத்தானவன்" என சூளுரைத்து தமிழ் மாநாட்டில் தமிழர்கள் சாகக் காரணமாக இருந்த மேயர் ஆல்பர்ட் துரையப்பாவை நேருக்கு நேர் நின்று களையெடுத்த பதின்ம பருவ இளைஞன்.

காடையர்களும் இராணுவமும் கண் கொத்திப் பாம்பாக தேடிக் கொண்டிருக்க, பகல் முழுவதும் புறாக்களின் புழுக்கைகளோடும், எலிகளின் எச்சங்களோடும் முருகர் கோவிலின் உச்சியில் மூச்சடக்கி உட்கார்ந்திருந்து, இரவானதும் இறங்கி வந்து இயற்கை உபாதைகள் கழித்து தனது உயிரான தாய் நில விடுதலைக்காக, உயிருக்கு உயிரான நண்பர்களோடு வியூகமைத்துவிட்டு முப்பது நாட்களுக்கு மேல் சிகரத்தில் அமர்ந்து கண்விழித்து தமிழீழற்காக கனவு கண்ட பெருவீரன்.

இனமழிக்கும் எதிரிகளை கருவறுக்க தனது தாய்நில தமிழர்களைக் கொண்டே, உலகின் எந்த ஒரு நாட்டின் துணையுமின்றி காலாட் படை, கப்பல் படை, விமானப் படை என முப்படைகளையும் கட்டி தனித்ததொரு மக்கள் ராணுவத்தை கட்டமைத்த மாவீரன்.

அனைவரும் வியக்க அரசாண்டது பொறுக்காமல் சிங்கள அதிகார வர்க்கத்தோடு இவ்வுலகின் வல்லரசு நாடுகளனைத்தும் ஒன்றிணைந்து எங்கள் பிஞ்சுப் பிள்ளைகள் முதல் இளைஞர்கள், பெண்கள், பெரியவர்கள் என அனைவரையும் ஈவு இரக்கமின்றி கொத்துக் குண்டுகளையும் இரசாயன குண்டுகளையும் வீசி கொத்துக்கொத்தாக செத்து சிதறி எங்கள் நந்திக் கடல் செங்கடலான போதும் "எதிரியை மட்டும் எதிர்ப்போம் அவர்கள் வீட்டு பெண்களையும் குழந்தைகளையும் நம் வீட்டார்கள் போல் காப்போம்" என கொழும்பினை தகர்க்க வாய்ப்பிருந்தும் வன்மம் காட்டாது எங்கள் வள்ளுவன் வள்ளலாரை போல் "எதிரிக்கும் அருள்வாய் நன்னெஞ்சே" என்கிற அறக்கோட்பாட்டிற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த எம் இனப் பெருந்தலைவன்.

இறுதி யுத்தம் செய்த இரத்த காட்டேரிகள் இராஜபக்சே, கோத்தபய, பசிலை அவர்களது சொந்த மக்களே அடித்து அவர்களின் மாளிகையை தீயிட்டுக் கொளுத்தி அவர்களை ஓட ஓட துரத்திய பின், தங்களின் "பசி"த்தீ அடங்காமல் கொழும்பு தார்ச் சாலையை நிறைத்தபடி நின்று "பிரபாகரன் இருந்திருந்தால் இந்நேரம் நாங்கள் பட்டினி கிடந்திருக்க மாட்டோம்" என ஒரு சிங்கள இளைஞன் பெருங்குரல் எடுத்து கூக்குரல் இட்ட பொழுதே எங்கள் அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பிறப்பு இதுவரை இந்த உலகில் எந்த தலைவனுக்குமில்லாத தனிப்பெரும் சிறப்பினை அடைந்துவிட்டது.

அப்படிப்பட்ட வீரமும் ஈரமும் அறமும் ஒருங்கே அமைந்த எனது தாய்க்கும் தாய் மொழிக்கும் சமமான எங்களண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு ஒரு தம்பியாக அவருக்கு அறுபத்தொன்பதாமாண்டு அகவை நாள் நல்வாழ்த்துகளை எனது உயிர் நெகிழும் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"உன்னைப்போல் ஒரு பிறப்பு இனி இவ்வுலகில் சாத்தியமில்லை. ஆனால் உன்னைப் போல் பல வளர்ப்பு தமிழினத்தில் சாத்தியமானது.

நீ இருக்கிறாயா இல்லையா என்கிற மர்மத்தை காலம் கட்டவிழ்க்கட்டும். அதுவரை பொறுமை காக்காமல் இனியாவது தமிழினம் இறுக கைப்பற்றி எம் தலைவனின் வலி சுமந்து புதியதொரு வழி சமைத்து தமிழினத்தை தலை நிமிர்த்துவோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

வெல்வோம். பெரு நம்பிக்கையோடு – வ. கௌதமன்

# உலக செய்திகள்

## இஸ்ரவேலியக் கப்பல் செங்கடலில் ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சிப் படையினரால் கடத்தல்!

நவம்பர் 20, 2023



இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்த இஸ்ரவேல் பெரும் பணக்காரருக்கு சொந்தமான கப்பல் ஒன்றை ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சிப் படையினர் கடத்தியுள்ளனர். அந்தக் கப்பலில் இருந்த 25 பேரும் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரவேல் - ஹமாஸ் போர் தற்போது அந்தப் பிராந்தியத்தில் கடல்வழியில் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதன் அடையாளமாக இந்தக் கடத்தல் சம்பவம் உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக ஈரான் ஆதரவு ஹவுத்தி படைகள் கூறும் போது, இஸ்ரவேலுடன் தொடர்புடைய காரணத்தாலேயே அந்தக் கப்பலை நாங்கள் சிறைப்பிடித்துள்ளோம். காசா மீதான இஸ்ரவேல் தாக்குதல் நிறுத்தப்படும் வரை கடல் பகுதியில் இதுபொல் இஸ்ரவேல் கப்பல்களை குறிவைப் போம். இஸ்ரவேல் நாட்டுக் கப்பலோ இல்லை இஸ்ரவேலுடன் வர்த்தக தொடர்புள்ள கப்பலோ நிச்சயமாக எங்களின் இலக்காகும் என்று எச்சரித்துள்ளனர்.

இது ஆரம்பம்தான்... ஹவுத்தி படைகளின் தலைமை செய்தித் தொடர்பாளர் முகமது அப்துல் சலாம் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரவேலியர்களுக்கு அடக்குமுறை தான் புரியும். இஸ்ரவேல் கப்பலை நாங்கள் இப்போது பிணையாக பிடித்துவைத்திருப்பது போரில் நாங்கள் எங்களை இணைத்துக் கொண்டதன் தீவிரத்தை உணர்த்தும். என்ன விலை கொடுத்தாவது கடல்பரப்பில் நாங்கள் இந்தப் போரை மேற்கொள்வோம். இது வெறும் ஆரம்பம்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. பிரதமர் அலுவலகத்தின் கண்டனக் குறிப்பில், ஹவுத்திக்கள் இஸ்ரவேலிய பெரும் பணக்காரர் ஒருவருக்குச் சொந்தமான கப்பலை சிறைப்பிடித்துள்ளது. அதில் உள்ள 25 பேரில் ஒருவர் கூட இஸ்ரவேலியர் அல்ல. பல்கேரியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ, உக்ரைன் எனப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கும் கப்பலைக் கடத்தி ஏமன் மிகப்பெரிய சர்வதேச குற்றம் புரிந்ததோடு உலக நாடுகளின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. இது ஈரானின் பயங்கரவாதத்தின் வெளிப்பாடு என்று கூறியுள்ளது.

இதற்கிடையில் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் இஸ்லாமிய சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்படுவதாக ஹவுத்தி குழு தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபருக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

## “இஸ்ரவேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளது”

### ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே

நவம்பர் 21, 2023

இஸ்ரவேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளதாக ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தெரிவித்துள்ளது சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே (Ismail Haniyeh), “இஸ்ரவேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது” என டெலிகிராமில் தெரிவித்துள்ளார். கத்தார் இருதரப்புகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில், இரண்டு தரப்பிலும் சுமுக முடிவு விரையில் எட்டப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில். இஸ்ரவேல் 5 நாள் போர் நிறுத்தமும், தெற்கு காசா உட்பட காசாவின் பகுதிகளில் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலை நிறுத்தவும் அந்த பேச்சுவார்த்தையில் கேட்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

அதற்குப் பதிலாக, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் ஆகியோரின் பிணையில் உள்ள 50 முதல் 100 பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் கூறப்படுகிறது. இதில் இராணுவ வீரர்களை வெளியேற்ற வாய்பில்லை எனத் தெரிகிறது. இந்த நிலையில், பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரவேல் மற்றும் ஹமாஸ் இடையே விரைவில் உடன்பாடு ஏற்படும் என நேற்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நம்பிக்கை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னணி என்ன? இஸ்ரவேல் நாட்டின் மீது அக்டோபர் 7-ம் தேதியன்று பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் திடீர் தாக்குதலைத் நடத்தியது. அதைத் தொடர்ந்து இஸ்ரவேலும் தொடர்ந்து தன்னுடைய எதிர்த் தாக்குதலை நடந்தி வருகிறது. இந்த மோதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரவேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்து கிடக்கின்றன. இதற்கிடையே போரை நிறுத்தி காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்ய இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வந்தன. ஆனால், பிணைக்கைதிகளை விடுவிக்கும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என் இஸ்ரவேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



இஸ்ரவேல் - ஹமாஸ் போருக்கு இன்னும் நிரந்தர முடிவு எட்டப்படவில்லை. இந்தத் தாக்குதல்களில் இஸ்ரவேலில் ஏறத்தாழ 1,200 பேர் கொல்லப்பட்டனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர். இதனால், இஸ்ரவேல் இராணுவம் காசாவின் வட பகுதியில் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது. கடந்த 40 நாட்களுக்கும் மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 13,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உணவின்றித் தவிக்கும் காஸா மக்கள்
## ஐ.நா. கவலை

நவம்பர் 21, 2023

பாலஸ்தீனத்தின் காஸாவிலிருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரவேல் மீது கடந்த (07.10.2023) ஆம் திகதி தாக்குதலை நடாத்தினார்கள்.

இத்தாக்குதலின் போது இஸ்ரவேலைச் சேர்ந்த சுமார் 1 200 பேர் உயிரிழந்துள்ளதுடன் 200 இற்கும் மேற்பட்டவர்களை பிணைக் கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்து சென்றுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து காஸாவுக்குள் இஸ்ரவேல் இராணுவம் படிபடியாக உள்நுழைந்து தீவிர தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. காஸா நகரத்தில் உள்ள மருத்துவமனைகளை குறிவைத்து இஸ்ரவேல் இராணுவம் தற்போது தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

தற்போது தற்காலிக போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளும் நடந்து வருகின்றன.

இந்நிலையில் காஸா நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலைத் தெரிவித்து வரும் நிலையில் ஐ.நா உணவு அமைப்பு காஸாவில் தற்போது 22 இலட்சம் பேருக்கு உணவுத் தேவைப் படுவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் அங்கு மக்கள் உணவு எரிபொருள் இன்றி தவிப்பதாகவும் அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறியுள்ளது.



# இஸ்ரவேல் – ஹமாஸ் இயக்கத்துக்கு இடையே இணக்கம்; பணயக் கைதிகள் பரிமாற்றம்!

நவம்பர் 22, 2023

இஸ்ரவேல் - ஹமாஸ் இயக்கத்துக்கு இடையே பணயக் கைதிகளை விடுவிக்க ஓர் இணக்கப்பாடு ஒப்பந்தம் எட்டப் பட்டுள்ளது.

ஆக்டோபர் 7 ஆம் நாள் இஸ்ரவேலிலிருந்து கடத்தப்பட்ட 240 பேரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 50 பேரை முதல் நான்கு நாளில் விடுவிக்க ஹமாஸ் தரப்பு இணக்கியுள்ளது. இதற்கு ஈடாக இஸ்ரவேலிய சிறைகளில் உள்ள 150 பாலஸ்தீனியர்களை விடுவிக்க இஸ்ரவேலும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரவேலிய நீதி அமைச்சகம் அதன் வலைதளத்தில் பாலஸ்தீனிய கைதிகளின் பட்டியலை வெளியிட்டு உள்ளது. அரசு உத்தரவின்பேரில், கைதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளது. இதில் 300 பேர் கைதிகளின் பெயர்கள் உள்ளன.

பணயக்கைத்திகளை விடுவிக்கும் இந்த நான்கு நாட்களில் இருதரப்பும் மோதலை நிறுத்தி வைக்க முடிவெடுத்துள்ளன.

இஸ்ரவேல் விடுவிக்கும் கைதிகள் பட்டியலில் பெண்களும் சிறுவர்களும் உள்ளனர். இதில் 33 பெண்களும் 123 சிறார்களும் அடங்குவர். சிறுவர்கள் 14 வயதுக்கு உட்பட்டர்கள் என்றும் பெண்களில் 59 வயது ஒருவரும் அடங்குகின்றது. இப்பட்டியலில் ஆண்கள் எவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் 2021 ஆண்டு முதல் கைது செய்யப் பட்டவர்கள்.



இதற்கான இடைத்தரகர்களாக கட்டாரும் எதிக்கும் இருந்து வருகின்றன.

# சீனாவில் புதிய வைரஸ் தொற்று!

நவம்பர் 23, 2023

சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் தொற்று வேகமாகப் பரவிவருவதால் மருத்துவமனைகள் முழுவதும் குழந்தைகளும் பெற்றோர்களும் நிரப்பிக் காணப்படுகின்றனர். இது குறித்து அந்நாட்டு சுகாதாரத் துறை நிமோனியா தொற்றுக் குறித்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது என்று கூறியுள்ளது. மேலும் இந்த நிமோனியா தொற்று தொடர்பான தகவல்களைப் பகிரும்படி அந்நாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகச் செய்திகளின்படி சீன மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்கு அழைத்துவரப்படும் போக்கு மிக அதிகமான அளவில் அதிகரித்துள்ளது. குழந்தைகள் அனைவருமே சுவாசக் கோளாறுடனேயே அழைத்து வரப்படுகின்றனர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக நவம்பர் 12-ல் சீன தேசிய சுகாதார ஆணையம் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில், கொரோனா கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் எதிரொலியாகவே இந்தப் புதிய தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தச் சூழலில் SARS-CoV-2 வைரஸ் (கோவிட் தொற்று) பரவல், இன்ஃப்ளுயன்சா வைரஸ் பரவல், இன்னும்பிற தொற்றுகள் ஆகியனவற்றின் நிலவரம் குறித்து தெளிவான அறிக்கை அளிக்கும்படி உலக சுகாதார நிறுவனம் சீன அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. குழந்தைகளைப் பாதிக்கும் RSV வைரஸ், மைகோப்ளாஸ்மா நிமோனியா ஆகியனவற்றைப் பற்றியும் அறிக்கை கோரியுள்ளது.



கடந்த 2019 டிசெம்பரில் சீனாவில் பரவிய கொவிட்-19 தொற்றின் காரணமாக உலகம் முழுவதும் பல லட்சம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தற்போது பரவும் மர்ம நிமோனியா தொற்று உலக நாடுகளைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

# இஸ்ரவேல் – ஹமாஸ் 04 நாள் போர் நிறுத்தம் 24 பிணைக்கைதிகள் விடுவித்தது ஹமாஸ் இஸ்ரவேல் தரப்பில் 39 பாலஸ்தீனியர் விடுவிப்பு!

நவம்பர் 25, 2023

இஸ்ரவேல்-ஹமாஸ் 4 நாள் போர் நிறுத்தம் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. கத்தார் அரசு மத்தியஸ்தம் செய்ததை அடுத்து முதல்கட்டமாக ஹமாசிடம் இருந்து பிணைய கைதிகள் 25 பேரும், இஸ்ரவேல் சிறையில் இருந்த பாலஸ்தீனர்கள் 39 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இஸ்ரவேலைச் சேர்ந்த 13 பேர் தாய்லாந்தை சேர்ந்த 11 பேர் மற்றும் ஒரு பிலிப்பைன் நாட்டவர் உள்ளிட்ட 25 பேரை ஹமாஸ் விடுவித்தது.

அவர்கள் எகிப்து எல்லையான ரபா அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து உலங்க வானூர்தி மூலம் இஸ்ரவேல் கொண்டு செல்லப்பட்டனர்.

பிணையகைதிகள் அனைவருக்கும் இஸ்ரவேல் குழந்தைகள் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இஸ்ரவேல் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட 39 பாலஸ்தீன பெண் மற்றும் குழந்தைகள் மேற்கு கரைக்கு செஞ்சிலுவை சங்கத்தின் சிற்றூர்திகளில் பயணமாயினர். இருதரப்பில்



விடுவிக்கப்பட்டவர்களை காசா மற்றும் இஸ்ரவேலில் அவர்களது உறவினர்கள் மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர் .

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




ARASAN RAJADURAI

Real Estate & Developments Realtor

C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147

hello@argroup.ca
argroup.ca

RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# மாவீரர்கள்

## எமது சுதந்திர இயக்கத்தின் தூண்கள்

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது போராட்டத்திற்கு எதிராக பல்வேறு விரோத சக்திகளும் இணைந்து செயற்பட்டன. எமது வரலாற்று எதிரியுடன் வலிமை மிகுந்த வல்லரசுகளும் எமக்கு எதிராக அணி சேர்ந்து கொண்டன. சதிகளாக, நாசச்செயல்களாக, நம்பிக்கைத் துரோகங்களாக, ஏமாற்றும் படலங்களாக எமதியக்கம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. அலை அலையாக எழுந்த எதிரியின் படையெடுப்புகளை ஒரு புறமும், அன்னிய இராணுவ ஆக்கிரமிப்பை மறு புறமாகவும் நாம் தனித்து நின்று எதிர்கொண்டோம். பல கட்டங்களில் எமது இயக்கம் அழிவின் விழிம்புக்குத் தள்ளப்பட்டது. புயலாக எழுந்த இந்தப் பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்த மன உறுதி தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக, மனிதமலைகளாக உறுதி யோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்கமுடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது - சுதந்திர இயக்கத்தின் தூண் களாக நிற்கின்றன.

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, இன்னயிர்களை அர்ப்பணித்த தியாகிகளை இன்று நாம் நமது இதயத்தின் ஆலயங்களில் நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம். ஒரு புனித இலட்சியத்துக்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்துக்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வைத் தியாகம் செய்த மாவீரர்ள் மகத்துவமானவர்கள்.

நீண்ட விடுதலைப் பயணத்தில், சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம். போராட்ட வாழ்வின் பெரும்சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்காலம். மேலும் பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு, உறுதிகொண்ட மகக்ளாக ஒன்று திரண்டு நின்றால் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அசைக்கவே, அழிக்கவோ முடியாது. வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம். இன்று எமது மாவீரர்களின் கல்லறையிலிருந்து ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறுதியின் உன்னதத்தைத்தான் பாடுகின்றது.

மாவீரர்களது அற்புதமான தலட்சிய வாழ்க்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கிறது எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால், வியர்வையால், கண்ணீரால் எழுதப்பட்டது.










INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

Surrounding Area:
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

647-294-2996

# ஓ! மாவீரர்களே...!

"சாவு என்னை எதிர்பார்த்திருக்கிறது"
என்றான் கோழை.

"சாவை நான் எதிர்பார்த்திருக்கிறேன்"
என்றான் வீரன்.

ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

"மிதிபட்டுச் சாகிறேன்"
புலம்பினான் கோழை.

"போராடிச் சாகிறேன்"
உறுமினான் வீரன்.

ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

"காலம்
தமிழீழத்தை உருவாக்கும்"
காத்திருந்தான் கோழை.

"காலத்தை
நான் உருவாக்குவேன்"
களமாடினான் வீரன்.

ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

"உயிர்வாழ விரும்புகிறேன்"
முனகினான் கோழை.

"மானத்தோடு
உயிர்வாழ விரும்புகிறேன்"
முழங்கினான் வீரன்.

ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

ஓ! மாவீரர்களே!
இதுதான் உண்மை.

உங்கள் உயிரின் வலிமை
அறிந்து எதிரி
உங்களை அழித்தான்.

ஆனால், அவன்
ஏமாந்து போனான்.

ஏனென்றால் –
உங்கள் உயிரிலும்
வலிமை மிக்கது
எங்கள் சாவு.

– காசி ஆனந்தன்



எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்நத எமது மாவீரர்களை நினைசூவுகூரும் இப் புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக் கனவை, எத்தகைய இடர்கள், சாவல்களை எதிர்கொண்டபோதும் நிறைவு செய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.

*– தமிழத் தேசியத் தலைவர்*
*மேதகு. வே. பிரகாரன் அவர்கள்*




# முல்லைத்தீவு இராணுவத் தளம்: வடகரையின் வாளேந்திய சிங்கம்!

தமிழர் தாயகக் கோற்பாட்டின் "உயிர்மையம்" முல்லை மாவட்டத்திலேயே உள்ளது.

இதனால் "வாளேந்திய சிங்களத்தின் வெட்டிலக்கு" முல்லை மாவட்டமேயாகும்.

சிங்களக் குடியேற்றங்களை நிறுவி - இராணுவ முகாம்களை அமைத்து, முல்லைத்தீவு நிலத்தைச் சிங்கள மயமாக்குவதன் மூலம், வடக்குக் கிழக்கிற்கு இடையே ஒரு நிரந்தர தடுப்புச் சுவரை எழுப்பி விடுதல், சிங்களப் பேரினவாதத்தின் திட்டமாகும்.

இந்தவகையில், முல்லைத்தீவு இராணுவத்தளம், மணலாற்றுச் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

அத்துடன், வடபுலக்கடலின் நுழைவாசலில் முல்லைத்தீவு அமைந்துள்ளது. இதுகாரணமாக படையினரின் கப்பற்போக்குவரத்து விடயத்தில் முல்லைத்தீவுத் தளம்ஒரு "காவற்கோபுரம்".

இதேவேளை, வடக்குக்கிழக்குப் பிராந்தியக் கடல்களில், கடற்புலிகளின் நகர்திறனைத் தடுக்க முயலும் சாட்டைபோலவும் முல்லை இராணுவத்தளம் செயற்பட்டது. இந்தளவுக்கு அரசியல் - இராணுவ ரீதியில் முல்லைத்தீவுப் படைத்தளம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலையமாகும்.

மூன்றாம்பிறை வடிவத்தில் நந்திக்கடல் நீரேரி முல்லைத்தீவு இராணுவத்தளத்தை அரண்செய்துள்ளது. அதன் மிஞ்சிய பகுதியைப் பெருங்கடல் பொத்தி மூடிவைத்திருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில், அமையின் மேல்ஒடு கீழ்ஒடு போல வங்கக் கடலும் நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.

தளத்தின் தென்புறப் பகுதியில் மட்டும் ஒரு தரைவாசல் இருந்தது. அதுவும் ஒரு படையணி ஊடுருவிச் செல்ல முடியாத அளவுக்குச் சதுப்புநிலத்தாலும் வெட்டவெளிகளாலும் அரண் செய்யப்பட்டுக் கிடந்தது.

தளத்தின் வடமேற்குப் பகுதியான "வட்டுவாகல்" பாலத்திலிருந்து தளத்தின் தென்கிழக்குப் பகுதியான "சிலாவத்தை" வரையிலான தூரம் ஏறக்குறைய மூன்று மைல் நீளமாகும். அதேவேளை, பெருங்கடலில் இருந்து நந்திக்கடல் நீரேரிவரை, ஏறக்குறை ஒன்று ஒன்றரை மைல் தூர அகலத்தையும் கொண்டதாக முல்லைத்தளம் அமைந்திருந்தது. அதாவது சுமார் ஐந்து சதுரமைல் பரப்பளவில் இந்தப்படைத்தளம் அமைந்திருந்தது.

1968ஆம் ஆண்டு முல்லைத்தீவில் முதல்முதலில் ஒரு சிங்கள இராணுவ முகாம் ஏற்படுத்தப்பட்டது.

அதேவேளை, நந்திக்கடல் நீரேரிக்கும் முல்லைப் படைத்தளத்திலுள்ள பழைய இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு "விமான ஓடுபாதை" கட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஒரு சிறிய நிலப்பரப்பில் இருந்த இந்த இராணுவ முகாம், பின்னர் படிப்படியாக விரிவாக்கம் பெற்றது. "இரண்டாம் ஈழப்போரின்" ஆரம்பத்துடன் இந்த முகாம் பெருமேடுப்பில் விஸ்தரிக்கப்பட்டு ஒரு இராணுவத்தளம் என்ற, தற்போதைய பாரிய வடிவத்தை எடுத்தது.

தளப்பிராந்தியத்தின் பூகோள அமைப்பு அதன் பாதுகாப்பிற்குப் பெரிதும் துணைநின்றது. பெருங்கடல் - நீரேரி - வெட்ட வெளிகள் - சதுப்புநிலங்கள் என்பன, புலிவீரர்களின் ஊருடுவலுக்கு அல்லது படை நடாத்தலுக்குத் தடையாக இருந்தன.

இந்த இயற்கைப் பாதுகாப்புடன் - தளத்தின் பாதுகாப்பை அதிகப்படுத்தும் வகையில், மேலும் பல தற்காப்பு ஏற்பாடுகளைப் படையினர் ஏற்படுத்தினர்.

தளப்பகுதியைச் சுற்றி மண் அணையுடன் கூடிய ஒரு தடுப்பு வேலி இடப்பட்டிருந்தது. தளப்பிராந்தியத்தைச் சூழ இருந்த




வேலி முழுவதும் பனைஓலைகளாலும் தகரங்களாலும் மறைக்கப்பட்டிருந்தது.

**"ஏ.வண் பாதுகாப்பைக் கொண்டிருந்த முல்லை இராணுவத்தளம் புலிகளின் ஏ.வண் தாக்குதலால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டுது."**

இயற்கைப் பாதுகாப்பிற்கு அடுத்ததாக, படையினர் இட்ட முதலாவது சுற்றுப் பாதுகாப்பு ஏற்பாடு அது. இந்தத் தடுப்புவேலி சிலிப்பர்கட்டைகள், மண்சாக்குகள், மரக்குற்றிகள் மற்றும் கொங்கிறீற் கற்கள் போன்றவற்றால் அமைக்கப்பட்டிருந்தது. இதேவேளை, தளத்திற்கு வெளிப்புறத்தில் மறைந்திருந்தபடி தளத்தின் உட்புறத்தில் என்ன நடக்கின்றத - என்ன இருக்கின்றது - என்பதைப் புலிகள் கண்டுகொள்ளாதவாறு, தடுப்பு

இந்த வெளிப்புறவேலி அரணிலிருந்து 30 அல்லது 40 மீற்றர் நீளப் பகுதிகளிலுள்ள பற்றைகள், கட்டடங்கள் அகற்றப்பட்டு வெட்டவெறியாக வைக்கப்பட்டிருந்தன. வேலி அரணை அண்மிக்க முனையும் எவரையும் காவற் கடமையிலுள்ள படையினர் மிகச் சுலபமாகக் காணும்வகையில் அந்த ஏற்பாடு இருந்தது. இந்தப்பகுதி மிதிவெடிகளாலும் "கிளைமோர்" கண்ணிகளாலும் நிரப்பப்பட்டிருந்தது. சில இடங்களில் நிலத்திலிருந்து அரை அடி உயரத்தில் முட்கம்பிப் பாத்திகளும் அமைக்கப்பட்டுக்கிடந்தன. இது, அனைத்துவகை ஊர்ந்துசெல்லும் முறைகளையும் தடுத்துவிடும்.

இந்தத் தடுப்புவேலி எங்கும் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுக் கிடந்தன. அவை இரவைப் பகலாக்கின. இந்த மின்குமிழ் ஒளியையும் மீறி, படையினருக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படுமாயின், அதைப்போக்குவதற்கு வசதியாகச் சக்திவாய்ந்த "தேடொளி" (Search Light) வேலி அரண்களில் பொருத்தப்பட்டுக் கிடந்தன.

வெளிப்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டி புலிகள் உள் நுழைந்தாலும், தளத்தின் மையப்பகுதியைச் சென்றடைய விடாது தடக்கும்வகையில் தளத்தின் உள்ளேயும் பல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெளிப்புற தடுப்புவேலிப் பாதுகாப்பு ஏற்பாட்டைப்போல், உள்ளேயும் மூன்று நான்கு




வலயங்களாகத் தடுப்பேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் ஒரு வலயத்தில் நூற்றுக்கணக்கான வாகனக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்தன. தளத்தின் உள்ளேயே வாகனக்கண்ணிகளைப் புதைக்கும் அளவுக்கு தளத்தின் பாதுகாப்பு இறுக்கப்பட்டிருந்தது. அத்துடன், தளப்பகுதியில் இருந்த ஒவ்வொரு வீடும் ஒவ்வொருகட்டடமும் படையினரின் காவல் நிலைகளாகவே இருந்தன. இவை தவிர தளத்தின் மையப்பகுதியில் இருந்த “ஆட்டிலறி” ஏவுதளமும் பிரதான முகாமின் தலைமையகமும் வேலிமேல் வேலியிடப்பட்டு அணுகமுடியாத அதிஉயர் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன.

தளப்பிராந்தியத்திற்கு இயற்கை கொடுத்த பாதுகாப்புடனும், தளத்தினுள் தாம் ஏற்படுத்திய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் மட்டும் படையினர் திருப்தியடையவில்லை. தளத்திற்கு வெளியே அதாவது தளத்தின் வெளிவேலிக்கு அப்பால், ரோந்துச் சென்றிகளையும் அவதானிப்புக் குழுக்களையும் அனுப்பி, தளத்தின் வெளிப்புறத்தையும் படையினர் சதா கண்காணித்தனர். புலிகளின் வேவு வீரர்களை எல்லைக்கு வெளியே வைத்து அழிக்கும் திட்டத்தின் செயற்பாட்டு வடிவமே இதுவாகும்.



இந்தளவுக்கு முல்லைத்தீவுத் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. “ஏ-வண்” (A-One) தரத்தில் முல்லைத் தளப் பாதுகாப்பு இருந்ததாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**மூன்றாம்பிறை வடிவத்தில் நந்திக்கடல் நீரேரி முல்லைத்தீவு இராணுவத்தளத்தை அரண்செய்துள்ளது. அதன் மிஞ்சிய பகுதியைப் பெருங்கடல் பொத்தி மூடிவைத்திருக்கின்றது.**

**ஒட்டுமொத்தத்தில், ஆமையின் மேல்ஓடு கீழ்ஓடு போல வங்கக் கடலும் நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.**

இவ்விதம், அதிஉயர் பாதுகாப்பில் இருந்த முல்லைத்தளத்தை புலிகள் எப்படித்தாக்கி அழிந்தனர்?

இதற்கா விடை, தலைவர் பிரபாகரன் வரைந்த தாக்குதற் திட்டத்திலும் அதற்கான தந்திரோபாயத்திலுமே இருக்கின்றது. அத்துடன், ஆயிரக்கணக்கான போராளிகளைத் தயார்ப்படுத்தி சண்டை நிலைமைகளுக்கு ஏற்றாற்போல் களமுனைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கிய தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலும் இருக்கின்றது.

மேலும், புயலை ஒத்த வேகத்துடனும் “புலி” யை ஒத்த வீரத்துடனும் களமாடிய புலிவீரர்களின் போர்த்திறனிலும் அது புதைந்து கிடக்கின்றது.

**18ம் திகதி அதிகாலை முல்லைத்தளம் மீது – ஒரேசமயத்தில் பலமுனைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை இடம் – நாள் – தாக்குதற் பரிமாணம் என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை.**

18ம் திகதி அதிகாலை முல்லைத்தளம் மீது - ஒரேசமயத்தில் பலமுனைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை இடம் - நாள் - தாக்குதற் பரிமாணம் என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை.

பலம்வாய்ந்த தனது தற்பாதுகாப்பு நிலைகள் புலிகளால் தகர்த்தெறியப்படும் என்று படை வட்டாரம் நம்பியிருக்கவில்லை. ஆனால், படையினரைத் திகைப்பில் ஆழத்தியபடி அது நிகழ்ந்து விட்டது.

**சிங்களக் குடியேற்றங்களை நிறுவி ஸ்ரீ இராணுவ முகாம்களை அமைத்து, முல்லைத்தீவு நிலத்தைச் சிங்கள மயமாக்குவதன் மூலம், வடக்குக் கிழக்கிற்கு இடையே ஒரு நிரந்தர தடுப்புச்சுவரை எழுப்பி விடுதல், சிங்களப் பேரினவாதத்தின் திட்டமாகும்.**

தளத்தைப் புலிகள் கைப்பற்றியபோது, இரண்டு “ஆட்டிலறி” ஏவுகருவிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிபொருட்களும் புலிகளின் கைகளுக்கு வந்தன. 1,200க்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். முல்லைத்தீவுப் படைத்தளம் அமைந்திருந்த நிலமும் மீட்கப்பட்டு விட்டது.

## முல்லைச் சமர்




படைத்தளத்தை மீண்டும கைப்பற்றவெனத் தளத்திற்கு அருகே தரையிறக்கப்பட்ட “கொமாண்டோ” அணியினராலும் முல்லைத்தளத்தை மீண்டும் கைப்பற்ற முடியவில்லை. தரையிறக்கப்பட்ட படையினரும் – ஒட்டுமொத்த அழிவைத் தடுப்பதற்காகப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இந்தத் தரையிறக்கச் சண்டையில் சிங்களக் கடற்படையின் பீரங்கிக் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டது. 150 ற்கும் மேற்பட்ட கொமாண்டோக்களும் பலியாகியுள்ளனர்.



\- களத்தில் 06.11.1996






எமக்கு ஒரு நாடு வேண்டும்
எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்
என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே,
மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது
மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின்
விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப்
பிரகடனமாகவே சம்பவிக்கின்றது

*தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# 17 ஆம் ஆண்டு
# வீரவணக்கம்



04.03.1938 **தேசத்தின் குரல்** 14.12.2006

# அன்ரன் பாலசிங்கம்

[அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மண்ஹூர், மட்டு ...கரவெட்டி, யாழ்]

*விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.*

*-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -*

PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles



பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்




T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com

வேலை இழப்பா?
வருமான பிரச்சனையா?
வேலை தேடுகிறீர்களா?
கவலையை விடுங்கள்




வாருங்கள் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
வழிகாட்டும்
உங்கள் நண்பன்
நாதன் பாலசிங்கம்
416.513.1000

MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

SUBRA
MORTGAGE SOLUTIONS



NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com

Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits

Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits

Powered by Mortgage Alliance
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
TD Canada Trust | Scotiabank | First National | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG | MCAP

Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# ஒதியமலைப் படுகொலை 01.12.1984

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டு சுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் நெடுங்கேணிக்கு அருகில் ஒதிய மலை என்ற கிராமம் அமைந்துள் ளது. தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் குற்றச் செயல்களில் தண்டனை பெற்ற சிங் களக் குற்றவாளிகளும் அவர்கள் குடும்பங்களும் இராணுவப் பாது காப்புடன் சிங்கள அரசு குடியேற்றி வந்தது. அந்த வகையில் கென்பாம், டொலர்பாம் போன்ற இடங்களைத் தொடர்ந்து ஒதியமலைப் பகுதி யிலும் குடியமர்த்தப்பட்டார்கள்.



1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தொன்பதாம் திகதியி லிருந்து மார்கழி இரண்டாம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. மார்கழி மாதம் முதலாம் திகதி பதவியாவிலிருந்து ஒதிய மலை கட்டுக்கரை ஊடாக வந்த இராணுவத்தினர் ஒதியமலைக் கிராமத் தைச் சுற்றிவளைத்தனர். மக்கள் அதிகாலை வீட்டின் கதவு களைத் திறந்தபோது பச்சை நிற உடைகளுடனும் ஆயுதங்களுட னும் இராணுவத்தினர் நின்றனர். “நாங்கள் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தினுள் கூட்டம் வைக்கப் போகிறோம் ஆம்பிளைகள் மட் டும் வாங்க என சரளமாகத் தமிழில் கூறி, முற்பதிற்கும் மேற்பட்ட ஆண் களை கைது செய்து கிராம அபி விருத்திச் சங்கக் கட்டடத்திற்குள் அழைத்துச் சென்றனர். அவர் களின் கைகளை பின்னாற் கட்டி சித்திரவதை செய்து சுட்டும் வெட் டியும் படுகொலை செய்தனர். இராணுவம் சென்றபின் அங்கு சென்று பார்த்தபோது கைதுசெய் யப்பட்டவர்களில் இருபத்தேழு பேர் மிகவும் கோரமாக கொல்லப்பட்டு மண்டபத்தினுள் கிடந்தார்கள். இறந்தவர்களில் அனேகர் திருமண மாகிக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். பலர் முதியவர்கள், சிலர் கிளிநொச்சி மாவட்டம், பளை, பச்சிளைப் பள்ளியிலிருந்து வயல் வேலைக்காக ஒதியமலை வந்தவர் கள், வேறு சிலர் அயல்க்கிராமமான பட்டிக்குடியிருப்பிலிருந்து உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தவர் களாவார்கள். இராணுவத் தினரால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத் தினை தொடர்ந்து ஒதியமலைக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் உள்ள பாட சாலைகளிலும் கோயில் களிலும் தஞ்சமடைந்தார்கள்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தலை வர் நா.கந்தசாமி இப்படுகொலை தொடர்ப்பாகக் குறிப்பிடுகையில்:

“அன்றைய தினம் காலை 6.30 மணியளவிலே எமது கிராமத்திற் குள் புகுந்த இலங்கை இராணுவத் தினர் எமது கிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமது கிராம மக்களில் கண்ணிற்பட்டவர் களையெல்லாம் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக்கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டு வந்தனர். அந்த நேரத் திலே அவ்வீதியாற் சென்ற செல் வராசா என்பவரது உழவு இயந் திரத்தை மறித்து அதிலிருந்தவர் களையும் பிடித்து கிராம அபிவிருத் திச் சங்கக் கட்டடத்திற்குக் கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந் து துப்பாக்கிச் சூட்டுச்சத்தமும் கேட் டது. அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கண பதிப்பிள்ளை, பொன்னம்பலம், சின் னையா, கனகையா, ஆகியோரைத் தங்களது பாதுகாப்பிற்காக அவர் களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந் திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்று விட்டார்கள்.

இராணுவம் வந்ததை அறிந்து காட் டுக்குச் சென்றிருந்த நான் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத் தினுள்




ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இருபத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய் திருப்பதைக் கண்டேன். நான் பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண் ணீர் எனக் கேட்டுக் கொண்டு இறந் ததையும் கண்டேன். பின்னர் அவர் களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களை சீராக கட்டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங் கிருந்து கால்நடையாக முல்லைத் தீவு நோக்கி ஓடினோம்.

அந்த நேரம் இராணுவக் கெடு பிடிகள், ஊரடங்கு உத்தரவுகள் அதையும் மீறி பெரிய முயற்சி யெடுத்து அரசாங்க அதிபர், காவல்த் துறை அதிகாரிகள், நீதியாளர்கள், உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள் என அனை வரையும் அழைத்து வந்து நடந்த சம்பவத்தைக் காட்டினோம். இறந் தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், காதுகள், மூளைகள் வெளியிலே வந்த கோரக்காட்சியைப் பார்த்து அவர்கள் கதிகலங்கிப் போனார் கள். பின்னர் முழுக் கிராமத்தின ரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு முன்பாக பெரிய மரங் கள் போட்டு அதன் மேல் அவர் களை அடுக்கித் தீ மூட்டினோம். அதன் பின்பு இறந்த உறவுகளை நினைத் து அழுது புலம்பிக்கொண் டிருக்கும் சமயம் முல்லைத்தீவி லிருந்தும் சிலோன் தியேட்டர், டொலர்பாம், கென்பாம்களிலிருந் தும் இராணுவத்தினர் ஒதியமலை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் பாதுகாப்பிற்காக நெடுங்கேணி நோக்கி வந்தோம்.”

வெலிஓயா சிங்களக் குடியேற்றத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒதிய மலைக் கிராமம் தொடர்ப்பாக அக் கிராம வாசியான சிவசேகரம் சததிய நாதன் அவர்க்களின் ஒதியமலைப் படுகொலைகள் தொடர்ப்பான சுரக் கக் குறிப்பு.

“நான் பிறந்து வளர்ந்த பூர்வீகக் கிராமம் வெலிஓயா எனச் சொல்லப் படும் சிங்களக் குடியேற்றத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலைக் கிராமம் ஆகும். அதற்கு அடுத்தாற் போல் பெரியகுளக் கிராமமும் காணப்படுகின்றது. 1984ம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதி யன்று வெலிஓயாக் கிராமச் சிங் களக் காடையர்களும், சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து ஒரே இடத்தைச் சேர்ந்த இருபத் தேழு அப்பாவிப்






பொதுமக்களை யும், அதற்கு முதல் நாள் ஐந்து பொதுமக்களையும் கைதுசெய்து சென்றனர். கென்பாம் என்கின்ற இடத்தில் வைத்து இவர்கள் அனை வரையும் சுட்டுக் கொன்றார்கள். அதன் தொடராக இவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வருவதும் கண்ணிற்படுபவர்களைப் பிடித்துச் சுடுவதுடன், இங்கு வசித்த தமிழ் மக்களின் பொருட்களைக் கொள் ளையடிப்பதும், வழக்கமாக இருந் தது. குறிப்பாக விளைபொருட்களை யும் விவசாய இயந்திரங்கள், துவிச் சக்கரவண்டிகளென என்னவாக இருந்தாலும் எடுத்துச் சென்று விடு வார்கள்.

நானும் எனது உறவினரான இராஜரட்ணம் என்பவரும் ஒரிடத்தில் ஒளிந்திருந் தோம். என்னைத் தேடி வந்த பொன்னம்பலத்தின் மகனை இரா ணுவத்தினர் கலைத்துச் சுட்டார்கள்.

அதன் பின்னர் அவனைத் தேடி வந்த மூத்த சகோதரன் தம்பி இறந்து இருப்பதைப் பார்த்து அழுது கொண்டிருந்த சமயம் அவரையும் சுட்டுவிட்டு வல்லிபுரத்தின் மகனான பேரின்பநாயகம் என்ப வரையும் பழம்பாசிக் கிராமத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளையின் மக னான கைலையையும், சிவலிங்கத் தின் மகனையும் சுட்டுக் கொலை செய்தனர். ஈசன் என்பவருக்கு கை யில் வெட்டுக்காயம் பட்ட நிலையில் உயிர் தப்பி வந்தார். இப்படியாக இரண்டு நாட்களாக பாரிய அட்டூ ழியங்கள் செய்தார்கள். கிட்டத்தட்ட பதின்நான்கிற்கும் மேற்பட்ட பொது மக்களைக் கொலை செய்திருந்தார் கள். இப்படியாக இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்த வண்ணமிருந்தது. இவ்வாறான செயற்பாடுகளை நடத்தி இப்பிரதேச வாழ் தமிழ் மக்கள் அனைவரை யும் அங்கிருந்து வெளியேற்றி அப் பிரதேசத்தை ஒரு சிங்களக் குடி யேற்றப் பிரதேசமாக்குவதே அவர் களின் குறிக்கோளாக இருந்தது. ஏனென்றால் சிலோன் தியேட்டர் மற்றும் அங்கு காணப்பட்ட டொலர் பாம், கென் பாம் போன்ற பண்ணைகளிலும் தமிழர்கள் இருந்தார் கள். அவர்களுக்கு 1984ம் ஆண்டு காலப்பகுதியில் இவ் விடங்களை விட்டு வெளியேற வேண்டுமென்ற நேரடியான இராணுவ அச்சுறுத்தல் இருந்தது. அதாவது 1984ம் ஆண் டு ஆறாம் மாதமளவில் நேரடியாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இத னைத் தெரிவித்து தமிழரை வெளி யேற வைத்த சம்பவம் இடம்பெற் றது. அதன்பின்னர் தென்னிலங் கையின் சிறைகளிலிருந்த ஆயுட் கைதிகளுக்கு ஆயுதங்கள் வழங்கி புனர்வாழ்வு என்ற பெயரில் இங்கு குடியேற்றி அவர்களையே இராணு வக் காடையர்களாகவும் பயன்படுத் தி வந்தனர். இவர்களது கொலைக் கொள்ளைச் சம்பவங்கள் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந் தத்திற்குப் பின்னர் வரை நீண்டு சென்றது.



**01.12.1984 அன்று ஒதிய மலைப் படுகாலையில் கொல்லப்பட் டோர் விபரம்**

01. நாகமணி சின்னையா - 50
02. நாகரத்தினம் கேதீஸ்வரன்-23
03. நல்லையா நவரட்ணம் - 17
04. கந்தையா கனகையா - -
05. கந்தையா பொன்னம்பலம்-48
06. கந்தையா சிவசிதம்பரம் - 35
07. கிருஸ்ணபிள்ளை இராச லிங்கம் - 29
08. கறுப்பையா தங்கராசா - தொழி லாளி 18
09. கணபதிப்பிள்ளை சின்னையா - 35
10. கணபதிப்பிள்ளை சிவபாதம் 28
11. தாமோதரம்பிள்ளை கணபதிப் பிள்ளை - 51
12. தாமோதரம்பிள்ளை சதாசிவம் - 46
13. தம்பிஜயா காசிப்பிள்ளை - 45
14. தம்பிஜயா வேலுப்பிள்ளை - 38
15. தம்பிஜயா சுப்பிரமணியம் - 26
16. தம்பிஜயா சிவஞானம் - 23
17. அழகையா ஜெககாதன் - 17
18. கோவிந்தர் கணபதிப்பிளளை - 55
19. பொனன்ம்பலம் தேவராசா - 25
20. வேலுப்பிள்ளை சிதம்பரப் பிள்ளை - 36
21. சுப்பையா கெங்காதரன் - 26
22. சின்னையா இராசேந்திரம் - 21
23. சிதம்பரப்பிள்ளை இராசையா - 27
24. சங்கரப்பிள்ளை சபாரத்தினம் - 40
25. சங்கரப்பிள்ளை சண்முகசுந் தரம் - 25
26. சண்முகராசா இரவிச்சந்திரன் - 16
27. வீரகத்தி தில்லைநடராசா - 25

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடிய வில் லை.



இவ்வாறான அட்டூழியங்கள் இடம் பெற்று வரும்வேளை குறிப்பாக 1986ம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தாறாம் திகதி காட்டுப் பகுதி யால் வந்த இராணுவத்தினர் மாலை 3.00 மணியளவில் திரு கோளம் என்று சொல்லப்படும் இக் கிராமத்தில் சுப்பிரமணியம் என் பவரின் கடைக்குள் வைத்து கார்த் திகேசு விசுவலிங்கம், பழனி யாண்டி செல்லத்துரை என்ற இரு வரையும் உயிருடன் கடைக்குள் வைத்துத் தீமூட்டி எரித்த சம்பவம் நடந்தது. இச்சம்பவம் நடந்ததால் பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த அப்புத்துரை என்பவர் அவருக்குச் சிங்களம் தெரியுமாதலால் அந்தக் காடையர்களிடம் சென்று "ஏன் இவ்வாறான அநியாயம் செய்கிறீர் கள், யார் உங்களுக்கு அதிகாரம் தந்தது" என்று கேட்டதற்காக அவ ரின் வாய்க்குள் துப்பாக்கியாற் சுட்டு ஜெயம் என்பவரின் வீட்டிற்குள் போட்டு எரித்ததுடன், தொடர்ச்சியாக அப்பகுதியிலிருந்த பதினைந்திற் கும் மேற்பட்ட வீடுகளை எரித்த பின்னர் படையினர் காடுகளுக்குள் பதுங்கியிருந்தார்கள். அதற்கு அடுத் தநாள் விடியற்காலை பதவியாப் பகுதியிலிருந்து வாகனங்களில் இராணுவத்தினர் வந்ததைத் தொடர்ந்து நெடுங்கேணிப் பிர தேசத்தைச் சுற்றிவளைத்தனர். இதன்போது இராணுவம் கிரா மத்துள் இருக்கிறதா இல்லையா எனத் தெரியாமல் வந்த பல அப் பாவி மக்கள் அதனிடம் மாட்டிக் கொண்டார்கள். அப்படி வந்தவர் களிற் பலர் சுடப்பட்டார்கள். குறிப் பாகச் சொல்லப்போனால் வினாசிக் குளத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரும் அவருடைய இளைய மகனும் என்னுடைய கடைக்கென வந்தவிடத்தில் அந்த நேரம்



# செட்டிக்குளம் படுகொலை 02.12.1984




வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக வவுனியா-மன்னார் வீதியில் வவுனியா நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் செட்டிக் குளம் அமைந்துள்ளது. இக்கிராமத் தில் விவசாயிகள், வர்த்தகர்கள், கூலித்தொழிலாளர்கள், அரச உத்தி யோகத்தர்கள் எனப் பலரும் வாழ் கின்றார்கள்.

1984.12.02 அன்று இராணுவத் தினரால் செட்டிகுளப் பகுதி எங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டது. இராணுவத்தினர் செட்டிக் குளம் கிராமத்தினை காலை 5.30 மணியளவில் சுற்றிவளைக்கத் தொடங்கினார்கள். கிராம மக்களில் கூடுதலானவர்கள் உறக்கத்தில் இருந்தனர். செட்டிகுள கிராமத்திற் குள் நுழைந்த இராணுவத்தினர் கிராம மக்களில் ஆண்களை விசார ணைக்காக அழைத்துச் சென்றார் கள். இவர்களில் ஐம்பத்திரண்டு பேரைச் செட்டிகுளச் சந்தியில் வைத்து இராணுவ வாகனங்களில் ஏற்றி மதவாச்சிக்குக் கொண்டு சென்றனர். இதன்பின் இவர்கள் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. ஆனாலும் இவர்கள் மதவாச்சி யிலுள்ள ஓர் சிங்களக் கிராமத்தில் வைத்து இராணுவத்தினரால் வெட் டிப் படுகொலை செய்யப்பட்டனரென் றும் குற்றுயிராக இருந்தவர்கள் மீது டோசரை ஏற்றிக் கொன்றனரென் றும் செட்டக்குள மக்கள் கூறுகின் றனர்.

செட்டிகுளம் மகா வித்தியாலய ஆசி ரியரான தி.யேசுதாசன் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில்:

“ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டு வந்த இராணுவத்தினர் சுற்றி வளைத்து ஐம்பத்திரண்டு ஆண் களைக் கைது செய்து விசாரணைக் காக அழைத்துச் சென்றனர். இச்சம் பவத்தில் எனது தம்பியும் எனது அக் காவின் கணவரும் உயிரிழந்தனர். அத்துடன் எனது வீட்டில் வேலை செய்த இருவரும் கைது செய்யப் பட்டனர், சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன்பின்பு அவ்வூர் மக்கள் வன்னி, மடு, இந்தியா போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்.”

**02.12.1984 அன்று படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம்**

01. சூசைப்பிள்ளை கிறிஸ்துராசா (கமம் - 32)
02. இராசையா - -
03. இராமசாமி பொன்னுத்துரை (கமம் - 45)
04. ஊர்கனசாமி கமம் (23)
05. கந்தையா - -
06. கந்தையா கெங்காரட்ணம் - -
07. குமார் மோகன் - -
08. குமார் வரதராசா வியாபாரம் (19)
09. குருகுலசாமி (கமம் - 23)
10. குலசேகரம்பிள்ளை யூஜின் (கமம் -18)
11. பாண்டியன் பெரியரசு - -
12. பி.அருள்பிரகாசம் (கமம் - 30)
13. பிலிப்பையா அருள்பிரகாசம் (கமம் - 38)
14. பரமலிங்கம் பரமநாதன் - -
15. ஐயம்பிள்ளை பரமநாதன் (கமம் - 33)
16. துரையப்பா நாதன் - -
17. முத்துசாமி கோணார் கோபால் - -
18. முருகேசு சங்கரப்பிள்ளை (தொழிலாளி - 38)
19. அப்பாப்பிள்ளை வெற்றிவேற்பிள்ளை (கமம் - )
20. அல்பின் றொபின்சன் (கமம் - 26)
21. அல்வின் அந்தோனிஸ் ரிவின்சன (தச்சுத் தொழில் - 24)
22. அல்வின் அலைக்சாண்டர் (தச்சுத் தொழில் - 21)
23. அல்வின் அன்ரன் - -
24. பொன்னுத்துரை கிறிஸ்துராசா - -
25. பொன்னுத்துரை தனநாயகம் - -
26. டொண்பொஸ்கோ றொமன் - -
27. சௌந்தரராசன் புஸ்பராசன் (மரவேலை - 27)
28. செல்லையா யூட் - -
29. செல்லையா கேதீஸ்வரன் (கமம் - 28)
30. செல்லர் மூர்த்தி - -
31. செல்லர் மகேந்திரன் - -
32. வேதநாயகம் செபமாலை (கமம் - 31)
33. வேலுப்பிள்ளை சிவபாலசிங்கம் (விவசாயம் - 35)
34. சந்தணப்பிள்ளை இருதையராசா (கமம் - 25)
35. சின்னக்குட்டி கந்தசாமி - -
36. சிவகணேசன் - -
37. சங்கரப்பிள்ளை பாலேந்திரன் (கமம் - 29)
38. வடிவேல் அசோக்குமார் - -
39. விநாயகமூர்த்தி யோகநாதன் (கமம் - 24)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

# கொக்கிளாய் – கொக்குத்தொடுவாய் படுகொலை 15.12.1984

கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி போன்றன தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்களாகும். இப்பிரதேசங்கள் மீன்பிடிக்குப் புகழ் மிக்க பிரதேசங்களில் ஒன்றாகும். இம்மக்களும் நல்ல செல்வச் செழிப் புடன் வாழ்ந்துவந்தார்கள். 1984. 12.15 ஆம் திகதி இராணுவச் சிப் பாய்கள் முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, குமுழமுனை, அளம்பில் ஆகிய சிராமங்களுக்குள் நுழைந்து சொத்துக்களை நாசம் செய்ததுடன் மக்களைப் படுகொலையும் செய் தனர். இச்சம்பவத்தில் கருநாட்டுக் கேணி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய கிராமங்களை விட்டு இரண்டாயிரம் தமிழ் குடம் பங்கள் கையில் கிடைத்த பொருட் களை மட்டும் எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்தனர். இச்சம்பவத் தின்போது இதில் முப்பத்தொரு பெண்கள், இருபத்தொரு குழந் தைகள் உள்ளடங்கலாக நூற்று முப்பத்தொரு பேர் உயிரிழந்தனர்.

[redacted]

# சுண்டிக்குளம் நல்லதண்ணித் தொடுவாய் மீதான கிபீர் குண்டுவீச்சுத் தாக்குதல் 02.12.1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டா வளைப் பிரதேசசெயலர் பிரிவின் எல்லைக் கிராமமாகச் சுண்டிக் குளம் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இப்பிரதேசத்தில் பறவைகள் சரணாலயம் காணப் படுவது சிறப்பம்சமாகும். கடலும் கடல் சார்ந்த இப்பிரதேசத்தில் மீன் பிடி பிரதான தொழிலாகும்.

கடற்படையின் வடக்குக் கிழக்கில் கடற்கரையோரப் பகுதிகளில் வாழ் கின்ற மக்கள் மீது பல்வேறு கால கட்டங்களிலும் தொடர்ச்சியான தாக் குதல்களை மேற்கொண்டு வந் தனர். இந்தவகையில் சுண்டிக் குளக் கிராமமும் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது.

1995 ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த உடுத்துறை, தாளையடி, ஆழியவளைப் பிரதேச மக்கள் தமது தொழில் நிமித்தம் சுண்டிக்குளப் பகுதியில் வந்து சிறிய குடிசைகள் அமைத்து கடற் கரையை அண்டிய பிரதேசங்களில் குடியேறினார்கள். இம்மக்கள் கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது வாழ்க்கையை ஓட்டுவதற்காக கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவ் வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது 1998.12.02 ஆம் திகதி நண்பகல் 12:00 மணியளவில் விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங் கள் இப்பகுதி வான் பரப்பினுள் பேரிரைச்சலுடன் நுழைந்து விட்டமிடத் தொடங்கின. இதனைக்கண்ட மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சுமார் பத்து நிமிடங்கள் வரை அப்பகுதியை வட்டமிட்ட பின்னர் அவை நல்லதண்ணித் தொடுவாய் குடியேற்ற முகாம் மீது ஆறு குண்டுகளைப் போட்டன. இக்குண்டுவீச்சுத் தாக்குதலினால் சிறுவர்கள், பெண்கள் உட்பட மொத்தம் எழு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, பலர் காயமடைந்தனர்.

1. விஸ்வலிங்கம் யோகராணி (38, உடுத்துறை)
2. யோகச்சந்திரன் மல்லிகாதேவி (36, தாளயடி)
3. சிவா (13, மாணவன்)
4. கமலநாதன் தணுசா (15, மாணவி, உடுத்துறை
5. இராசலிங்கம் சுதாஸ் (13, மாணவன்)
6. வேலுப்பிள்ளை செல்லத்துரை (75)

காயமடைந்தவர்களின் விபரம்

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (48)
சுப்பிரமணியம் கெங்களூபி (16, மாணவி)
கே. சோதிமலர் (38)

[redacted]

# குமுழமுனைப் படுகொலை 02.12.1984

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் குமுழமுனைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன அமைந்துள்ளன.

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் குமுழமுனைக் கிராமம் அதிகாலையில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்படுவதும், மக்கள் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதும் வழக்கமாக இருந்தது.

வழமைபோல 01.10.1984 அனறு அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து 29.11.1984 அன்றும் பலர் கைது செய்யப்பட்டனர். இதில முன்பு கைதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் ஏனைய நான்கு சகோதரர்களும், மோகன் என்பவரும் (குமுழமுனையைச் சேர்ந்தவர்) தவிர்ந்த ஏனையோரை இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

இவர்களின் மனைவியர் தமது கணவன்மாரை விடுதலை செய்யுமாறு இராணுவத்தினரைக் கேட்ட பொழுதெல்லாம் அவர்களை விசாரணை செய்தபின் விடுதலை செய்வதாகக் கூறிய இராணுவத்தினர் அவர்களை 02.12.1984 அன்று தாம் சுட்டுவிட்டதாக உரியவர்களின் வீடுகளுக்கு 14.02.1985 அன்று அறிவித்தனர்.

இச்சம்பவத்தில் குமுழமுனையைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரின் பிள்ளைகள் 6 பேர் உட்பட அதே கிராமத்தைச் சேர்நத் ஒருவர் அடங்கலாக 07 பேர் உயிரிழந்தனர். அக்கிரமத்தைச் சேர்ந்த 06 குடும்பங்களில் குடும்பத்த தலைவர்கள் இல்லாமல், 06 பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இச்சம்பவம் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து முல்லைத் தீவில் நடைபெற்ற முதலாவது சம்பவம் ஆகம்.

**02.12.1984 அன்று குமுழமுனைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்.**

1. பொன்னம்பலம் நமசிவாயம் (வயது 51)
2. பொன்னம்பலம் ஆனந்தன் (வயது 53)
3. பொன்னம்பலம் கெங்காதரன் (வயது 45)
4. பொன்னம்பலம் பொன்ராசா (வயது 43)
5. பொன்னம்பலம் சந்திரலிங்கம் (வயது 49)
6. பொன்னம்பலம் விவேகானந்தம் (வயது 47)
7. மோகனதாஸ் (வயது 32)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# தென்னமரவடி படுகொலை 03.12.1984



தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத தென்னமரவடி படுகொலை 03.12. 1984 இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக்கொண்டனார். தமிழர் தாயக பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் புவியியல் இனரீதியாக இணைத்து நிற்கும் கிராமமே தென்னமரவடி எனும் பழமை மிக்க தமிழ் கிராமம். தென்னவன் எனும் தமிழ் மன்னன் தென்னமரவடி இராசாதானியை ஆட்சிபுரிந்ததால் தென்னன் மரபு அடி என அழைக்கப்பட்டதாக வரலாறுகள் சொல்கின்றன.புரதான ஆறு வன்னிமைகளோடு தென்னமரவடியும் ஒன்றாக விளங்கியுள்ளது.

புரதான காலத்தில் பல குறுநில தமிழ் மன்னர்கள் தென்னமரவடியை ஆட்சிபுரிந்துள்ளனர். பாண்டிய மன்னர்காலத்தில் பல பிராமணர்களும்.வேதாரணிய வைத்தியர்களும். பல குலத்தவர்களும் தென்னமரவடியில் குடியேறியதாக வரலாறுகள் சொல்கின்றன. அத்தோடு பாண்டிய மன்னர்களினுடைய மரக்கலங்கள் தென்னமரவடி துறையில் வந்தடைந்ததாகவும் குமுளமுனையில் கட்டப்படும் யானைகள் செம்மலைக்குடா தென்னமரவடி குடாக்களினூடாக தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் ஆதாரப்படுத்துகின்றன.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க தென்னமரவடி போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இருந்து எதிரிகளால் மாறி மாறி முற்றுகைக்குட்பட்டதனால் தென்னமரவடி பெரும் பிரதேசமக்கள் திருகோணமலை. தம்பலாகாமம். செம்மலை. அனுராதபுரம் என புலம் பெயர்ந்தார்கள் என்றும் அங்கே புதிய குடியேற்றங்களை நிறுவினார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. தென்னமரவடியோடு இணைந் திருந்த அமரிவயல் எனும் தொன்மைமிக்க தமிழ்கிராமம் முற்றாக அழிந்து போனதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறாக வீழ்ச்சி கண்ட தென்னமரவடி பிரித்தானியர் வருகைக்கு பின்னரான காலத்தில் பெரும்பான்மை சிங்களவர்களாலும் சிதைக்கப்பட்டது. இக்கிராமம் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச 31நு பிரிவின் கீழ் அமைந்துள்ளது. திருகோணமலையில் 65கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. முல்லைத்தீவையும் திருகோணமலையையும் இணைத்து நிற்பதால் வடகிழக்கை இணைக்கும் இருதய நிலமாக தென்னமரவடி அமைவுபெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய்கடல் நீரேரிக்கு மறுகரையில் வடகிழக்கை பிரித்து ஓடும் பறையனாற்று கரையில் தென்னமரவடி அமைந்துள்ளது.

தென்னமரவடியின் அமைவிட சிறப்பு தமிழ் பேசும் மக்களின் ஈழ நிலப்பரப்பை இணைத்து விடும் என்பதால் தென்னமரவடி மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பு, இல்லாது அழித்தல் எனும் சதித் திட்டத்தையே மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்து வருகின்றனர்.இக்கிராமத்தை 1970 களில் திருகோணமலையில் இருந்து பிரித்து அனுராதபுர மாவட்டத்தோடும் இணைத்தனர். பின்னர் தமிழ் அரசியல் தலைவர்களின் தொடர் அழுத்தத்தால் மீண்டும் திருகோணமலையோடு இணைக்கப்பட்டது.



இருந்தும் தென்னமரவடி கிராமத்தை சிங்களமயமாக்கும் பணியை சிங்களம் நிறுத்தவில்லை.1980 களில் பல தொன்மை சிறப்புடைய இக்கிராமத்தின் பல கல்வெட்டுக்களை இல்லாமல் ஆக்கினர். அகழ்வாராட்சி என்ற பெயரில் பல வரலாற்று அடையாளங்களை திருடிச் சென்றுள்ளனர். அதை இன்று வரை இக்கிராமத்தவரிடம் ஒப்படைக்கவில்லை. கந்தசாமி மலை பிரதேசத்தில் இன்றும் பல தொன்மை அடையாளங்களும் பழம் பெரும் முருகன் ஆலயமும் அமைந்துள்ளது.இதனால் இவ்வலயத்தை பௌத்தபுனித பூமி என தொல் அகழ்வாராச்சி சபை ஆக்கிரமித்துள்ளது. அத்தோடு இத்தொன்மை மிக்க தமிழ் கிராமத்தின் வயல்நிலங்களை சிங்களவர்க்கு கைமாற்றியது. அத்தோடு மட்டுமன்றி பதவியா. சிறிபுர. சிங்கபுர.13ம் கொலணி சிங்கள குடியேற்றங்களை தென்னமரவடி கிராமத்தில் அத்துமிறி சிங்களம் நிறுவியது. இதனால் தென்னமரவடி மக்கள் 1980, 1984ம் ஆண்டு காலப்பகுதிகளில் தனித்து நின்று தென்னமரவடி நிலத்தை பாதுகாப்பதற்காக சிங்கள காடையர்களோடு முரண்பட்டு மோதிக்கொன்றனர். பல தடவைகள் சிங்கள குடியேற்றவாசிகளை விரட்டி அடித்னர். தமக்கே உரித்தான இடியன் துவக்குகளை இவர்கள் பயன்படுத்தி சிங்களவர்களை விரட்டி அடித்த வீரம்மிக்க கிராமமாக தென்னமரவடிமக்கள் விளங்கினர்.

இதனால் ஆத்திரம் கொண்ட சிங்கள இனவாத அரசும் சிங்களை காடையர்களும் ஒன்றாகி பலமாகி பலதடவைகள் தென்னமரவடி கிராம மக்களை விரட்டி அடித்தனர். காடுகளில் பலநாட்கள் தங்கிய மக்கள் சொல்லண்ணா துயர்களை அனுபவித்தனர்.அத்துமீறிய சிங்களவர்கள் இக்கிராமத்தவரின் சொத்துகளை சூறையாடி சென்றும் இருந்தனர். மீண்டும் கிராமத்துக்குள் வந்தவர்கள் இந்நிலை கண்டு அச்சமும் கவலையும் கொண்டனர். தென்னமரவடிதமிழர்க்கும் சிங்களவர்க்கும் பகை உச்சம் கொண்டிருந்தது. எந்த நேரத்திலும் தென்னமரவடி அபகரிக்கப்படும் சூழல் உருவானது. மக்கள் அச்சத்துடன் ஒவ்வோர் இரவையும் கழித்தனர்.

அன்று 1984 மார்கழி மாதம் மூன்றாம் திகதி தென்னமரவடியை அண்மித்த பகுதிகளில் வேட்டு சத்தம் பலமாக கேட்டது. தென்னமரவடியை சேர்ந்த பலரை சிங்கள காடையர்கள் கொலைசெய்துவிட்ட செய்தி பரவியது. தோட்டங்கள். வயல் நிலங்களிற்கு சென்ற பலர் வீடு திரும்பவில்லை. பிள்ளைகள். கணவன்மார்களை காணாது தவித்த உறவினர்கள் அவர்களை தேடி சென்றனர். இவ்வாறு பிள்ளைகளையும் கணவன்மாரையும் தேடிச்சென்ற பல பெண்களை சிங்கள காடையர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர். பலர் சிதறி ஓடியும் கடையர்களிடமிருந்து தப்பமுடியவில்லை. தாய்மார் முன்னிலையில் பிள்ளைகள் வெட்டிக்கொல்லப்பட்டனர். கணவர்மார் முன்னிலையில் பல பெண்கள் அம்மணமாக்கி கற்பழித்து கொலைசெய்யப்பட்டனர்.

இந்த கொடும் செயலை சிங்களம் செய்து முடித்தது.

பிள்ளைகளை தேடிச்சென்ற இரத்தினம். வேலாயுதம் மனைவி ஆகிய இருவரையும் தவிர ஏனைய எல்லோரும் கொலைசெய்யப்பட்டனர்.

1.. சண்முகம் முருகுப்பிள்ளை (42)
2. முருகுப்பிள்ளை அபிராமி (40)
3. முருகுப்பிள்ளை பாலகிருஸ்ணன் (18)
4. விநாசித்தம்பி கனகையா (45)
5. கனகையா சேதுப்பிள்ளை (38)
6. கந்தையா கெங்காதரன் (24)
7. சண்முகம் சதாசிவம் (35)
8. கணபதி வேலாயுதம் (48)
9. பூசாரி சின்னையா (65)
10. நமசிவாயம் கலையன் (18)
11. ஐங்கரப்பிள்ளை திருச்செல்வம் (23)

ஆகியோர் காடையர்களால் படுகொலை செய்யப்பட்னர்.

ஆனால் இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக் கொண்டனார். "ஐயோ சிங்களவர் திரண்டு வாறான்கள். எல்லோரும் ஊரைவிட்டு ஓடுங்கோ. பிடிச்சு வைச்சிருந்த எல்லோரையும் வெட்டிக்கொண்றிட்டான்கள் ..." என்ற அந்த இரு பெண்களின் அலறல் தென்னமரவடியை நிலைகுலையசெய்தது. அன்றே தென்னமரவடி மக்கள் காடுகளிற்குள் தஞ்சம் புகந்தனர்.அந்த நொடிப்பொழுதில் சிங்கள காடையர்கள் தென்னமரவடியை சூறையாடி ஊர் முழுவதையும் எரித்தனர்.

காடுகளிற்குள் ஒளிந்த மக்கள் கண்களில் தென்னமரவடி எனும் வளமான ஊர் எரியூட்டப்பட்டு புகை மண்டலம் வெளிவந்ததை பார்த்தனர்.. ஆறாத வடுக்களுடன் கண்களில் நீர் கசிந்திட முதியோர். இளையோர். குழந்தைகள் என பதினெட்டு நாள் அச்சமான காட்டு வழி பயணமாக முல்லைத்தீவு. முள்ளிவளை. புதுக்குடியிருப்பு. செம்மலை போன்ற பகுதிகளிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். 1984ல் இல் தமிழர் தாயகத்தில் முற்று முழுதாக முதலில் இடம் பெயர்ந்த தென்னமரவடி கிராமத்தின் இடம் பெயர் அவலமும் தென்னமரவடி படுகொலையும் நடந்து முப்பத்து ஏழு வருடத்தை கடந்தும் இன்னும் ஆறாத துயரமாகவே தமிழர் மனங்களில் பதிந்துள்ளது.







# மன்னார் – முருங்கன் வீதிப் படுகொலை 04.12.1984

04.12.1984 அன்று காலை பதினோராம் கட்டைப் பகுதியில் காலை 11:00மணியளவில் பாரிய வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. அதன் பின்னர் இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி முகாமிற்கு சென்று பின் மதியம் திரும்பவும் உயிலங்குளப் பகுதிக்கு வந்தனர். அவ்வேளை வானத்தில் உலங்குவானூர்தி ஒன்றும் சுற்றிக்கொண்டிருந்தது. அங்கு வந்து வீதியோரமாக அமர்ந்திருந்தவர்களைப் பிடித்துச் சுட்டுப் படுகொலை செய்த இராணுவத்தினர் பதினோராம் கட்டையடிப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த போது வவுனியாவிலிருந்து வந்த பேருந்தை மறித்து அதிலேற முற்பட்ட வேளை சிங்கள இனத்தவரான நடத்துநர் அதனை அனுமதிக்கவில்லை. அதனால் அவரைச் சுட்டுவிட்டு, பேருந்தில் வந்த நாற்பது பேரையும் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றார்கள். இதன்போது ஒரு வயோதிபர் மாத்திரம் மயக்கமுற்ற நிலையில் உயிர் தப்பினார். அதைத் தொடர்ந்து திரும்ப முருங்கன் தபாற்கந்தோர் வரை தம் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்றுவிட்டு இராணுவத்தினர் சென்றனர்.



குறிப்பாக ஒரு பாரவூர்தியில் வந்த ஓட்டுநர், நடத்துநர், மற்றும் அருகிலிருந்த வீட்டில் நின்றவர்களையும் சுட்டுப் படுகொலை செய்தனர். இந்தப் படுகொலைச் செயல் அன்று மாலை வரை நடந்தேறியது. அதில் இறந்தவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பு தேடி ஓடிவிட்டு மீண்டும் பொருட்களை எடுப்பதற்காக திரும்ப வீடுகளுக்கு வந்தவர்களேயாவர். பின்னர் அடுத்த நாள் இராணுவத்தினர் முகாங்களுக்குச் சென்ற பின் பங்குத் தந்தையின் உதவியுடன் அனைத்துச் சடலங்களும் எடுக்கப்பட்டன. பேருந்தில் வந்தவர்கள், வயலில் வேலை செய்தவர்கள் என் நூற்றுக்கும் மேற்பட்டவர்களது சடலங்கள் எடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட முருங்கனிலிருந்து தள்ளாடி முகாம் வரை இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நான்காம் திகதி மன்னார் மாவட்டம் சிறிலங்கா இராணுவத்தின் கொலைவெறியால் சோக மயமாகியது. சம்பவம் நடந்து இரண்டாம் நாள் (06.12.1984) சிறீலங்கா இராணுவத்தின் அனுமதி பெற்று மன்னர் ஆயர், அரச அதிபர் போன்றோர் மக்களுடன் சேர்ந்து தொண்ணூறு உடல்களை (சில உடல்கள் எரிந்தவை) மன்னார் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை இருநூறுக்கும் அதிகமாகும்.

வட்டக்கண்டலைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவித்ததாவது:

“இதில் தப்பி வந்த கால் இயலாத ஒரு வயோதிபர் கூறும்போது: பேருந்தினை மறித்து அனைவரையும் இறக்கித் தன்னைப் போல ஒரு சிலரைத் தவிர ஏனையோரை வரிசையாக நிற்கவிட்டுத் தானியங்கித் துப்பாக்கியால் பல இராணுவத்தினர் சேர்ந்து சுட்டதாகக் கூறினார். இச்சம்பவத்தில் எந்தவிதப் பாகுபாடுமில்லாது வயல்வேலை செய்துகொண்டிருந்த அனைவரையும் சுட்டனர். அவர்களது சடலங்கள் அனைத்தும் ஆடைகள் இல்லாது அடையாளங் காணமுடியாத நிலையில் மூன்று நாட்களின் பின்னர் மன்னார் மருத்துவமனையில் போடப்பட்டிருந்தது. இச்சம்பவத்தின் போது வீதியிலிருந்த கடைகள் சில பொதுமக்களின் வீடுகள் என அனைத்தும் உடைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் இருந்தன”

வட்டக்கண்டல் பாலப்பெருமாள்கட்டைச் சேர்ந்த கதிரன் சௌந்தரராஜன் சம்பவத்தைப் பற்றிக் கூறுகையில்:

“1984ஆம் ஆண்டு பதினோராம் கட்டையில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் இருநூறிற்கும் மேற்பட்ட மக்களை வெட்டியும் வைக்கோலுக்குள் போட்டு எரித்தும் கொன்றார்கள். இச்சம்பவத்தில் எமது உறவினர்கள் நிறையப்பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். எனது சகோதரன் ஒருவரை இரத்தத்தைக் குடிக்குமாறு கூறி சித்திரவதை செய்தார்கள். நடராசா என்கின்ற எனது அண்ணன் ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள். 1984ம் ஆண்டு மூன்றாம் பிட்டியில் வைத்து எனது மற்றைய அண்ணனான கந்தசாமி என்பவரை சித்திரவதை செய்து கொன்றார்கள் ”

**04.12.1984 அன்று மன்னார்ப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப் பட்டோர் விபரம்:**

1. சூசை நிக்கிளாஸ் (வயது 38 – தொழிலாளி)
2. சூசை அந்தோனி (வயது 52 – விவசாயம்)
3. சூசேப்பு இன்மனுவேல் லெம்பேட் (வயது 24 – விவசாயம்)
4. இம்மானுவேல் சூசையப்பு லெம்பட் (வயது 24 – தொழிலாளி)
5. இராமையா கந்தசாமி (வயது 50 – தெழிலாளி)
6. இராசையா இரகுநாதன் (வயது 40 – கூட்டுறவு பரிசோதகர்)
7. இராமலிங்கம் இலச்சுமணன் (வயது 50 – தொழிலாளி)
8. யக்கோவு மனுவல் / அலஸ் (வயது 50 – விவசாயம்)
9. க.த.இராஜரெட்ணம் ( வயது 67 – வைத்தியர்)
10. கந்தப்பு அப்புத்துரை (வயது 64 – விவசாயம்)
11. கப்பநெயினா நஜீமுதீன் (வயது 32 – தொழிலாளி)
12. குப்புசாமி செல்லத்துரை (வயது 55 – கணக்குப் பரிசோதகர்)
13. கபிரிகேல் ஜீவானந்தம் (வயது 40 – தபால் சேவகர்)
14. கறுப்பையா அச்சுதன் வயது 34 – பொறியிலாளர்)
15. கறுப்பையா பெருமாள் (வயது 60 – தொழிலாளி)
16. பூசாரி கந்த சாமி (வயது 46 – தொழிலாளி)
17. பிலேந்திரன் அல்யோண்ஸ் (வயது 55 – கமம்)
18. பிறஞ்சிசவிரி சாரம் (வயது 54 – விவசாயம்)
19. பிலிப்பு பிலேந்திரன் (வயது 56 – விவசாயம்)
20. மயில் வாகனம் ஜெயக்குமார் (வயது 32 – விவசாயம்)
21. மனுவல் அலஸ் (வயது 52 – விவசாயம்)
22. முகமட் கனிபா சுல்த் தான் (வயது 36 – கொண்றைக்ரர்)
23. முத்துச்சாமி சுப்பிரமணியம் (வயது 58 – மெக்கானிக்)
24. மீலாசாகிபு அப்புல்மஜீது (வயது 43 – விவசாயம்)
25. மஞ்சன் சின்னப்பன் (வயது 34 – தொழிலாளி)
26. முருகேசு நவரெட்ணம் (வயது 54 – விவசாயம்)
27. முருகேசு செல்லம்மா (வயது 60)
28. அந்தேனி பிரான்சிஸ் மொறாய் (வயது 29 – தபால் சேவகர்)
29. அந்தோனி செபமாலை (வயது 48 – லிகிதர்)
30. அந்தோனி குருதாசன் (வயது 23 – விவசாயம்)
31. அந்தோனி யோகநாதன் (வயது 18 – மாணவன்)
32. அந்தோனி யோகநாதன் மிறால் (வயது 18- விவசாயம்)
33. அக்கினிமுத்து இராமசாமி (வயது 34 – தொழிலாளி)
34. அப்புத்துறை வீரசிங்கம் (வயது 40 – மெக்கானிக்)
35. அப்பையா செல்லையா (வயது 57 – வியாபாரம்)
36. அரியபுத்திரன் திருநாவுக்கரசு (வயது 49 – வியாபாரம்)
37. அலெக்ஸ்சாண்டர் மாட்டின் ராஜ்குமார் (வயது 34 – மின் அத்தியட்சகர்)
38. அழகன் காளிமுத்து (வயது 65 – தொழிலாளி)
39. அழகையா காளிமுத்து (வயது 31 – விவசாயம்)
40. அருள்மலர் ஜோன்ஸபப்பிஸ்ட் (வயது 28 – வீட்டுப்பணி)
41. அருளானந்தம் துரைராஜா (வயது 32 – அரச ஊழியர்)
42. அல்பிறட்போல் நோயல் இம்மானுவேல் (வயது 45 – விவசாயம்)
43. அல்போன்ஸ் சூசைநாதன் குரூ (வயது 34 – மானேஜர்)
44. ஆண்டி ஆறுமுகம் சுந்தரராஜ் (வயது 45 – விவசாயம்)
45. நேசராசன் (வயது 50 – விவசாயம்)
46. கென்றிமரியதாஸ் மியேஸ் (வயது 57 – விவசாயம்)
47. பொன்னம்பலம் (வயது 40 – வியாபாரி)
48. பொன்னையா அழகையா (வயது 65 – விவசாயம்)
49. பேதுரு அரியரட்ணம் (வயது 42 – தபால் சேவகர்)
50. பெஞ்ஜமின் ஸ்ரீபன்ஜெறே தவரெட்ணம் (வயது 45 – சிறைச்சாலை அதிகாரி)
51. செபமாலை மேரிகார் மிலாராணி (வயது 28)
52. செல்லையா சண்முகநாதன் (வயது 45 – மருந்தாளர்)
53. வேலு இராஜலிங்கம் (வயது 25 – தொழிலாளி)
54. வேலு கணேஸ் (வயது 40 – தொழிலாளி)
55. வேலு கணபதிப்பிள்ளை (வயது 58 – விவசாயம்)
56. வேலு பன்னீர்செல்வம் (வயது 31 – வியாபாரம்)
57. வேலுப்பிள்ளை கணவதிப் பிள்ளை (வயது 58 – விவசாயம்)
58. லோறன்ஸபிள்ளை பாபிலுப் பிள்ளை (வயது 47 – விவசாயம்)
59. சன்னாசி ரெங்கையா (வயது 55 – தொழிலாளி)
60. சந்தாம்பிள்ளை மரியாம் பிள்ளை (வயது 30 – கமம்)
61. சந்தியா அல்யோன்ஸ் சூசை நாதன் (வயது 36 – வியாபாரம்)
62. சுந்தரம்பிள்ளை செபஸ்தியான் பிள்ளை (வயது 45 – விவசாயம்)
63. சுப்பன் கிருஸ்ணபிள்ளை (வயது 38 – வர்த்தகர்)
64. சுப்பையா (வயது 75 – பிச்சைக்காரன்)
65. சாமிநாதன் கண்ணுசாமி (வயது 28 – காவலாளி)
66. சாசீம் சமது (வயது 36 – வியாபாரம்)
67. சின்னக்குட்டி கதிரவேல் ஆறுமுகம் (வயது 72)
68. சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது 51 – விவசாயம்)
69. சீமான்பிள்ளை சந்தியாம் பிள்ளை (வயது 58 – விவசாயம்)
70. சவிரியான் சந்தியோகுபறுனா (வயது 32 – விவசாயம்)
71. வல்லிபுரம் தியாகராசா (வயது 40 – உதவி தபால் அதிபர்)
72. நிச்சாட்குலாஸ் சேக்கிழாயார்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.




JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

# ஈழத்தமிழர் வரலாறு திருத்தி எழுதப்பட வேண்டிய அவசியம்

– அ. மயூரன் MA –

நாம் ஒரு மாபெரும் அறிவியல் மாற்றத்திற்கு உட்பட வேண்டும். இந்த உலகம் இடையுறாது மாறிக்கொண்டிருக்கிறது இந்த மாற்றங்களை உள்வாங்கி இனி ஏற்படப்போகும் மாற்றங்களை முன்னுணர்ந்து அறிவார்ந்து செயற்படவேண்டியது அவசியமாகிறது.

கருத்தைக் கருத்தாக எடுக்கும் நாகரிகம் எம்மிடம் இன்னும் வளரவில்லை. வரலாற்று ஆய்வியலில் எம்மிடம் ஒரு பிழையான மரபியலே உண்டு. ஒரு நீண்ட போராட்டமும் அதன் தொடர்ச்சியில் பேரழிவைச் சந்தித்திருக்கின்ற போதிலும் அறிவியல்த் துறையில் மாற்றம் ஏற்படாமை எம்மினத்தின் துரசிஸ்டமே.

வரலாறு என்கின்றபோது "சமூகத்தின் இயங்கு போக்கினையும், அவ்வியக்கத்திற்கு உந்துதலான சக்திகளையும், ஆழமாக அணுகும் ஒரு அறிவியல் துறையாகும்.

இந்தப் பிண்ணணியில் இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு ஒடுக்கப்பட்டார்கள் அவ்வொடுக்குமுறைக்குப் பின்னாலிருக்கின்ற உந்துசக்தியைக் கண்டறிந்து சுட்டிக்காட்டும் ஒரு சிறிய தேடலாகவே இப்பத்தி அமைகிறது.

இலங்கையினுடைய வரலாற்றை அறிவியல் நோக்குடன் ஆய்வுசெய்யும் முயற்சி இன்றுவரை இல்லை என்றேகூற வேண்டும். பொதுவாக பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் முடிவுறும்வரை இலங்கையின் ஆதிவரலாற்றை அறிவியல் ரீதியில் ஆய்வுசெய்யும் முறையானது புறக்கணிக்கப்பட்டே வந்திருந்தன.

ஆனால் இந்தியாவில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு இந்திய வரலாற்று ஆய்வினை அறிவியல் ரீதியில் முறையாக ஆய்வு செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால் தமிழகத்தின் வரலாறோ இருட்டடிப்புச் செய்யப்பட்டன என்பது வேறுகதை.

ஆனால் இலங்கையிலோ பிரித்தானியர் ஆட்சி முடியும்வரை இலங்கை வரலாறு ஒரு பாடமாகவோ பாடசாலைகளில் படிப்பிக்கப்படவில்லை.

1942 ஆண்டில்தான் இலங்கையில் முதலாவது பல்கலைக் கழகம் (University Collage of Ceylon) ஆரம்பிக்கப்பட்டு அது லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு அதில் வரலாறு கற்ற மாணவர்கள் பிரித்தானிய வரலாற்றையும், ஐரோப்பிய வரலாற்றையுமே கற்றனர்.

பின்னர் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெறும் தறுவாயில் இலங்கை அரசு தமக்கென ஒரு வரலாற்றுப் பாடநூல்கள் தேவைப்பட்டபோது இலங்கை பல்கலைக்கழக கல்லூரி விரிவுரையாளராக இருந்த ஜி.சி.மெண்டிஸ் The Early History of Ceylon – 1940 என்ற நுலை எழுதினார்.

இதுவே முதலாவது இலங்கையர் எழுதிய இலங்கை வரலாற்று நூலாகவுள்ளது. இது பாளியிலும், சிங்களத்திலும் எழுதப்பட்ட வரலாற்று மூலங்களை வைத்து ஆரியர் குடியேற்றம் என்ற நிகழ்ச்சியுடன் இவரது நூல் தொடங்குகிறது.

இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிகளை ஒதுக்கியும், தம்மினத்துள் அவற்றினை அடக்கியும் இலங்கையினுடைய வரலாற்றை குறிப்பிட்ட நிகழ்ச்சியுடன் குறிப்பிட்ட காலகட்டத்தில் தொடங்கி ஒரு தனியோர் இனக்குழுவின் சொத்தாகவும், காலத்துக்கு காலம் அந்த இனக்குழு தென்னிந்தியாவிலிருந்து வந்து காலத்துக்கு காலம் வேறோர் இனக்குழுவால் தாக்கப்பட்டதாகவும் புனையப்பட்டு வரலாறு விளக்கப்பட்டது.

அதேவேளை 1950களில் இலங்கை தொல்லியல் திணைக் களம் உருவாக்கப்பட்டு அதன் ஆணையாளர் செனரத் பரணவிதான நியமிக்கப்பட்டார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஓர் அதிகாரபூர்வமான அறிஞராக இவரே கருதப்பட்டார். இதனால் தான் தொல்லியல் ஆணையாளர் பதவியிலிருந்து ஒய்வு பெற்றபின்னர் தொல்லியல் பேராசிரியராக நியமித்தது அரசு.

இவரை பேராசிரியராக நியமிக்கபட்டதன் பின்னர் இவர் மூலம் அரசாங்கம் இலங்கை வரலாற்று நூல் ஒன்றை. எழுதுவித்தது. இதில் பரணவிதான தன்னுடைய மனஓட்டத்திலிருந்தே அந் நூலினை எழுதியிருந்தார்.

இதுதான் இலங்கையின் அதிகாரபூர்வ வரலாறாக 1960 களிலிருந்து 1977 வரை அரசால் அங்கீகரிக்கப்பட்டும் இருந்தது.

ஆரியர் இலங்கையில் குடியேறிய நிகழ்ச்சியுடன் தான் இலங்கை வரலாறு ஆரம்பித்தாக Aryan Settlements The Sinhalese என்ற அத்தியாயத்தில் பரணவிதான எழுதுகிறார்.



The Anaikoddai Royal seal of 300 BCE. The bottom line in Tamil Brahmi reads *KŌVĒTHAN*, meaning King Vethan. Picture Courtesy: Dr P. Ragupathy.

அதில் முதலாம் அத்தியாயத்திலேயே (The Triumph of Dutthagamini) துட்டகெமுனு போர் பற்றி பரணவிதான கூறும் போது "அன்னியர் ஆதிக்கத்திலிருந்து சிங்களரை விடுவிக்க நடத்தப்பட்ட ஒரு விடுதலை இயக்கப்போர்" என்று எழுதியுள்ளார்.

திரு.செனரத் பரணவிதான தெரிவித்த கருத்துக்களை ஏனைய வரலாற்றாசிரியர்கள் ஏற்கத்தயங்கினாலும் அதை மறுக்கத் திராணியற்றே காணப்பட்டனர்.

ஐந்தாம் நூற்றாண்டில் மகாநாமதேரர் எனப்படும் தேரர் அனுராதபுரத்தில் மகாவிகாரை என்ற பௌத்தப்பெரும்பள்ளியினை சேர்ந்த ஒரு பிக்கு. இலங்கையில் பௌத்த மதத்தின் வரலாற்றை சொல்லுவதற்கே மகாவம்சத்தை எழுதினார் என்பது தெளிவாகத்தெரிகிறது.

அதாவது ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் "சமயப்பற்றுடையோர் பேரின்பம் பெறுவதற்கு இயற்றப்பட்டது" என்று வருகிறது.

துட்டகெமுனு – எல்லாளன் போர் பற்றி மகாநாமதேரர் கூறும் மொழி அமைப்பு முறைமையை விட நீண்ட காவியத்தன்மை கொண்ட நடையுடன் காணப்படுவதனால் மகாநாமதேரரின் பின்னர் வேறொருவரால் இடைச்செருகலாக சேர்க்கப்பட்டு தமிழருக்கு எதிரான முறையில் சிறப்பாக சிங்கள மக்கள் மனதில் தமிழருக்கு எதிரான நிலையை உருவாக்குவதற்கு எழுதப்பட்டிருக்கலாம் என பௌத்தம் வளர்த்த தமிழர்கள் என்ற கட்டுரையில் கலாநிதி சிவ தியாகராஜா அவர்கள் கூறுகின்றார்.

இதுவே தமிழர்களுக்கு எதிராக சிங்களமக்களின் மன நிலைகளை மாற்றி மகாவம்ச மனோ நிலையில் இருந்து வரலாற்றை திரித்தும் அரசியல் தேவைகளுக்காக பிழையாகவும் எழுதப்பட்டதனால் காலங்காலமாக அம்மண்ணில் வாழ்ந்த தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த குடியேறிகள் என்று புனையப்பட்டன. இதற்கு ஐரோப்பியர்களே வித்திட்டவர் களாகவே உள்ளனர்.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் அழித்த கோயில் களைப் பதிவு செய்வதற்கு அவர்களின் கத்தோலிக்க மதகுருவான பெர்ணாலு த கெய்ரோஸ் (Fernao De Queyroz) என்பவர். இலங்கை வரலாற்று நூல் ஒன்றினை எழுதினார் இதுவே இலங்கை வரலாறு பற்றி எழுந்த முதலாவது நூலாகும்.



A Black-and-Red Ware dish discovered at Tissamaharama with the Tamil Brahmi script *'tiraLi muRi'* by the German team dated to around 300-200 BCE.The last letter of the inscription *'Ri'*, is a Tamil phoneme exclusive to Tamil Brahmi.
Photo Courtesy: H. Wittersheim.



Potsherd from the citadel of Anuradhapura with Brahmi writing with the broken last letter which could be *dha* or *dhi*, which reads as either *Piya Anuradha* or *Piya Anuradhi*. The term Piya (*priya* in Sanskrit; *dearest* in English) is usually reserved to address a female; hence the correct reading is possibly *Piya Anuradhi*. Dated to 700-500 BCE.



A rouletted ware potsherd with Brahmi Script in Prakrit
Dataha Patha Artefact: KTD A14.
Courtesy: K. Indrapala 1973.

இதன்பின்னர் ஒல்லாந்த அறிஞனான பிலிப்புஸ் பால்தேயுஸ்


Potsherd from Kantarodai with Tami Brahmi Characters. Courtesy: S. Krishnarajah


Potsherd with legend Apisithan in Tamil Brahmi Characters.


Ratnapura Industry, Large Stone tools, Ratnapura Beds


Middle Palaeolithic? Large Stone tools Iranamadu Formation


Potsherd from Poonakari with the Tamil Brahmi script *VĒLĀN*, 300 BCE.
Picture Courtesy: Dr P. Pushparatnam.

Rock Inscription 94 at Abhayagiri, Anurahapura


*(a). Ilubaratahi Dameda-Samane karote Dameda gahapathikana pasade (b). Sagasa asane). (c). Nasatasa asane (d). Tisaha asane (e). .... Asane (f)... Kubira Sujhataha (g). Navika-Kāravaha asane.*

(a). The terrace of the Tamil house-holders caused to be made by the Tamil Saman of Ilubarata (b). The seat of Saga (c.). The seat of Nasata (d). The seat of Tissa (e). The seat of ... (f)... of Kubira Sujata (g). The seat of Kārava, the mariner.

(Philipus Baldeus) அவர்களும் அதன்பின்னர் வந்த பிரித்தானிய ஆட்சியாளர்கள் சிலரும் தங்கள் குறிப்புகளிலும், பதிவுகளிலுமாக இலங்கையின் வரலாற்றினைப்பற்றி மிகக் குறைவாகவே எழுதியிருந்தனர்.

குறிப்பாக பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அதன் ஆட்சியாளர்கள் இலங்கையின் ஆதி வரலாற்றை அறிவதில் ஆர்வம் காட்டி அது தொடர்பாக தேடியபோது அவர்களிடம் கிடைத்தது பாளிநூல்களும், சிங்கள நூல்களும், சில தமிழ் நூல்களுமே இவ்வாறு ஆங்கில ஆட்சியாளர்களிடம் கிடைத்த தமிழ்நூல்கள் பலவும் வரலாற்றைச் சொல்லும் நூல்களாகக் காணப்படாமையால் அவர்களி கவனம் சிங்கள பாளி நூல்களின் பக்கம் திரும்பியது.

இதனால் தீபவம்சம், மாகாவம்சம், சூழவம்சம், முதலான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தன. அதேகாலப்பகுதியில் பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய நகரங்களின் அழிவுகள் ஆய்வுசெய்யப்பட்டு அதன் தகவல்களும் இந்நூல்களோடு இணைக்கப்பட்டு இலங்கை பற்றிய வரலாற்று நூல்கள் எழுதுவதற்கு அவர்களுக்கு உதவியாக இருந்தது.

ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட காலணித்துவகாலப் படைப்புக்கள் பாளி, சிங்கள நூல்களில் கூறப்பட்ட வரலாற்றை விமர்சிக்காது அப்படியே ஏற்றுக்கொண்டு இலங்கையின் வரலாற்றை எழுதினர். (உதாரணம் சிங்கத்திலிருந்து மனிதன் பிறந்ததான விஜயனின் பிறப்பு.)

தமிழர்களையும், சிங்களவர்களையும் பிரித்தாளுவதற்கு ஏதுவாக இந்த வரலாற்றை திட்டமிட்டு பிரயோகித்தனர். இவர்களே சிங்களவர்களை ஆரியர்கள் என்றும், தமிழர்களை திராவிடர்கள் என்றும் உண்மைக்குப் புறம்பாக கூறினர்.

மகாவம்சத்தில் ஆரியர் என்ற பதம் இடம்பெறாத போதும் நவீன மரபணுவியல் ஆய்வு இன்று அறிவியல் ரீதியாக பொய் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டபோதிலும், அரசியல் மயப்பட்டு இக்கருத்து மக்கள் மயப்படுத்தப்பட்டு மேற்கூறிய சிங்கள வரலாற்றாசிரியர்களால் பரப்பப்பட்டது.

இலங்கை வரலாறு பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம் இந்த ஆங்கில நூல்கள் வாயிலாக உருவாகின.

இதனால் சிங்கள மக்களே இலங்கையின் முறையான குடிகள் என்றும் தமிழ்மக்கள் இந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்கள் என்றும் கருதப்பட்டது. இக்கருத்தே காலணித்துவ கால வரலாற்று நூல்களில் அதிகம் காணலாம்.

இதன்பின்னணியில் நோக்கினால் தவறான நோக்கில் பார்க்கப்பட்ட மகாவம்ச மனநிலைதான் ஈழத்தமிழர்களின் இன்றைய நிலைகளுக்கு காரணமாகிவிட்டது.

மகாவம்சம் வரலாற்றுக் காலத்திற்கு பின்னான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி பதிவு செய்திருக்கிறது. ஆனால் வரலாற்றுக்கு முற்பட்ட நிகழ்வுகளை புனைகதையாகவும், திரித்தும் கூறியுள்ளது. இதை பௌத்தம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் ஏன் விஜயன் வரும் முன்னர் இவங்கையில் ஒரு நாகரிகமடைந்த மக்களும், அரசுகளும் இருந்தது என்பதனை அண்மைய தொல்லியல் ஆய்வுகள் காட்டுகின்றன.

விஜயன் வருவதற்கு முன்னர் நாக அரசுகள் இலங்கையின் வடபகுதியில் இருந்தது என்பதற்கு 1969, 1985, 1989, 1990, 1992 ஆகிய ஆண்டுகளில் அனுராதபுரத்தில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளே நிரூபிக்கின்றன. இதில் 1990 ஆம் ஆண்டு பேரா.செரான் தெரணியகல மேற்கொண்ட ஆய்வில் கி.மு.500ஆம் நூற்றாண்டிற்கும், கி.மு.700 இற்கும் இடைப்பட்ட காலத்தைய பானையோடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்து. அதில் "தயாகுட" என் எழுதப்பட்டிருந்தது. இதன் தமிழ்வடிவம் தயாவினுடைய குடம் என்பதாகும். இதனுடைய காலம் இனறைய கீழடியையும் விஞ்சிநிற்கிறது.

இவ்வாறு அனுராதபுரத்தில் நடத்தப்பட்ட பலதர ஆய்வுகளில் கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் "சிவ, சிவகிரத, சிவகுத்த, சிவநாக, காலசிவ, மகாசிவ, கந்த, குமார, விசாக" போன்ற பெயர்கள் பௌத்தத்திற்கு தானங்கொடுத்தவர்களாகக் குறிப்பிடப்படுகிறது. சிவ என வரும் பெயர்கள் இக்காலப்பகுதிகளில் தமிழகத்தில் இல்லை.

அத்துடன் தேவநம்பிய தீசனின் தந்தையின் பெயர் மூத்தசிவனாகவும், பேரனின் பெயர் மகாசிவ எனவும் மகாவம்சம் கூறுவதிலிருந்து பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் சைவமும் அதனைப்பின்பற்றியவர்களும் அனுராதபுரத்தை ஆண்டிருக்கின்றனர். என்பதனை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வே காட்டுகிறது.

1957 களில் வென்சில்வேனிய பல்கலைக்கழகத்தை சேர்ந்த விமலா பேக்லி அவர்கள் மன்னார் பொம்பரிப்பு பகுதியில் மேற்கொண்ட ஆய்வில் 8000 சவ அடக்கத் தாழிகளைக் கண்டெடுத்தார். சவ அடக்கங்கள் காணப்பட்ட போதிலும் இதன் நாகரிகம் கண்டுபிடிக்கப்படவில்லை. இத்தாழிகள் அனைத்தும் கிழக்கு மேற்க்காகப் புதைக்கப்பட்டிருந்தது. கிழக்கு மேற்காகப் புதைக்கப்படுவது தமிழர்களின் வழக்கமே. ஆரியர்கள் வடக்கு தெற்காகவே புதைப்பர். இதனுடைய காலம் கி.மு.1000 ஐ சேர்ந்தது என அவர் தெரிவித்திருந்தார் எனினும் இங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இலங்கைத் தொல்லியல்துறையால் கையகப்படுத்தப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது.


The different types of pottery and ceramics exposed during the excavations 2011-2012
Photo Courtesy: Dept. of History, University of Jaffna

இது விஜயனுக்கு முன்னர் ஒரு பெரும் நகர நாகரிகம் இருந்தது என்பதனை ஆதாரப்படுத்துகிறது.

1990 இல் மாகம எனப்பட்ட திஸ்ஸமகாராமப் பகுதியில் உள்ள அக்குறுக்கொடப் பகுதியில் ஜேர்மன் தொல்லியல் ஆய்வாளர்களால் மேற்கொண்ட ஆய்வில் 125 பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஒரு பானை ஓட்டில் திரளிமுரி என்றும் அதில் கண்


Brass bell from Pomparippu Urn Burials with a handle topped by a trisula.

Courtesy : Dept. of Archaeology, Sri Lanka.

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203




டெடுக்கப்பட்ட நாணயத்தில் "சடநாகராசபுர" என்கின்ற வாசகமும் தமிழ்ப்பிராமி கண்டெடுக்கப்பட்டது. இது கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்கின்றது. இது நாகராசபுரம் என்கின்ற பெயரில் ஒரு நகரநகரிகம் இருந்ததனை உறுதி செய்கிறது.

இம்மட்பாண்டஓடு இன்று சிதைக்கப்பட்டுள்ளது. இது பௌத்தத்தின் முன்னர் இங்கும் ஒரு நாகரிகம் இருந்ததனை தெளிவுபடுத்துகிறது. அத்துடன் "உதிரன், சபிஜன்" பெயர்பொதித்த நாணயங்களும் கண்டெக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆனைக்கோட்டையில் 1981 களில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வில் கி.மு 3ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த மனித உடலும், ஆனைக்கோட்டை முத்திரையும் கண்டெடுக்கப்பட்டது. இம்முத்திரையில் "கோவேத" என எழுதப்பட்டிருந்தது. இது வடபகுதியில் ஒரு நகரநாகரிகம் பௌத்தத்தின் முன்னரே இருந்தது என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

அடுத்து கந்தரோடையில் 1917, 1957, 1964, 2011, 2016 ஆகிய



Excavators within the Jaffna Fort in 2011 reaching the water table. Photo Courtesy: TamilNet

ஆண்டுகளில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளில் எண்ணற்ற நாகர்களின் தடயங்களும், 18 அடுக்கு கொண்ட நகர நாகரிகத்தில் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதை 'Kantharodai Civilization of Ancient Jaffna" என்ற பெயரில் கலாநிதி எஸ். தியாகராஜா அவர்கள் விரிவாக எழுதியுள்ளார்.

இதில் குறிப்பாக 1917 ஆம் ஆண்டு கந்தரோடையை முதன் முதலில் ஆய்வுசெய்த திரு.போல் பீரிஸ் அவர்கள் 1919 பெப்ரவரி 22 ஆம் திகதி டெய்லி நியூஸ் ஆங்கிலப்பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி முக்கியமானது அதை இங்கு தருகின்றேன்.

"I hope the Tamil People will realize that in truth, there is buried in their sands, the story of much more fascinating development than they had hitherto dreamed2" என்றார். அதாவது இதுவரை கனவிலும் எண்ணிப்பார்க்காத தமது நாகரிகத்தின் கவரத்தக்க வளர்ச்சிக் கட்டடம் பற்றிய சான்றுகள் உண்மையகவே மண்ணுள் புதைந்திருப்பதை தமிழ்மக்கள் ஒரு காலத்தில் உணர்வார்கள் என நம்புகின்றேன்.

இதுவே இதன் தமிழ்வடிவம். இக்கந்தரோடை நாகரிகம் கிமு. 500 இற்கும் கி.மு 600 இற்கும் இடைப்பட்டது என்கிறது தொல்லியல் ஆய்வு முடிவுகள். எனவே இது பௌத்தத்திற்கு முந்தைய நாகரிகம் இருந்துள்ளது என்பதனை ஆதாரப்படுத்துவதன் மூலம் ஈழத்தமிழர் வரலாறு திருத்தி எழுதப்படுவதன் அவசியத்திற்கு வலுச்சேர்க்கிறது.

1992 ஆண்டு காலப்பகுதியில் பூநகரி மண்ணித்தலையில் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கி.மு முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த "ஈலா" என்ற மட்பாண்டமும் "வேள்" என்கின்ற வாசகமுடைய மட்பாண்டமும் கண்டெடுக்கப்பட்டது இது இந்த ஆய்விலேயே ஈழம் என்கின்ற பெயர் முதன்முதலில் காணப்படுகிறது. இவையும் வரலாறு திருத்தி எழுதப்படவேண்டிய அவசியத்தைக் காட்டுகிறது.

2011 ஆம்ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையே திருத்தி மீள அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது சில தொல்லியல் தடயங்கள் காணப்பட பிரித்தானிய டெர்காம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த றொபின் கொன்னிங்காம் அவர்களாலும் யாழ் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவும் இணைந்து நடத்திய தொல்லியல் ஆய்வின் முடிவுகள் 2017 இல் வெளிவந்திருந்தன.

இது இற்றைக்கு 2700 ஆண்டுகளின் முன்னர் யாழ்க்கோட்டையானது ஒரு துறைமுக நகரமாக பூம்புகார், கொற்கை ஆகிய தமிழக துறைமுகங்களிற்கு இணையாக விளங்கியது என்பதனை நிரூபித்திருக்கிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், உரோமர்களுடனும், சீனர்களுடனும், பாரசீகர்களுடனும் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தினை எடுத்துக்கூறியதுடன் நாகர்களின் தொல்தடயங்களையும் காட்டியது.



படம் - 31. மட்பாண்டத்தில் காணப்படும் 'ழ' என்ற தமிழ்ப் பிராமி எழுத்து

37



படம்-33. ஈலா என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம்:

இதனால் றொபின் கொன்னிங்காம் மீண்டும் ஒருதடவை யாழ்க்கோட்டையில் ஆய்வைச் செய்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை. இது விஜயன் காலத்திற்கு முன்னரே இலங்கையில் ஒரு நாகரிகம் மட்டுமல்ல ஒரு துறைமுக நகரமே இருந்தது என்பதை தொல்லியல் ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றது. இது ஈழத்தமிழர் வரலாற்றை திருத்தி எழுதப்பட வேண்டும் என்பதனை திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறது.

மேலும் வன்னிப்பகுதி எங்கும் போருக்கு பின்னர் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் அனைத்தும் பௌத்தத்தின் முன்னர் இலங்கையில் நாகர் அரசுகள் இருந்தது என்பதனை நிரூபிக்கின்றது.

குறிப்பாக நெடுங்கேணி, புதூர் பகுதியில் உள்ள நாகதாளி, கல்லிருப்பு, வவுனிக்குளம், கரும்புள்ளியான் போன்ற இடங்களைச் சொல்லாம்.

இதில் வவுனிக்குளத்தினை சுற்றி ஒரு ஆறுமைல் சுற்றுவட்டத்திற்குள் பரந்துபட்ட அளவில் ஏராளமான தொல்லியல் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் விசேடமாக நாகர்களின் கல்வெட்டுக்களையும் அவர்களின் கட்டடக்கலையையும் சொல்லாம். அவர்களின் கட்டடக்கலையின் சிறப்பம்சம் தூண்தாங்கு துளைகற்களாகும்.



Potsherd from the citadel of Anuradhapura with Brahmi writing which reads as *THAYA KUDE*, meaning Thaya's pot. Some claim this as Prakrit, while others as Tamil. The words Kuda, Kudam, Kuduvai are Dravidian in origin meaning types of pots. These words are still used in Tamil and Malayalam. This word has no meaning in Prakrit. Furthermore the script of the second letter '*yā*' is exclusive to Tamil Brahmi. Asokan Brahmi is written with a dent at the bottom. The grafiti mark at the end is found in some of the Indus Valley seals.
This sherd has been dated to 700-500 BCE by thermo-luminescence (TL) dating.
Picture Courtesy: S.U. Deraniyagala.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள் கீழடிக்கு இணையாக உள்ளது. வவுனிக்குள நாகரிகம் கி.மு 500 ஆண்டுகளிலிலேயே ஒரு பெரு நகரமாக இருந்திருக்கிறது என்பதனை அங்கு 2013 முதல் 2020 வரை மேற்கொள்ளப்பட்ட சிறு சிறு ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இது விஜயனுக்கு முந்தைய நாகரிகம் வன்னிப்பகுதியில் இருந்ததனை காட்டுகிறது. இதனால் தான் இதை வவுனிக்குள நாகரிகம் என்கின்றேன்.

இதைவிட கிழக்கு மாகாணங்களில் 2012 முதல் 2018 சில இடங்களில் பேராசிரியர் பத்மநாதன் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கி.மு.3 நூற்றாண்டைய நகர்களின் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அனைத்தும் "வேள்ணாகன் மகன் வேள்கண்ணன் வேள்கண்ணன் மகன் வேள்ணாகன்" என்று எழுதப்பட்டிருக்கிறது இது மட்டக்களப்பில் மட்டுமல்ல. வன்னிப்பிரதேசமெங்கும் காணப்படுகிறது.



தமிழகத்தில் இல்லாத சிறப்பம்சம் ஒன்று ஈழத்தில் காணப் படுகிறது.

அதாவது ஈழத்தில் கி.மு காலத்தைய சிவ என்ற பெயர்கள் காணப்பட்ட தொல்லியற்தடயங்கள் காணப்பட தமிழகத்தில் இவை இல்லை. அத்துடன் நாகர்களின் பெயர்களும், ஊர்களும் தமிழகத்தில் காணப்பட்டாலும், நாகர்களின் கட்டடக்




கலையும், அவர்கள் பொறித்த கல்வெட்டுக்களும் ஈழத்திலேயே சிறப்பாக உள்ளது என்பதனை போருக்கு பின்னான ஆய்வுகள் காட்டுகின்றன.

எனவே மகாவம்சமும், தமிழர்களும், மகாவம்சம் ஒதுக்கிய தமிழர்கள், மகாவம்சத்தின் வரலாற்று நம்பகத்தன்மை, சிங்களவர்களின் மரபணுவியற்கூறுகள் என மேற்கூறப்பட்ட தலைப்புக்களில் ஒரு விரிவானஆய்வுகளை மேற்கொண்டு தொல்லியல் மற்றும் மரபணுவியல் ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட ஆதாரங்களோடு ஈழத்தமிழர்களின் வரலாறு திருத்தி எழுதப்படவேண்டும்.

நன்றி: முகநூல் – ஈழத்து வரலாறும் தொல்லியலும்

# ஆர்த்தெழும் அலையே; எங்கள் கார்த்திகைப் பூவே; வாழி!



தாய்மொழி யாரும் இன்றித்
தவித்தது; மூச்சிடப் பயந்து
போய்விழுந் தெதிரி காலில்
பணிந்தது. எங்கள் முன்னோர்
செய்தநற் தவத்தால் இந்த
ஜெகத்தினில் பிறந்தோன்; எம்மை
உய்த்தெழச் செய்தோன்; தலைவன்
எம்மோடு வாழ்வான் பல்லாண்டு!

# தாயகக் கனவுக்காக வீழ்ந்த முதல் வித்துக்கள்!



## லெப். சங்கர்
(முதல் மாவீரர்)

லெப. சங்கர் அல்லது சுரேஷ் என அழைக்கப்பட்ட செல்வச்சந்திரன் சத்தியநாதன், வடமராட்சி கம்பர்மலையை சேர்ந்தவர்.

1961.06.19 ஆம் நாள் பிறந்தவர். தனது 16 ஆவது வயதில் -1977 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இணைய விரும்பி செல்கிறார். போராட்ட வாழ்வின் கடின தன்மையை கருத்தில் கொண்டு சிறியவரான சங்கரை, தலைவர் பிரபாகரன் ஏற்க மறுத்து கல்வியைத் தொடருமாறு அனுப்பிவிடுகிறார்.

போராளி கனவை சுமந்த சங்கர் மீண்டும் அடுத்த ஆண்டு - 1978 இல் திரும்ப செல்கிறார். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் ஒருவரானர். 1979 இல் பயிற்சியை பெறுகிறார். அதே ஆண்டு தேடப்படு வோரில் ஒருவராகிறார்.

1981 இல் நவீன ஆயுதத்தைப் பெறுகிறார். அத்துடன் தாக்குதல் குழு ஒன்றுக்கும் பொறுப்பாளராகிறார். 1982 ஆடி இரண்டாம் நாள் முதல் தாக்குதலை நெல்லி யடியில் தலைமையேற்ற நடத்தினார். இதில் 4 பொலிஸார் கொல்லப்பட்டு, ஆயதங் களும் கைப்பற்றப்பட்டன. இதே ஆண்டு தலைவர் பிரபாகரனிற்கு முதன்முறையாக மெய்ப்பாதுகாவலராக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சங்கரே.

இராணுவ முற்றுகைக்குள் இருந்து சங்கர் தப்பியபோது சூட்டுக்கு இலக்காகி வயிற்றில் காயமடைகிறார். தமிழ்நாட்டுக்கு மருத்துவத்திற் காக கொண்டு செல்லப் பட்டபோதும் மலனின்றி 1982.11.27 அன்று தாயகத்தின் முதல் வித்தாக தலை வனின் மடியிலேயே உயிர் சாய்ந்தார்.



## லெப். சீலன்
(முதல் தளபதி)

லெப். சலன் அல்லது ஆசீர் என்று அறிப்பட்டு தலைவர் பிரபாகரனால் இதையச் சத்திரன் என்றும் விளிக்கப்பட்டவர் ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி.

தமிழர் தலைநகர் திருகோணமலையே இவரின் பிறந்த இடம். 1960.12.11 அன்று பிந்தார். 1978 இல் பாடசாலை நிகழ்வில் ஏற்பட இருந்த சிங்கக்கொடி யை பொஸ்பரஸை பயன்படுத்தி ஏற்றியபோதே எரிய வைத்தார்.

கைது செய்யப்பட்ட சாள்ஸ் அன்ரனி, இராணுவ, பொலிஸ் எந்திரங்களால் சித்திர வதைக்கு உள்ளானான். மீண்டு வந்த விடதலைப் புலியானான். ஆரம்பம் முத லே பயிற்சி, சண்டையில் சிறந்து விளங்கியதால் புலிகளின் சண்டை அணிக்கு இவரே தளபதி - புலிகளின் முதல் தளபதி.

1981 இல் புலிகளின் முதல் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்னர். இரு வரையும் வீழ்த்தியவர் சாள்ஸ் அன்ரனியே. 1982 இல் காரைநகர் தாக்குதல், பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றார்.

சாள்ஸ் அன்ரனி மறைந்திருந்த இடம் காட்டிக் கொடுக்கப்பட்டது. இராணுவம் முற்றுகையிட்டது. முற்றுகையை உடைத்து நண்பர்களுடன் வெளியேறிய போது சீலன் காயமடைகிறார். தன்னிடம் இருந்த ஆயுதத்தை காப்பாற்றவும், எதிரிகளிடம் பிடிபடாமலும் இருக்க தன்னை சுட்டக் கொல்லுமாறு பணிக்கிறார். தளபதியின் கட்டளை துயரத்துடன் நிறைவேற்றப்படுகின்றது. 1983.07.15 ஆம் நாள் முதல் தளபதி தாய் மண் மீட்புக்கு தன்னை உரமாக்கினான்.



## கப்டன் ஜோன்சன்
(முதல் இஸ்லாமிய தமிழர்)

கப்டன் ஜோன்சன் என அழைக்கப்பட்ட ஜுனைதீன், விடுதலைப் போராட்டத் திற்காக புலியாக தன்னை அர்ப்பணித்த முதல் இஸ்லாமியத் தமிழர். மட்டக் களப்பு ஓட்டமாவடியில் 22.08.1963 ஆம் நாள் பிறந்தார். ஜீனை தீன். ‘தமிழீழ விடுதலை நாகங்கள்’ (நாக படை) என்ற அமைப்பை நடத்தினார். கிழக்கு மாகாணத்தில் தாக்குதல்களை நடத்தி அதிர்வலைகளை ஏற்படுத்தினார்.

பொலிஸ், இராணுவ நடவடிக்கைகளால் நாக படை இயங்குநிலையை இழக்கவே. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னையும் நண்பர்களையும் இணைத்துக் கொண்டார். இந்தியாவில் புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாமில் ஆயதப் பயிற் சியைப் பெற்றார். இஸ்லாமிய தமிழன் என்பதில் பெருமை கொண்ட ஜுனைதீன் தலைவர் பிரபாகரனை விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டார்.

1985 இல் குரநகர் பொலிஸ் நிலையம், கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல் களில் ஈடுபட்டு திறமையை வெளிப்படுத்தியிருந்தார். பின் மட்டக்களப்பில் இயங்கினார்.

நண்பருடன் மோட்டார் சைக்கிளில் ஆதித்திய மலைக்கு சென்றபோது பொலிஸார் மறைந்திருந்து தாக்கி ஜோன்சனைக் கைது செய்து கொழும்பு பனாகொட சிற றையில் அடைத்தனர். அங்கிருந்து தப்பித்தபோது 1985.11.30 அன்று இராணுவத் தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தாய் மண்ணுக்கு முதல் இஸ்லாமிய தமிழ் மாவீரனாக விதையானார்.



## கப்டன் மில்லர்
(முதல் கரும்புலி)

மில்லர் என அழைக்கப்பட்ட வல்லிபுரம் வசந்தன் யாழ்ப்பாணம் கரவெட்டி -துன்னா லையை சொந்த இடமாகக் கொண்டவர். 1996.01.01 ஆம் நாள் பிறந்த வசந்தன். 1983 இல் விடுதலைப் புலிகளுக்காக இணைய முயன்றார். ஆதரவாக செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டார். புலிகளின் நம்பிக்கையைப் பெற் றதும் வாகன ஓட்டியாக கடமையைத் தொடங்கினார்.

பயிற்சி முகாமில் மில்லர் என்ற பெயர் சூட்டப்பட்டது. பல தாக்குதல்களில் பங்கேற்ற மில்லர். இராணுவம் மேற்கொண்ட ஒப்ரேஷன் லிபரேசன் தாக்குதல் முறியடிப்பிலும் ஈடுபட்டிருந்தார். நெல்லியடி மத்திய கல்லூரியைக் கைப்பற்றிய இராணுவம் அங்கு முகாம் அமைத்து நின்றது. இராணுவப் பிடியில் இருந்து வடமராட்சியை மீட்க விடுத லைப் புலிகள் கரும்புலித் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டனர்.

திட்டம் தயாரானது. கரும்புலிகள் எனத் தனியான பிரிவு அப்போது இருக்கவில்லை. கரும்புலியாக யார் செல்வது என்ற கேள்வி எழப் பலர் முன்வந்தனர். அடம்பிடித்து வாய்ப்பை பெற்றுக்கொண்டான். முன்னரும் கரும்புலித் தாக்குதல் ஒன்றை நடத்த முயன்றிருந்தார் மில்லர். எனவே அவருக்கே வாய்ப்பு சென்றது.

சக்கை (வெடிமருந்து) நிரப்பிய சென்ற மில்லர். இலக்கை நோக்கி செலுத்தி தம்பிப்பதே திட்டம். சில வேளைகளில் இலக்குப் பிசகவும் வாய்ப்பு இருக்கும். இதனால் பிரதான முகாம் வரை சென்று மோதி அழித்தார் மில்லர். 1987.07.05 அன்று வருங்கால சந்ததிக்காக தன்னையே நெருப்பாக்கிய மில்லர்தான் முதல் கரும்புலி மாவீரர்.



## லெப். கேணல் திலீபன்
(முதல் அகிம்சை மாவீரர்)

லெப். கேணல் திலீபன் என அறியப்பட்டவரின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். ஊரெழுவைச் சேர்ந்தவர். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத் துவபீட மாணவரான பார்த்தீபன், விடுதலைப் புலிகளில் இணைந்து திலீபன் என பெயர் சூடிக்கொண்டார்.

போர்க் களங்களில் பங்கெடுத்தவர். கூரிய அரசியல் சிந்தனை கொண்ட வராக இருந்தார். களத்தில் காயமடைந்து அகற்றப்படவே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பு வகித்தார். விடுதலைப் புலிகள் பல துறைகளில் சிறக்க வழியமைத்தவர்களில் இவரும் ஒருவர்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாற அகிம்சை ஆயுதத்தை கையில் எடுத்து உணவு, தண்ணீரை ஒறுத்து நல்லூரில் சத்தியப்போர் புரிந்தார். ஆனால் கொடுங்கோலர் களிடம் இந்தப் போராட்டம் எடுபடவில்லை. இலட்சியத்தில் உறுதியாக இருந்த திலீபன் 12 நாள் பட்டினித் தீயில் தன்னை எரித்து 1987.09.26 அன்று உயிர் நீத்தார். இவரே தாயக விடுதலைக்காக வீழ்ந்த முதல் அகிம்சை மாவீரர்.



## 2 ஆம் லெப். மாலதி
(முதல் பெண் மாவீரர்)

மாலதி என அறியப்பட்ட பேதுரு சகாயசீலி மன்னார் ஆட் காட்டி வெளியை சேர்ந்தவர். 1967.01.04 ஆம் நாள் பிறந்தவர் 1984 இல் தன்னை விடுதலைப் போராட்டத் தில் இணைத்துக் கொண்டார்.

பயிற்றிகள் முடித்து புலி வீராங்களையானவர் இராணுவத் துக்கு எதிராகப் பல சண்டைகளில் பங்கெடுத்தார். இந்திய இராணுவத்துக்கு எதிராக 1987 ஒக்ரோபரில் கோப்பாயில் பெரும் தாக்குதலைப் புலிகள் தொடங்கினர். அதில் பங் கெடுத்தார். இந்தத் தாக்குதலில் மாலதி, 2ஆம் லெப். மாலதி யாக 1987.10.10 அன்று வீரச்சாவடைந்தார். இவரே தமிழின விடுதலைக்காகப் பலியான முதல் பெண் மாவீரர்.







## மேஜர் காந்தரூபன் / கப்டன் கொலின்ஸ் / கப்டன் வினோத்
(முதல் கடற்கரும்புலிகள்)

மேஜர் காந்தரூபன் என அழைக்கப்பட்டவர் யோகராசா கோணேஸ்வரன் (வல்வெட்டித்துறை) என்ற இயற்பெய ருக்கு உரியவர். இதேபோன்று கப்டன் கொலின்ஸின் இயற் பெயர் பர்ணாந்து சில்வஸ்டார் (மன்னார்), கப்டன் வினோத் வேலுப்பிள்ளை திலகராசா (வல்வெட்டித்துறை).

வெவ்வேறு காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தவர்கள். கடற்புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் உள்வாங்கப்பட்டார்கள். கடற்படையின் கப்பல்கள். படகுகள் மீனவர்களுக்கும், தாயகத்துக்கும் பெரும் தொந் தரவளிக்க, தரையில் நடத்தப்படுவது போன்று, கடலிலும் கரும்புலித் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடப்பட்டது.

கேணல் சங்கர் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டு திட்டமும் தீட்டப்பட்டது. வலவெட்டித்துறையில் அழிப்புக்கு கட்டளையிட்டுக் கொண்டிருந்த எடித்தாரா கப்பலை 10.01.1990 ஆம் ஆண்டு தாக் கியழித்து முதல் கடற்கரும்புலி வீர மறவர்களாகினர்.



## கப்டன் அங்கையற்கண்ணி
(முதல் பெண் கடற்கரும்புலிகள்)

அங்கையற்கண்ணி என அறியப்பட்டவர் துரைிங்கம் புஸ் பகலா, யாழ்ப்பாணம்-மண்கும்பானில் 1973.05.10 ஆம் நாள் பிறந்தவர். குடும்பம் ஏழ்கையில் வாடியபோதும் விடு தலை வேட்கையால் களமாடப் புகுந்தார்.

கடற்புலிகள் பிரிவில் 3 ஆவது அணியில் பயிற்சி பெற்று பல கடற்சண்டைகளில் ஈடுபட்டார். கரும்புலியாக அனுமதிக்கக் கோரி தலைவருக்கு கடிதமும் எழுதினார். கடற்கரும்புலி களுக்கான அடிப்படை பயிற்சியின்போது 35 கிலோமீற்றர் தூரம் 8 மணி நேரம் நீந்தினார்.

காங்கேசன்துறையில் தரித்து நின்ற கட்டளைக் கப்பல், டோறாப்படகு மீதான தாக்குதலில் கடற்கரும்புலியானார். 1 6.08.1994 ஆம் ஆண்டு கடலில் காவியமான அங்கையற் கண்ணியே முதல் பெண் கடற்கருப்புலியாவார்.



## மேஜர் யாழினி
(முதல் பெண் தரைக் கரும்புலிகள்)

மேஜர் யாழினி இவரின் இயற்பெயர் சிவசுப்பிரமணியம் ராகினி. யாழ்ப்பாணம் உரும்பிராயில் 1975.05.03 அன்று பிறந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் விடுதலைப்புலி யானார். புகழ்பெற்ற மணலாறு களமுனையில் சாதித்தவர். கரும்புலி அணிக்குச் சென்றவர். சூரியக் கதிர் நடவடிக்கையில் சிறந்த வேவுப் போராளியாகவும் தன்னை நிருபித்தார்.

பெரும் சமர்களில் முக்கயமான ஜெயசிக்குறு சண்டையில் எதிரி யின் இலக்கை அழித்து 1997.06.10 ஆம் நாள் முதல் பெண் தரைக் கரும்புலியாக தாய் மண்ணுக்கு உரமானார்.





## கேணல் ரூபன் / லெப். கேணல் சிரித்திரன்
(முதல் வான் கரும்புலிகள்)

1990களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தார்கள். வான்புலிகள் கட்டமைப்பு உருவாக் கப்பட்டபோது உள்வாங்கப்பட்டவர்கள். தலைவரின் மெய்ப்பாதுகவலர்களாகவும் - நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் இருந்தனர். இறுதியுத்த காலத்தில் விமானங்களில் ஏறி பல தாக் குதல்களை நடத்தினர். இறுதிக் கட்டமாக 2009.02.20 அன்று வான் கரும்புலிகளாகி வரலாறாகினர்.

# மாவீரர் துயிலுமில்லப் பாடல்



மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!



தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!



எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!



சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!



உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியரசு சென்றிடுவோம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியரசு சென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்



எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

"உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன."
- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -



# மாவீரர் விதைப்பும் இறுதிச் சடங்கும்

நீத்தாரைச் சிறப்பிக்கும் இயல்பு மனித இனத்தின் பொதுப்பண்பு. மனிதகுலம் தோன்றிய காலத்திலேயே இறுதிச் சடங்குகளும். கிரியைகளும் ஓரளவு தொடங்கிவிட்டன. காலப் போக்கில் அவை விரிவடைந்து மனித நாகரிகத்தின் முக்கிய பகுதியாக இன்று இடம் பெறுகின்றன. நீத்தாரின் உற்றார், உறவுகள் நிறைவேற்றும் கட்டாயச் செய்கடனாகவும் சரம கிரியைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. வாழ்விடம், மதநம்பிக்கை, இனப் பாரம் பரியம், வாழ்க்கை நிலை போன்றவை இவ்விதிமுறைகளின் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. அவற்றில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் உயிர்பிரிந்த மனித உடலுக்கு காட்டப்படும் அஞ்சலி வணக்கத்தில் மாத்திரம் மாற்றம் ஏற்படவில்லை.

நீத்தார் உடலுக்கு மனிதன் காட்டும் உள மார்ந்த மரியாதையும் சாவிற்குப்பின் மறு வாழ்வும் தொடர்ச்சியான பிறப்பும் இறப்பும் உண்டு என்ற தளராத நம்பிக்கையும் இறுதிச் சடங்குகளும் சரம கிரியைகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. புதைத்தல், எரித்தல் என்ற இருவிதமாக மனித உடல் சிறப்பிக்கப்படுகின்றது. எது முதற் தொடங்கியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. புதைத்தல் முறைதான் மிகக்கூடுதலாக உலக மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. புதைத்தல், எரித்தலைவிட வேறுமுறைகளும் கைக் கொள்ளப்பட்டாலும் அவை விதிவிலக்காகவே உள்ளன.

உலகின் முக்கிய மதங்களில் சாவீட்டிலும் அடக்கம் செய்யும் இடத்திலும் இறந்தவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கான விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடத்தப்படுகின்றன. இவை மனிதர்களுக்கு ஆன்மா உண்டு என்ற அடிப்படையில் செய்யப்படுகின்றன. மனிதன் புதைக்கப்படுவதற்கும் இக்கோட்பாடு காரணமாக அமைகின்றது. உலகின் மிகப் பழைமை வாய்ந்த நாகரிகத்தைக் கொண்டிருக்கும் சீனர்கள் புதைக்கப்பட்ட உடலுக்குமேல் எழுப்பப்படிருக்கும் கட்டிடத்திற்கும் அதன் ஆன்மாவுக்கும் இடையில் நேரடித்தொடர்பு இருப்பதாக நம்புகின்றனர். இக்கட்டிடத்திற்குச் சேதம் ஏற்பட்டால் அந்த ஆன்மாவுக்குச் சஞ்சலம் ஏற்படும் என்று அவர்கள் நம்புகின்றனர். சீனர்கள் மண்ணில் தமது சடலங்களைப் புதைத்து அதன்மேல் மிகவும் ஆடம்பரமான நினைவுக் கட்டிடங்களை எழுப்புகின்றார்கள். செஞ்சீனாவின் தோற்றத்தின்பின் ஆடம்பரத்தைக் குறைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று எரிப்பதற்கும் புதைப்பதற்கும் பிரத்தியேகமான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் தமது புதைநிலங்களை தேவாலயங்களுக்கு அருகாமையில் வைத்திருக்கின்றனர். இட நெருக்கடி காரணமாக தூர இடங்களிலும் புதைக்கின்றனர். யூதர்களும், இஸ்லாமியர்களும் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இறந்த அதேநாளில் அல்லது இயன்றளவு வேகமாக முஸ்லிம்கள் தமது சடலங்களை அடக்கம் செய்கின்றனர். முஸ்லீம்களனி சடலங்கள் வலதுபக்க உடல் சரித்துக் கீழ்ப் புறமாகவும் முகம் மெக்காவை நொக்கிய திசையிலும் சரித்துக் கிடத்தி அடக்கம் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் முதுகுப்புறம் நிலத்தில் படும்படி அடக்கம் செய்கிறார்கள். கிறிஸ்தவமதம் ஆரம்பித்த காலத்தில் சடலத்தின் கால்கள் கீழ்த்திசையைப் பார்த்தபடி இருக்கும் நிலையில் புதைத்தனர். சூரியோதயத்தோடு மீள்பிறப்பு ஆரம்பிக்கும் என்ற அர்த்தத்தில் இவ்வாறு செய்யப்பட்டது.

புத்த மதத்தினர் தமது சடலங்களை ஒரு காலத்தில் புதைத்திருக்கிறார்கள். அப்போது தலையை புத்தர் பிறந்த வடக்குப் பக்கமாக வைத்துப் புதைத்தார்கள். ஆபிரிக்கவாழ் பழங்குடி மக்கள் பலர் இறந்த உடலை கருப்பையில் கிடக்கும் சிசுவைப்போல் முழந்தாளை மார்பு வரை இழுத்து மடக்கிய பின் புதைக்கின்றனர். பிறப்பும் இறப்பும் தொடர் நிகழ்ச்சிகள் என்ற அரிய தத்துவம் இதனால் உணர்த்தப்படுகின்றது. இன்னும் சில பழங்குடி மக்கள் உடல்களை பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உணவாக்கும் நோக்கில் வெளியில் போட்டு வைக்கின்றனர். தீயை வணங்கும் பார்சி மதத்தினர் அமைதிக்கோபுரம் என்று (TOWER OF SILENCE) அவர்கள் அழைக்கும் உயரமாக கட்டிடத்தில் அதேநோக்கி தமது சடலங்களைவிட்டுச் செல்கின்றனர்.

மனிதவாழ்வு நிலையானதல்ல. ஆனால் மனித உடல்மீது எழுப்பப்படும் நினைவுக் கட்டிடங்களும், உடலை அடக்குவதற்காக ஒதுக்கப்பட்ட புனித நிலங்களும். இவைபற்றி எழுந்த பன்மொழி இலக்கியங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. புராதனகால ஏழு அதிசயங்களில் ஆறு அழிந்து விட்டன. எஞ்சியது எகிப்தின் கூபூ (KHUFU) மன்னனின் கீசா (GIZA) பிரமிட் கல்லறை மாத்திரமே. பதின்மூன்று ஏக்கர் அடிப்பாகத்தைக் கொண்ட எகிப்தின் கீசா பிரமிட் உலகின் மிகப்பெரிய கற்கட்டிடமாகக் கணிப்பிடப்படுகிறது. இதன் காலம் 5,000 வருடத்திற்கு முந்தியது. எகிப்திற்குப் புகழ் சேர்க்கும் பிரமிட்டுக்கள் யாவும் கல்லறைகளே.

ஜோர்தான் நாட்டின் பெற்றா (PETRA) நகர்ப்புறத்திலுள்ள பாறை மலை உச்சியில் குடையப்பட்ட கற்குழிகளில் புராதன கால உடல்கள் அடைக்கம் செய்யப்பட்டுள்ளதை 1812 இல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கிறிஸ்தவமதம் தொடங்கிய காலத்தில் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் மிகவும் மறைவாக கிறிஸ்தவர்கள் தமது சடலங்களைப் புதைத்தனர். நிலத்தின் கீழ் மூன்றடி அகலமான சுரங்கப் பாதைகளை வெட்டி, பாதைச் சுவர்களில் குடைந்த பகுதிகளில் அவர்கள் சவப்பெட்டிகளை மறைத்துவைத்தனர். சுரங்கப் பாதைகள் கிளைவிட்டு நெடுந்தூரம் சென்றன. படிக்கட்டுக்களை அமைத்தவாறு மென்மேலும் ஆழமான சுரங்கப் பாதைகளை அவர்கள் வெட்டினார்கள். இந்த அதிசய புதைப்புச் சுரங்கங்கள் "கற்றகோம்ஸ்" (CATACOMBS) என்று அழைக்கப்படுகின்றன. கி.பி. 313 இல் கிறிஸ்தவத்திற்கு அரசு அங்கீகாரம் கிடைத்தாலும் கி.பி. 410 வரை சுரங்கப் புதைப்புக்கள் தொடர்ந்தன. 10ஆம் நூற்றாண்டில் அவற்றின் இருப்பை மக்கள் மறந்துவிட்டார்கள். 16ஆம் நூற்றாண்டில் அவை தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ரோமாபுரியிலும் பிற ஐரோப்பிய நகரங்களிலும் காணப்படும் கற்றகோம்ஸ் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கணிப்பிடப்படுகின்றன.

உலகம் பூராகவும் இடு நிலங்களும் சுடுகாடுகளும் தேசிய உடைமையாகவும் வணக்கத்தலங்களாகவும் மதிப்பிடப்படுகின்றன. இறந்த உடல்களுக்குமேல் எழுப்பப்பட்ட கோயில்கள் இந்தியா, தமிழீழம் உட்பட உலகின் பல பாகங்களில் உள்ளன. மகாத்மா காந்தி எரிக்கப்பட்ட இடத்தில் வருடாவருடம் ஆராதனைகளை நடத்தப்படுகின்றன. பிறநாட்டு முக்கியஸ்தர்கள் அங்குசென்று வணக்கம் செய்வதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளனர்.

இங்கிலாந்தின் வெஸ்ற்மினிஸ்ரர் அபே (WEST-MINISTER ABBEY) என்ற பிரமாண்டமான கிறிஸ்தவ தேவாலயத்தின் உடற்புறத்தே 3000 வரையிலான கல்லறைகள் இடம்பெறுகின்றன. அரச பரம்பரையினரின் முடிசூட்டுவிழா தொடக்கம் நல்லடக்கம் வரை இத்தேவாலயத்தில் நடைபெறுகின்றன. இங்கிலாந்தின் புகழ்பெற்ற அரசினர், அரசுத் தலைவர்கள், விஞ்ஞானிகள், புலவர்கள், படைத்தலைவர்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

போர்வீரர்களுக்கென்று பிரத்தியேகமான இடு நிலங்களை ஒதுக்கி மிகவும் உன்னதமான நிலையில் பராமரிக்கும் வழமை 1880 இல் நடந்த உள்நாட்டுப் போரின்பின் அமெரிக்காவில் ஆரம்பமாகியது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் அமெரிக்கப் போர்வீரர்களின் இடுநிலங்கள் பராமரிப்பதற்குப் பொறுப்பாக ஒரு திணைக்களம் அமெரிக்காவில் இயங்குகிறது. அமெரிக்கப் போர் வீரர்களின் சடலங்கள் அடங்கிய பேழைக்கு செய்யும் மரியாதைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பேழையும் தேசியக்கொடியினால் போர்த்தப்பட்டு, பேழைக்கு நான்கு போர்வீரர்கள் என்ற விகிதத்தில் மரியாதைக் காவல் செய்யப்படுகின்றது. இடுகுழியில் இடமுன்பு மிகவும் உணர்வு பூர்வமாகத் தேசியக் கொடி அகற்றப்பட்ட இறந்தவரின் உரித்தாளருக்கு வழங்கப்படுகிறது.

உடலைத் தகனம் செய்யும் மின்சார அடுப்பு கண்டுபிடிக்கப்பட்டபின் புதைத்தல் பெருமளவில் குறைந்துள்ளது. உலகின் முதலாவது இந்த அடுப்பு அமெரிக்காவின் பென்சில் வேனியா மாநிலத்தில் 1876 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சிறீலங்காத் தலைநகர் கொழும்பிலும் இந்த அடுப்பு இன்று இயங்குகின்றது. மேற்குநாடுகள் யாவற்றிலும் சிறைமெற்றோறியம் (CREMATORIUM) என்ற இந்தவசதி காணப்படுகின்றது. புதைப்பதைத் தேசியப் பாரம்பரியமாகக் கொண்ட சீனாவில் வசதி குறைந்த மக்கள் எரிக்கும் அடுப்புக்களைப் பயன் படுத்துகின்றனர். இந்த அடுப்புக்களில் 3000 பரன்கைற் பாகை வெப்பம் ஏற்றப்படுகிறது. ஒரு மணிநேரத்தில் பெட்டியும் உடலும் எரிந்து சாம்பலாகின்றன. மேற்குலகில் இந்தவகை எரிப்பு பொது வழமையாகிவிட்டாலும் கத்தோலிக்க மதபீடம் தனது மதத்தினருக்கு இதற்கான அனுமதியை வழங்க மறுத்துள்ளது.



தமிழினத்தின் மூத்த குடிகள் இறந்தோரை ஈமத்தாழியில் இட்டுப் புதைத்தனர். ஈமத்தாழிகள் முதுமக்கட்டாழி என்றும் அழைக்கப்படுவதுண்டு. பெரும்பாலான ஈமத்தாழிகள் நெல் பயிரிடப்பட்ட நதியோரங்களில் வாழ்ந்த விவசாயச் சமூகத்தினரின் எச்சமாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் முடிவு. ஈமத்தாழி வசதி அற்றவர்கள் மண்ணில் புதைத்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. காவேரி, பொன்னையாறு, பாலாறு போன்ற நதியோரங்களில் பெருமளவு ஈமத்தாழிகள் கிடைத்துள்ளன. அடுத்ததாகத் தென் தமிழ் நாட்டின் தாமரபர்ணி, சித்தாறு, வைப்பாறு போன்றவை ஓரமாகவும் ஈமத்தாழிகள் மீட்கப்பட்டுள்ளன. வைப்பாறின் ஓரமாகவுள்ள சிவகிரி, பனையூர், வாசுதேவ நல்லூர் என்ற கிராமங்களிலும், சித்தாறின் அண்மையிலுள்ள இலஞ்சி, குற்றாலம் பகுதிகளிலும், தாமரபரணியின் சிவசைலம், அகஸ்தியமரை வெளிகளிலும். இதே நதி வந்துசேரும் பாம்பன் கரையோரத்திலும் ஈமத்தாழிகள் வெளிவந்துள்ளன. உலகப் பிரசித்திபெற்ற ஆதிச்சநல்லூர் ஈமத்தாழிக் கிராமம் பாம்பன் கரையோரத்தில் காணப்படுகிறது.

பாம்பன் கரையோரத்திற்கு நேராக இருக்கும் இலங்கையின் புத்தளம் தொடங்கி மன்னார் வரையிலான வடமேற்கில் பெருமளவு ஈமத்தாழிகள் காணப்படுகின்றன. பாம்பனில் வாழ்ந்தோர் இங்கும் வாழ்ந்தார்கள் என்பதை இது காடடுகிறது. புத்தளத்தின் பொம்பரிப்பில் 8000 வரையிலான ஈமத்தாழிகள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. வடமராட்சி வல்லிபுரப் பகுதியிலும் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வில்பத்து சரணாலயத்திற்கு உட்பட்ட தேக்கம், அளுத்பொம்பை, கரம்பன்குளம் பகுதியிலும் பெருமளவு ஈமத்தாழிகள் புதையுண்டு கிடக்கின்றன. ஆதிச்ச நல்லூருக்கும் பொம்பரிப்புக்கும் இடையில் மிகநெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு இருப்பதை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.

யாழ்ப்பாணத்து ஆனைக்கோட்டையில் ஈமத்தாழிகளும் மண்ணில் புதைக்கப்பட்ட உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. வேலணை சாட்டியில் ஈமத்தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. போராசிரியர் இரகுபதி குழுவினர் ஆனைக் கோட்டையில் செய்த ஆய்வின்போது 2500 வருட பழைமை வாய்ந்த இரு எலும்புக் கூடுகள் மத ஆசாரங்களுடன் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு எலும்புக்கூட்டின் கைவிரலொன்றில் பிரம்மி எழுத்தில் பொறிக்கப்பட்ட இலச்சினை மோதிரம் வெளிக்கொணரப்பட்டது. யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் பாதுகாப்பில் இருந்த இந்த மோதிரம் இப்போது காணாமறப்போய்விட்டது. மோதிரத்திலுள்ள தமிழ் பிரம்பி எழுத்துக்கள் அதுவொரு அரசனுக்குரியது என்ற செய்தியைக் கூறுகின்றன. மோதிரத்தைப்போல் மேற்கூறிய எலும்புக்கூடுகளும் காணாமறப்போய்விட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது மாவீரர்களின் வித்துடல்களைப் புதைப்பதற்கு எடுத்த தீர்மானம் எமதினத்தின் முதுபெரும் வரலாற்றை அடியொற்றியது. புதைத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தாது “விதைத்தல்“ என்ற சொல்லையும் உடலுக்கு ‘வித்துடல்“ என்ற பதத்தையும் நாம் பயன்படுத்துகின்றோம்.



மாவீரர்கள் மீண்டும் எழுவார்கள் அவர்கள் சடப்பொருள் அல்லவென்ற அர்த்தத்தில் விதைத்தல். வித்துடல் என்பவை பயன்படுகின்றன. 11, 12 நூற்றாண்டுகளில் தோன்றிய தமிழ் வீரத்தையும் தேசியத்தையும் உணர்த்தும் பரணி நூல்களில் “களம்“ என்ற நெற் களத்தையும் போர்க்களத்தையும் குறிக்கும் சொல் பயன்பாட்டில் உள்ளது. ஜெயங்கொண்டார் பயிர்த்தொழிலையும் போர்த் தொழிலையும் கலிங்கத்துப் பரணியில் இணைத்துப் பாடியுள்ளார்.

விடுதலைப்போரின் ஆரம்பகட்டத்தில் களப்பலியான புலிவீரர்களின் உடல்கள் புதைத்தல் எரித்தல் என்ற இரு வகையாகவும் சிறப்பிக்கப்பட்டன. பெற்றாரின் மதநம்பிக்கை மற்றும் தனி விருப்பத்திற்கு அமைவாகவும் போராளிகளின் வித்துடல்கள் எரிக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் வந்தன. பொதுமயானங்களில் அப்போது போராளிகளின் வித்துடல்கள் தகனம் செய்யப்பட்டன. அல்லது நல்லடக்கம் செய்யப்பட்டன. போராட்டகாலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வித்துடல்களைப் புதைக்கவேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் போரிட்ட காலத்தில் தேசியத் தலைவரும் அவருடைய புலிப்படையினரும் மணலாறுக் காடுகளில் நிலையெடுத்திருந்தனர். களப்பலியான வீரர்களைத் தகனம் செய்தால் இந்திய இராணுவத்தினர் புகை எழும் திசையையும் புலிகளின் மறைவிடங்களையும் கண்டறிந்து விடுவார்கள் என்ற காரணத்திற்காக ஆங்காங்கே காடுகள் தோறும் வித்துடல்கள் புதைக்கப்பட்டன. இப்போது மணலாற்றில் புதைக்கப்பட்ட புலிவீரர்களின் புனித எச்சங்கள் ஒரே இடத்தில், அதாவது மணலாறு துயிலும் இல்லத்தில் உணர்வு பூர்வமாக மீண்டும் விதைக்கப்பட்டுள்ளன. இத் துயிலும் இல்லத்திற்கு ஒரு தனிப்பட்ட வீரவரலாறு உண்டு என்பது வெளிப்படை.

போர் நடந்த இடங்களில் கைவிடப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட வீரர்களின் எச்சங்களை சாதகமான நிலை தோன்றிய பின்பு மீட்டெடுத்துத் தாயகம் எடுத்துச்செல்லும் இராணுவப் பாரம்பரியம் உலகில் உண்டு. செனற் கொலானா தீவில் இறந்த (1821) நெப்போலியனின் உடல் பலகாலத்தின் பின் பிரான்சு நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. அவருடைய எச்சங்கள் இன்வலிடே கட்டிடத்திலுள்ள தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. வலுவிழந்த போர்வீரர்களின் தங்குமிடமாக 1870 இல் பதினான்காம் லூயி மன்னன் இன்வலிடே (INVALIDES) கட்டிடத்தை எழுப்பினான். 1950 இல் நடந்த கொரிய தீபகற்பப் போரில் வடகொரியாவினால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க இராணுவத்தினரின் சில உடல்கள் மிக அண்மையில் அமெரிக்க இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டு முடிவுற்ற வியற்நாம் போரில் மடிந்த அமெரிக்க வீரர்களின் எச்சங்கள் கடந்த சில வருடங்களாக அமெரிக்காவுக்கு அதியுயர் இராணுவ மரியாதையுடன் அனுப்பப்பட்டன.

“துயிலும் இல்லம்“ என்ற சொற்றொடரை தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக்கியுள்ளனர். புலிவீரர்களின் வித்துடல்கள் ஆண், பெண் வித்தியாசமின்றி இங்க விதைக்கப்படுகின்றன. மாவீரர் பற்றிய புலிகளின் எண்ணக்கருவை இச்சொற்றொடர் உணர்த்துகிறது. முதலாவது துயிலும் இல்லம் கோப்பாயில் துயிலுமில்ல மண்ணில் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்டதோடு எரிக்கப்பட்டும் வந்தன. 1991இல் வித்துடல்கள்

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர், உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாருமென்றெண்ணி
உம்வாசலில் வந்துமே வணங்குகின்றோம்.
உங்கள் கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்.
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிர்வோம், உங்கள்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.



எரிக்கப்படமாட்டாது. புதைக்கப்படும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுபற்றி 1991 அம் ஆண்டின் ஐப்பசி – கார்த்திகை விடுதலைப் புலிகள் ஏடு “மாவீரர்களைத் தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்போது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக்கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்” என்று கூறுகிறது. “அம்முடிவானது போராளிகளுள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது” என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

வித்துடல்கள் புதைக்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டபின் முதன் முதலாகக் கப்டன் சோலையின் வித்துடல் கோப்பாய் துயிலும் இல்லத்தில் 14 ஜுலை 1991 ஆம் நாள் விதைக்கப்பட்டுள்ளது. வித்துடல் கிடைக்காது போனால் நினைவுக் கற்கள் நாட்டும் வழமை புலிகளாகிய எம்மிடம் உண்டு. அதே சமயத்தில் வித்துடல் ஒரு துயிலும் இல்லத்திலும் அவருக்கான நினைவுக்கல் இன்னுமோர் துயிலும் இல்லத்திலும் வைப்பது எமது இன்னுமொரு வழமையாகும். தென்தமிழீழ மாவீரர் பலரின் வித்துடல்கள் விஸ்வமடு மாவீரர் துயிலும் இல்லத்திலும் முள்ளியவளை துயிலும் இல்லத்திலும் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய நினைவுக்கற்கள் தென் தமிழீழத் துயிலும் இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாவீரர்களான லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் வித்துடல்கள் பாரிஸ் பொது மயானத்தில் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான நினைவுக்கற்கள் விசுவமடு துயிலும் இல்லத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. எமது துயிலும் இல்லங்களின் எண்ணிக்கை 25. மாவீரரின் கல்லறை மற்றும் நினைவுக்கல் (கார்த்திகை, 2005 வரை) ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 20,000 மேலதிக விரபத்தை பட்டியலில் பார்க்கலாம்.

களப்பலியான போர்வீரர்களுக்கும் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பிரத்தியேக இடங்களுக்கும் விசேட மரியாதை செலுத்தப்படுவது உலக வழமை. தலைத்தொப்பியை அகற்றியவாறு சிரம் தாழ்த்தி ஒரு கணம் துதிப்பது பொதுவான நடைமுறை. மிகவும் நேர்த்தியாகக் கலையுணர்வோடு பேணப்படும் பொது இடங்களில் ஒன்றாக போர் வீரர்கள் அடக்கம் செய்யப்பட்ட நிலங்கள் அமைகின்றன. இரண்டாம் உலகப்போரில் 9,386 அமெரிக்கன், 17,769 பிரிட்டிஸ், 5,002 கனேடின் மற்றும் 650 போலந்து வீரர்கள் 1944 இல் நடந்த நொர் மண்டி தரையிறக்கத்தில் இறந்தனர். இவர்களுடைய உடல்கள் 27 இடுநிலங்களில் புதைக்கப்பட்டுள்ளன. 2.5 மில்லியன் ஜப்பானிய போர்வீரர்களின் அன்மாக்கள் நினைவாக தலைநகர் தொக்கியோவில் யசுக்குனி போர் நினைவாலயம் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கண்டியில் பிரிட்டிஸ், பிரான்சு, கனடா, கிழக்கு ஆபிரிக்கா, தெற்கு ஆசியாவைச் சேர்ந்த இரண்டாம் உலகப்போர் வீரர்களுக்கான கல்லறைகள் கட்டப்பட்டுள்ளன. எதிரிகளுடைய கல்லறையாக இருந்தாலும் அவற்றிற்கு மரியாதை செலுத்தியவாறு பேணிவருவது உலகப் போரியல் பண்பு.



சிங்களப் படைகளின் யாழ். மீதான ரிவசெர படையெடுப்பின்போது கோப்பாய், கொடிகாமம் துயிலும் இல்லங்கள் புல்டோசர் மூலம் சிதைக்கப்பட்டன. இது உலகப் பாராம்பரியத்தை மீறிய காட்டுமிராண்டித்தனம் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக, எமது வீரச்சாவு நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். களப்பலியான மாவீரனின் வித்துடல் கிடைக்கப்பெற்றதும். அது ஓரிடத்திற்குக் கொண்டவரப்படுகிறது. பதனிடப்பட்ட அந்த உடலுக்குச் சீருடை அணியப்படுகிறது. அதே நேரத்தில் அந்த மாவீரனுடைய விவரங்கள் உறுதிசெய்யப்பட்டு அவனுக்கான பதவிநிலை வழங்கப்படுகிறது. பின்பு வித்துடல் பேழையில் வைக்கப்படுகிறது. மாவீரன் பெயரும் பதவிநிலையும் பேழையில் பொறிக்கப்படுகின்றன. மாவட்ட அரசியல் துறை ஊடாக வித்துடல் அடங்கிய பேழை இராணுவ மரியாதையுடன் பெற்றார் அல்லது உறவினர் வீட்டிற்கு எடுத்துவரப்படுகிறது. வீட்டு அஞ்சலி முடிந்தபின் வீரவணக்க நிகழ்வுக்காக வித்துடல் ஒரு பொதுமண்டபம் அல்லது மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

அதன்பின் வீரவணக்கக் கூட்டம் மண்டபத்தில் நடத்தப்படுகிறது. முதற்கண் பொதுச்சுடர் ஏற்றப்படுகிறது. அடுத்ததாக ஈகைச்சுடர், பின்பு வித்துடலுக்கு மலர்மாலை அணிவிக்கப்படுகிறது. பெற்றார், மனைவி, கணவன், பிள்ளைகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. நினைவுக் கல் நாட்டும் நிகழ்வுக்கும் இதுபோன்ற நடைமுறை பின்பற்றப்படுகின்றது. நினைவுக்கல் நிகழ்வில் மாவீரனின் படம் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்ட பின் உரித்தாளரிடம் கொடுக்கப்படுகிறது. வித்துடலுக்கு மலர்மாலை மலர் வணக்கம செலுத்தப்பட்ட பின் ஆகவணக்கம் செலுத்தப்படுகிறது. நினைவுரைகள் அடுத்ததாக நிகழ்த்தப்படுகின்றன.

இறுதியாக இராணுவ மரியாதையுடன் வித்துடல் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு மலர் வணக்கம் செய்யப்படுகிறது. அதன்பின் விசேட பீடத்தில் வைக்கப்பட்ட பேழையும் உடலும் மேடைக்கு கொண்டுசெல்லப்பட்டு அதில் வைக்கப்படுகிறது. இப்போது உறுதிமொழி வாசிக்கப்படுகிறது.

உறுதிமொழி வாசிக்கப்பட்ட பின் இராணுவ மரியாதை வேட்டு தீர்க்கப்படுகின்றது. தாயகக் கனவுப் பாடல் ஒலித்தபின் அனைவரும் அகவணக்கம் செலுத்துகின்றனர். வித்துடல் புனித விதைகுழிக்கு இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்படுகிறது. அனைவரும் கைகளால் மண் எடுத்து விதைகுழியில் போடுகின்றனர். நடுகல்லானால் மலர் வணக்கம் செய்கின்றனர்.

ஈழத்தமிழினத்தால் மாவீரர் நாளாகக் கொணடாடப்படும் நவம்பர் 27. தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச்சாவடைந்த எமது இயக்க வேங்கை லெப். சங்கர் (சத்தியநாதனின்) நினைவாக அமைகிறது. 1989ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாட்தொட்டு நாம் ஆண்டு தோறும் மாவீரர் நாளைக் கடைப்பிடித்து வருகிறோம். முதலாவது மாவீரனின் வீரச்சாவுதான் அனைத்து மாவீரர்களின் நாளாகக் கொண்டாடப்படுவதால் அதற்கு மிகப்பெரிய முக்கியத்துவம் உண்டு. தமிழீழத்தின் மிகப் பெரிய நிகழ்வு என்ற சிறப்பு மாவீரர் நாளுக்கு உண்டு.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டு வரை நவம்வர் 21 தொட்டு 27 வரையிலான ஒருவாரம் மாவீரர் வாரமாகச் சிறப்பிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 25, 26, 27 ஆம் நாட்கள் மாவீரர் எழுச்சி நாட்களாகக்கடைப்பிடிக்கப்படுகின்றன. 1994 ஆம் ஆண்டுதொட்டு மாவீரர் நாள் நள்ளிரவிலிருந்து மாலை 6:05 மணிக்கு மாற்றப்பட்டது. முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த நேரமும் அதுவாகும். 6:05 மணிக்கு தமிழீழம் எங்கணும் அனைத்துத் தேவாலய மணிகளும் ஒரு நிமிடம் ஒலி எழுப்பும். அதன்பின் அகவணக்கம் செலுத்தப்படும். மாவீரர் துயிலும் இல்லங்கள் யாவற்றிலும் ஒவ்வொரு கல்லறைக்கும் நடுகல்லுக்கும் முன்னால் பெற்றார், உரித்தாளர்கள் போன்றோரால் சுடர் ஏற்றப்படும். துயிலுமில்லம் வராத உள்ளூர் மக்களும். புலம் பெயர்ந்த உடன்பிறப்புக்களும் தத்தம் இல்லிடங்களில் விளக்கேற்றி வணக்கம் செய்வார்கள்.

மாவீரர் நாளின்போது அந்த நாளுக்கென்று பாடப்பட்ட மாவீரர் பாடல் துயிலும் இல்லங்களில் ஒலிக்கவிடப்படும். முதலாவதாக இது 1991 ஆம் ஆண்டு கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒலித்தது. இதை எழுதியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

கார்த்திகை, 2005 – விடுதலைப்புலிகள்

# தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னோடிகள் தமிழீழத்தின் அடிக்கற்கள்



லெப். **சங்கர்** (செ. சத்தியநாதன்)
கம்பர்மலை
வீரச்சாவு: 27.11.1982



லெப். **சீலன்** (லூ. சாள்ஸ் அன்ரனி)
திருமலை
வீரச்சாவு: 15.07.1983





கப்டன் **லாலாரஞ்சன்** (க. ஞானேந்திரமோகன்)
பருத்தித்துறை
வீரச்சாவு: 13.07.1984



வீரவேங்கை **ஆனந்தன்** (இ. அருள்நாதன்)
மயிலிட்டி
வீரச்சாவு: 15.07.1983



லெப். **செல்லக்கிளி** (ச. செல்வநாயகம்)
கல்வியங்காடு
வீரச்சாவு: 23.07.1983



கப்டன் **பண்டிதர்** (சி. ரவீந்திரன்)
கம்பர்மலை
வீரச்சாவு: 09.01.1985



கப்டன் **றெஜி** (சு. மகேஸ்வரன்)
காரைநகர்
வீரச்சாவு: 02.12.1985



மேஜர் **அல்பேட்** (க. ரூபநிதி)
அச்சுவேலி
வீரச்சாவு: 21.12.1985



லெப். கேணல் **சந்தோசம்** (க. உமைநேசன்)
அரியாலை
வீரச்சாவு: 21.10.1987



லெப். கேணல் **விக்டர்** (ம. பியூஸ்லஸ்)
பனங்கட்டிக்கொட்டு
வீரச்சாவு: 12.10.1986



கப்டன் **லிங்கம்** (சி. செல்வகுமார்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 24.04.1985



மேஜர் **கணேஸ்** (சி. சிற்றம்பலம்)
கந்தளாய்
வீரச்சாவு: 05.11.1986



லெப். கேணல் **பொன்னம்மான்** (யோ. குகன்)
யாழ். கலட்டி
வீரச்சாவு: 14.02.1984



லெப். கேணல் **புலேந்திரன்** (கு. தர்மராசா)
திருமலை
வீரச்சாவு: 05.10.1987



லெப். கேணல் **குமரப்பா** (பா. இரத்தினபாலன்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 05.10.1987



கேணல் **கிட்டு** ச. கிருஸ்ணகுமார்)
வல்வெட்த்துறை
வீரச்சாவு: 16.01.1993



லெப். கேணல் **அப்பையா** (ஐ. இராசையா)
மானிப்பாய்
வீரச்சாவு: 24.12.1997

# 27.11.1982 தொடக்கம் 31.10.2008 வரை வீரச்சாவைத்தழுவிகொண்ட மாவீரர் விபரப்பட்டியல்

***2008ம் ஆண்டு மாவீரர் பணிமனையால் வெளியிடப்பட்ட மாவீரர் விபரங்கள்***

27.11.1987 முதல் 31.10.2008 வரையான காலப்பகுதியில் இந்த மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர்.
இவர்களில் 17,305 ஆண் மாவீரர்களும், 4809 பெண் மாவீரர்களும் அடங்கியுள்ளனர்.
2008ம் ஆண்டு 1974 போராளிகள் விடுதலைக்காகப் போராடி வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 27.11.1982 – 31.10.2008 வரை வீரச்சாவடைந்த கரும்புலிகள், எல்லைப்படை, காவற்றுறை, மாவீரர்களின் தொகுப்பு

| விளக்கம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| தரைக்கரும்புலிகள் | 87 | 26 | 113 |
| கடற்கரும்புலிகள் | 181 | 78 | 259 |
| மொத்தக்கரும்புலிகள் | 268 | 104 | 372 |
| எல்லைப்படை மாவீரர்கள் | 276 | 05 | 281 |
| காவற்றுறை மாவீரர்கள் | 047 | 03 | 50 |
| மாமனிதர் | 019 | — | 19 |
| நாட்டுப்பற்றாளர்கள் | 452 | 28 | 480 |

## 27.11.1982 – 31.10.2008 வரை தமிழீழ விடுதலைப்போரில் வீரச்சாவடைந்த மாவீரர் விரிப்பு

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1982 | 01 | 00 | 01 |
| 1983 | 05 | 00 | 05 |
| 1984 | 36 | 00 | 36 |
| 1985 | 123 | 00 | 123 |
| 1986 | 260 | 00 | 260 |
| 1987 | 439 | 14 | 453 |
| 1988 | 355 | 11 | 366 |
| 1989 | 373 | 01 | 374 |
| 1990 | 893 | 72 | 965 |
| 1991 | 1413 | 209 | 1622 |
| 1992 | 718 | 74 | 792 |
| 1993 | 804 | 124 | 928 |
| 1994 | 366 | 12 | 378 |
| 1995 | 1220 | 288 | 1508 |
| 1996 | 1095 | 285 | 1380 |
| 1997 | 1605 | 507 | 2112 |
| 1998 | 1158 | 648 | 1806 |
| 1999 | 1053 | 496 | 1549 |
| 2000 | 1240 | 743 | 1983 |
| 2001 | 492 | 270 | 762 |
| 2002 | 30 | 16 | 46 |
| 2003 | 61 | 11 | 72 |
| 2004 | 63 | 17 | 80 |
| 2005 | 42 | 15 | 57 |
| 2006 | 747 | 259 | 1006 |
| 2007 | 1041 | 159 | 1200 |
| 2008 | 1398 | 576 | 1974 |
| ஈரோஸ் | 264 | 02 | 266 |
| தனிக்குழு | 10 | 00 | 10 |
| மொத்தம் | 17305 | 4809 | 22114 |

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2024




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY




## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

தியாகத்தின்
சிகரங்கள்..!
வீர யாகத்தின்
அகரங்கள்...!!
காற்றோடு
கலந்தவர்கள்...!
வீர காவியம்
ஆனவர்கள்...!!

நெருப்பாற்றில்
குளித்தவர்கள்...!
வரலாற்றில்
நிலைத்தவர்கள்...!!
மரணத்தை வென்ற
மாவீரர்...!
தமிழ் மானத்தைக்
காத்த புலிவீரர்...!!

மாவீரச்
செல்வங்களே...!
உங்களின்
கல்லறைகள் கூட
பகைவனைப்
பயமுறுத்தும்!
அதனால்தானே...
அனைத்தையும்
அழிக்கிறான்...!?
உங்களின்
நினைவுநாள் கூட
எதிரிக்கு உறுத்தும்!
அதனால்தானே...
அனைத்தையும்
தடுக்கிறான்...!?

உங்களின் தியாகத்
தீயில்தான்...
இன்னும் நாம்
குளிர்காய்கிறோம்!
இவ்வளவு இழந்த
பின்னும்...
இன்னும் நாம்
உயிர்
வாழ்கிறோம்!!

இனியும் நீங்கள்
எங்களுக்காய்
உங்கள்
ஆத்மாக்களை
எழுப்பாதீர்கள்!
நிம்மதியாய்
உறங்குங்கள்...!
உங்கள் கனவுகள்
உறங்காது!

# தமிழீழ விடுதலைக்கு விதையான தமிழகத்தைச் சேர்ந்த மாவீரர்கள்



*மாவீரன்*
*முத்துக்குமார்*
*குமரேசன் முத்துக்குமார்*
*19.11.1982-29.01.2009*

ஈழத்தமிழர்களின் இனப்படுகொலையைக்கு இந்திய அரசு துணை போவதாக கண்டித்து சென்னையிலுள்ள சாஸ்திரி பவன் முன் தீக்குளித்து வீரச்சாவு

**வீரவேங்கை பத்மநாபன்**
இயற்பெயர்: பி.பத்மநாபன்
ஊர்: திருச்சி, தமிழகம்.
வீரப்பிறப்பு: 27.07.1963
வீரச்சாவு: 16.03.1988 (தமிழகத்தின் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் போது)

**வீரவேங்கை சுனில்**
இயற்பெயர்: கதிரவன்
ஊர்: தமிழகம்.




வீரச்சாவு: 11.04.1988 (முல்லைத்தீவு ஒட்டங்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்)

**லெப். இனியன் [ரஸ்கின்]**
இயற்பெயர்: முத்தையா இராமசாமி
ஊர்: தூத்துக்குடி, கன்னியாகுமாரி, தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 23.07.1962
வீரச்சாவு: 11.12.1991 (மன்னார் மருதமடு வேப்பங்குளம் பகுதியில் சிறீலங்கா படையினருடனான சமரில்)
துயிலுமில்லம்: ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**2ம் லெப். உதயசந்திரன்**
இயற்பெயர்: சேதுபாணடித்தேவர் ராமமணி சேகரன்மகாதேவர்
ஊர்: திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 05.05.1969
வீரச்சாவு: 09.06.1992 (மன்னார் சிறுநாவற்குளத்தில் சிறீலங்கா படையினர் மீதான அதிரடி தாக்குதலின் போது)

**கடற்புலி கப்டன் ஈழவேந்தன்**
இயற்பெயர்: துரைராசன் குமரேசன்
ஊர்: தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 25.05.1969
வீரச்சாவு: 20.11.1992 (தமிழீழக் கடற்பரப்பில் நடந்த மோதலில்)
துயிலுமில்லம்: எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**லெப். சச்சு**
இயற்பெயர்: அன்ரனி சிறிகாந்த்
ஊர்: பியர், இந்தியா.
வீரப்பிறப்பு: 04.09.1975
வீரச்சாவு: 20.12.1992 (மன்னார் நானாட்டன் மாதிரிக்கிராமம் படை முகாம்களுக்கிடையில் அமைந்துள்ள காவலரண்கள் மீதான தாக்குதலின்போது)
துயிலுமில்லம்: பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**கரும்புலி லெப். செங்கண்ணன்**
இயற்பெயர்: தனுஸ்கோடி செந்தூரபாண்டியன்
ஊர்: சாத்தூர், சிவகாசி (தமிழகம்)
வீரப்பிறப்பு: 25.01.1975



வீரச்சாவு: 11.11.1993 (யாழ். பலாலி படைத்தளத்தினுள் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவு)
துயிலுமில்லம்: உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**வீரவேங்கை மணியரசி**
இயற்பெயர்: செல்லத்துரை கமலாதேவி
ஊர்: தமிழகம்.
வீரப்பிறப்பு: 02.02.1977



வீரச்சாவு: 19.04.1996 (யாழ். தென்மராட்சி கோட்டத்தை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட சூரிய கதிர்-2 நடவடிக்கைக்கு எதிரான சமரில்)
துயிலுமில்லம்: ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**கப்டன் குணாதேவன் [லக்ஸ்மணன்]**
இயற்பெயர்: அம்மனாரி தென்னரசு
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 01.01.1966
வீரச்சாவு: 13.05.1996 (அம்பாறை 11ம் கொலனியில் அமைந்திருந்த காவல்துறை நிலையம் மீதான தாக்குதலின்போது)

**கப்டன் பெரியதம்பி [விஸ்ணு]**
இயற்பெயர்: சிவானந்தம் முகேஸ்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 31.05.1975



வீரச்சாவு: 19.05.1996 (திருகோணமலை கீலக்கடவெல படைமுகாம் மீதான தாக்குதலின்போது)
துயிலுமில்லம்: மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**கப்டன் குற்றாளன்**
இயற்பெயர்: கந்தையா கலைச்செல்வன்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 08.08.1969
வீரச்சாவு: 16.07.1996 (மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு)

**மேஜர் குருசங்கர்**
இயற்பெயர்: பழனியாண்டி மகேந்திரன்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 18.04.1973



வீரச்சாவு: 25.07.1996 (முல்லைத்தீவு படைத்தளம் மீதான ஓயாத அலைகள் நடவடிக்கையின் போது)
துயிலுமில்லம்: பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**வீரவேங்கை சுதா**
இயற்பெயர்: வீரப்பன் இலட்சுமணன்
ஊர்: தஞ்சாவூர், தமிழ்நாடு
வீரப்பிறப்பு: 28.10.1980
வீரச்சாவு: 05.07.1999 (மன்னார் பள்ளமடு பகுதியில் சிறீலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது.)
துயிலுமில்லம்: கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**மேஜர் உமா**
இயற்பெயர்: வேலுச்சாமி இந்துமதி
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 27.05.1972
வீரச்சாவு: 11.12.1999 (கிளிநொச்சி பரந்தன் பகுதியில் 'ஓயாத அலைகள் 03' நடவடிக்கையின்போது)
துயிலுமில்லம்: விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்

**வீரமரணமடையும் புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்பட மாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுக்குள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற் கிணங்கவே எடுக்கப் பட்டுள்ளது.**

**மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட "மாவீரர் துயிலும் இல்லங்களில்" இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுகற்கள் வைக்கப்பட்டுக் கொண் டிருக்கின்றன.**

**இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.**

**மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்பட வேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம்? என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.**





இதுவரை காலமும் வீரமரணமடைந்த எமது போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மத சம்பிர தாயங்களின் அடிப்படையில் உடல்கள் புதைக்கப்படுவதோ, தகனம் செய்யப்படுவதோ நடந்து வந்தது. ஆனால், இனிமேல் வீரமரணமடையும் அனைத்துப் புலிவீரர்களின் உடல் களையும் புதைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். புதைக்கப்பட்ட இடத்தில் அவ்வப் போராளியின் பெயர் கூறும் கல்லறைகள் எழுப்பப்பட்டு அவை தேசிய நினைவுச் சின்னங் களாகப் பாதுகாக்கப்படும். இவைகள் காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.



தாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைத்து அங்கே நினைவுக் கற்கள் நாட்டப்பட வேண்டும் என்பதே போராளிகளின் விருப்ப மாகும். இந்த விருப்பம் மிக அண்மையில் ஏற்பட்ட தொன்றல்ல. இந்திய – புலிகள் போர்க் காலத்தில் வன்னிக் காட்டுக்குள்ளேயே போராளிகளின் இவ் விருப்பங்கள் வெளிப்படத் தொடங்கி விட்டன. பிரதானமாகத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தங்கி யிருந்த மணலாற்று காட்டுக்குள்ளேயே இவ் விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல்வடிவங்களும் கொடுக்கப் பட்டது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக கடும் சமர்கள் நடந்த இடம் மணலாறு என்பது தெரிந்ததே. இந்தியப் படைக ளுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அத்திவாரமாக இருந்தது மணலாற்றுக் காட்டில் நாம்கண்ட வெற்றிதான். இந்தச் சமர்களில் எமது போராளிகள் பெற்ற வெற்றிக்கு மண லாற்றுக்காடு உறுதுணையாக இருந்தது. இதனால் தங்க ளுடைய போராட்ட வாழ்வில் ஒன்றிக்கலந்து உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக் கப்பட வேண்டும் எனப் போராளிகள் விரும்பினார்கள்.

மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய போராளிகள் பலர் தாங்கள் எங்கேசென்று போராடி வீரமரணமடைந்தாலும் தங்களது உடல்கள் மணலாற்றுக் காட்டுப்பகுதிக்குள்தான் புதைக்கப்படவேண்டும் என எழுத்து மூலம், வாய் மூலம் தலைவர் பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இதன் காரணமாக இன்று மணலாற்றுக் காட்டுக்குள் பெரிய தொரு மாவீரர் துயிலும் இல்லம் போராட்டக் கதைகளைக் கூறிக் கொண்டே இருக்கின்றது. இதேபோன்று மற்றைய மாவட்டங் களிலும் சிறிய சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளி களின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவ்விதம் தங்களது உடல்கள் சொந்த மண்ணுடன் கலக்கப்பட வேண்டும் என்ற போரளிகளது மன விருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்மதிருப்தியையும் பார்த்தோம். இனி போராளிகளது உடல் களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையில் இருக் கும் மானிட உணர்வுகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும், மனோவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டுகொள்ளலாம்.

மரபு வழியாக தமிழர்களிடம் இருந்துவரும் சம்பிரதாயங்களின் படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமை என அறிந்து வைத்திருக்கின்றோம். இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் வைக்கப் படுவது நாம் அறிந்ததுதான். ஆனால் அந்த வாதத்தை இம் மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகள் விடயத்தில் ஒப்புநோக்க முடியாது. போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரணநிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மன தில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது, போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகவே பயன்படும். எனவேதான் போராளிகளது உடல்களைப் புதைத்து கல்லறைகளை எழுப்பி அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம். இன்றுவரை 3750றக்கும் மேற்பட்ட புலி வீரர்கள் வீரமரணமடைந்துவிட்டனர். இவர்களது உயிர்த் தியாகத்தால் எமது விடுதலைப் போராட்டம் உயர்ந்ததொரு கட்டத்திற்கு நகர்த்தப்பட்டு விட்டது. ஆனால் இவர்களது நினைவை உயிர்த்துடிப்புள்ளதாக்கும் சின்னங்கள் எம்மிடம் உண்டா? எனக் கேட்டால் 'இல்லை' என்றுதான் பதில் கிடைக்கும்.

இப் போராளிகள் அனைவருக்கும் அவர்கள் பெயர் கூறும் கல்லறைகள் கட்டப்பட்டால் அவற்றைக் கண்ணுறும் அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பெறுமதியைப் புரிந்து கொள்வதுடன் அதை வென்றெடுக்க போராளிகள் கொடுத்த உயிர்விலையையும் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வார்கள்.

அன்பிற்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்கால மாக இருந்து வந்த சம்பிரதாயம், சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கிறது என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்தச் சம்பிரதாயங்கள், சாஸ் திரங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத்தாக, பொக்கிசமாக இருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான இப் பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம்மண்ணில் இருந்துகொண் டேயிருக்க வேண்டும்.



இது ஒருபுறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத் தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதித் திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ, உடன் பிறந்தவர் களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கின் றோம். என்னதான் எமது தோழர்கள் சூழ்ந்து நின்று தகன நிகழ்சியை நடத்தினாலும்கூட, அப் போராளியைப் பெற்றெடுத்து – சீராட்டி வளர்த்தெடுத்த தாய் – தந்தையரோ, அல்லது உடன் பிறந்தவர்களோ இல்லாதது எமது மனதை நெருடுகின்றது. போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை இப் பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக் காட்டப் போகின்றோம்? ஒன்றன் பின் ஒன்றாய் நுற்றுக்கணக்கான போராளிகளைத் தகனம்

**போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதயி வரலாற்றைப்படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரணம் நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச்சின்னமாக என்றென்றும் நிலைத்துநிற்கவேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.**



செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்? அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவவாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான் தனது பிள்ளையின் உடலைப் பார்க்காது விட்டாலும் கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவி செய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன் ஓர் ஆத்ம திருப்தியையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள். கல்லறைகளை அமைத்து அடிக்கடி அங்கே செல்வது சோகத்தை தொடர்ந்தும் மனங்களில் வைத்திருப்பதற்காகவா? என ஒரு கேள்வி எழலாம்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானது தான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்க முடியாது தானே! கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செல்வதால் மனம் நிம்மதி அடையும். எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப் பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு



முரணான செயலல்லவா? என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்டகாலம் தொட்டு இருந்து வரும் தகனம் செய்வது தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானுற்று இலக்கியமும் ஈமத்தாழி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் இதை நிரூபிக்கப் போதுமானது.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும், உண்மையில் இந்த முறையை ஒரு சமூக சீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டும் பொருந்தும். இது பொதுமக்களிற்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப்பிரச்சனை எழநியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக் கிரியை நிகழ்ச்சி அல்ல, அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

சரி அப்படி புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா? அப்படி நடந்தால் வீரமரணமடைந்த போராளிகள் அவமதிக்கப்பட்டது போலாகாதா? எனவே இந்த அவமதிப்புக்கு புலிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? எனவும் கேள்வி எழலாம். தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் அமைக்கப்பட்ட சிலையையும் மன்னார் தளபதி லெப்.கேணல் விக்டரது கல்லறையையும் சிங்களப் படைகள் சிதைத்ததையும் மனதில் வைத்து மேற்குறித்த கேள்விகள் எழுவது நியாயமானது.

போரில் கொல்லப்பட்ட எதிரி இராணுவ வீரனது கல்லறைக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது சாதாரண போர் தர்மம். ஆனால் அதை சிங்கள இராணுவம் கடைப்பிடிக்கும் என உறுதி கூறமுடியாதுதான். ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதானால் இங்கு கொல்லப்பட்ட இந்திய ஜவான்களுக்காக இந்திய அரசு எமது மண்ணிலேயே அமைத்த





நினைவுச் சின்னங்களை இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்பும்கூட நாம் உடைத்தெறியவில்லை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

## போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச்சுடரை ஏற்ற உதவும் நெருப்புக்கிடங்ககளாகும்.

ஆனால், எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் துண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும். இறுதியாக ஒன்று சொல்கிறோம். முழுமையாகவே எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாய்மண்ணை விடுவிக்கும் போரில் வீரமரணமடையும் ஒரு வேங்கை கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே.

விடுதலைப் புலிகள் (ஐப்பசி – கார்த்திகை 1991)



# தமிழீழத்தில் விதையாய் விழுந்த வேங்கைகளின் சுவடுகளே எமது வீர வரலாறு...!

*கிட்டு பீரங்கிப்படையணியின் சிறப்புத் தளபதி*

## கேணல் குயிலன் (ராயு)



எமது இனம் பெரும் அடக்குமறைக்குள்ளான 1983 காலப் பகுதியில் கேணல் குயிலன் அவர்கள் தன்னை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். அர்ப்பணிப்பும் ஆழமான விடுதலை வேட்கையும் கொண்ட கேணல் குயிலன் அவர்கள் போராட்டம் பெரும் நெருக் கடிகளைச் சந்தித்த காலங்களில் எல்லாம் எமது தலைவருடன் உடனிருந்து தலைவரின் போரியல் நுட்பங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர். இராணுவ நுட்பங்களுக்கு செயல்வடிவம் கொடுத் ஒரு முத்த தளபதி கேணல் குயிலன் 25.08.2002 அன்று சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

## பெல். கேணல் நவம் (டடி)



விடுதலைப் போராட்த்தின் முதன்நிலைத் தளபதிகளுள் ஒருவரான நவம், கை ஒன்றை இழந்திருந்த நிலையிலும் இந்தியப்படையினருக்கு எதிரான புகழ்பெற்ற மணலாற்றுச் சமரில் முக்கிய பங்கு வகித்தவர். முல்லை மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த போது நெடுங் கேணி பாடசாலை இந்திய முகாம் மீதான பிரசித்தி பெற்ற தாக்குதலின்போது காயமடைந்து பின்பு வீரச்சாவடைந்தார். போரில் உறுப்புக்களை இழந்த போராளிகளின் தொழிநுட்ப பயிற்சிக் கல்லூரிக்கு அவர் நினைவாக இவரது பெயரை தலைவர் சூட்டினார்.

## லெப். கேணல் ஜொனி



விடுதலைப் புலிகளின் முதன்நிலைத் தளபதிகளுள் ஒருவர் ஜொனி. பேச்சுவார்த்தைக்கென இந்தியாவிலிருந்து இவரை அழைத்து வந்த இந்தியப் படையால் முல்லைத்தீவு, தேவிபுரத்தில் வைத்து இந்திய நயவஞ்சகமான முறையில் சுடப்பட்டு வீரச்சாவு.

*முதற் பெண் தளபதி*

## மஜர் சோதியா



1985களில் தன்னைப் தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் இணைத்துக் கொண்ட அவர், 1990இல் நோயின் காரணமாக தன்னுயிரை இம்மண்ணுக்காய் அர்ப்பணிக்கும் வரை சண்டைக்களங்களிலும் நிர்வாக விடங்களிலும் தன்பணியைத் திறம்படச் செய்தவர்.

*தென் தமிழீழத்தின் முதல் கடற்கரும்புலி*

## கப்டன் ஜெயந்தன்



தென் தமிழீழம் முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சம்புக்குட்டி பத்ம நாதனே கடற்கரும்புலி ஜெயந்தன் கப்டன் ஜெயந்தனும் கப்டன் சிதப்பரமும் சேர்ந்து 1991 ஆம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி அபிதா என்றும் சிங்களக் கடற் காவற் கலத்தின்மேல் நடாத்திய கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவு. இவ் மாவீரன் கப்டன் ஜெயந்தன் பெயரிலேயே 1993 மே மாதம் 4ம் திகதி ஜெயந் தன் படையணி (மரபுச் படையணி) ஆரம்பிக்கப்பட்டது.

*தமிழீழ வான்படையின் சிறப்புத்தளபதி*

## கேணல் சங்கர்



தனது வாழ்வில் இரு தசாப்தங்களுக்கு மேலான பகுதியைத் தமிழீழ விடுதலைப் போராட் டத்திற்காக அர்ப்பணித்த மூத்த உறுப்பினராகிய கேணல் சங்கர் (வைத்திலிங்கம் சொர்ண லிங்கம்) அவர்கள், 26.09.2001 அன்று வன்னியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலின் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

*தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1984ஆம் ஆண்டு தன்னை இணைத்துக்கொண்ட இவர். 1987ஆம் ஆண்டு தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளராகவும், 1997 இல் யாழ். மாவட்ட சிறப்புத் தளபதியாகவும் செயல்பட்டதோடு, 1993 இல் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளராகவும், இறுதிவரை, ஓர் இலட்சியப் போராளியாக, அரசியல் பொறுப்பாளனாக, அனைத்துலதோடு உறவாடிய தமிழீழத்தின் இராஜதந்திரியாக, பேராற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளனாக தமி ழுலகமே ஆழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனாகத் திகழ்ந்தார். 02.11.2007 அன்று சிறீலங்கா வான்படையின் வான்குண்டுத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் லெப். கேணல் அன்புமணி, மேஜர் மிகுதன், மேஜர் கலையழகன், லெப். ஆட்சிவேல், லெப். மாவைக்குமரன் ஆகியோரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

*மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்*

## லெப். கேணல் கௌசல்யன்



மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரான கௌசல்யன் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானப் பணிகளை சிறப்பாக மேற்கொண்ட வேளை 07.02.2005 அன்று மட்டு, மாவட்ட இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான புனைனைப் பகுதியில் வைத்து சௌசல்யன் குழுவினர் பயணித்த வாகனத்தின் மீது சிறீலங்கா இராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

*சமர்க்கள நாயகன்*

## பிரிகேடியர் பால்ராஜ் (லீமா)



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1984ஆம் ஆண்டு தன்னை இணைத்துக்கொண்ட இவர் ஓர் அற்றல் மிக்க, ஆளுமை மிக்க இலட்சியப் போராளியாக தேசியத் தலைவர் அவர்களால் வளர்த் தெடுக்கப்பட்டவர். மணலாறு மாவட்ட கட்டளைத் தளபதியாகவும், சாள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவின் முதல் தளபதியாகவும், விடுதலைப் புலிகளின் இராணுவத் துணைத்தளப்தியாகவும் செயலாற்றியவர். மகத்தான, இமாலய இராணுவ வெற்றிகள் பலவற்றுக்கு நடுநாயகமாக நின்று வெற்றி ஈட்டியவர். மரபுப் படையணிகளையும் வழிபடுத்தி, நெறிப்படுத்திச் சமராடிய தலைசிறந்த போர்த்தளபதியாகவும், கடைசிவரை திகழ்ந்தவர். 20.05.2008 அன்று சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

*சேத்தின் குதல்*

## கலாநிதி அன்டன் பாலசிங்கம்



கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக தமிழீழ போராட்ட வளர்ச்சிக்கு அரசியல் இராஜதந்திர நகர்வுக்கு தேசியத் தலைவர் அவர்களுடன் உறுதுணையாக நின்றதோடு, ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். ஈழத் தமிழன் பெருமை கொள்ளும் வகையில் அரசயில் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து தேச சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்தியவர். 14.12.2006 அன்று சுகவீனம் காரணமாக இங்கிலாந்தில் சாவடைந்தார்.

*நம் லெப். மாலதி படையணியின் சிறப்புத் தளபதி*

## பிரிகேடியர் விதுசா



குருக்கள் கந்தையா, ஞனாம்பிகை இணையருக்கு ஞானபூரணி என்ற இயற்பெயர் பூண்ட விதுசா மூத்த மகளாக 1969 செப்டம்பர் 29ம் நாள் கரவெட்டி, கப்புதூவில் பிறந்தார். 1986 ஆம் ஆண்டு மே மாதத்தில் விடுதலைப் புலி உறுப்பினராக இணைந்தார். சந்திரிக்கா அரசின் சமாதனத்திற்கான போர் தொடங்கிய போது தலைமைப் பொறுப்பேற்று மாலதி படையணியை வழி நடத்தினார். அவருடைய களப் பயணம் 1993ஆம் ஆண்டு தொடக்கம் வீரச்சாவடையும் 2009 ஏப்ரல் வரை ஒரு போதும் ஓய்ந்ததில்லை. யாழிலும் சரி வன்னியிலும் சரி எண்ணற்ற சமர்களில் பங்காற் றினார். எதிரிகளின் சூழ்ச்சியால் ஆனந்தபுர மண்ணில் வீரச்சாவடைந்தார்.

*மேஜர் சோதியா படையணியின் சிறப்புத் தளபதி*

## பிரிகேடியர் துர்கா



1971ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி கலைச்செல்வி பொன்னுத்துறை என்னும் பெயர் சூட்டி 4 பிள்ளைகளில் மூன்றாவதாகப் பிறந்த பெண் பிள்ளைதான் எங்கள் மண்ணின் புதல்வி பிரிகேடியர் துர்க்கா. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் சிறப்பு தாக்குதல் படையணிகளில் ஒன்றான மேஜர் சோதியா படையணியின் சிறப்பு தளபதி, பெண்புலிகளின் ஒரு படையணியை வழிநடத்திச் சென்ற ஒரு சிறந்த தலைவி. முழுவதுமாக, எந்த வித ஆண்களின் தலையீடும் இன்றி, பயிற்சி தொடக்கம், நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் கள முனை வரை பெண்களை மட்டுமே வழிநடத்திச் செய்து வெற்றி கண்ட பெருமை எங்கள் பிரிகேடியர் துர்க்கா. எதிரிகளின் சூழ்ச்சியால் ஆனந்தபுர மண்ணில் விதையாகினார்.

*வட போர் முனைக் கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் தீபன்



கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளையைப் பிறப்பிடமாக கொண்ட தீபனின் (வேளையுதபிள்ளை பகீரதகுமார்) இயக்கப்பெயர் சிவதீபன். 1984ஆம் ஆண்டு முற்பகுதியில் தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்ட பகீரதகுமார், ஆயுதப் பயிற்சி பெற்று தீபனாக மாறினார், இவருடைய தொடர் பாடல் குறிப்புப் பெயர் “தாங்கோ பாப்பா” ஆகும். சமர்க்களங்களின் துணை நாயகன் இந்த தீபன் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதல், ஜெயசிக் குரு இராணுவ நடவடிக்கை, சத்ஜெய நட வடிக்கை, ஓயாத அலைகள் - 3, ஆகாய கடல் வெளிச் சமர், 2000 ஏப்ரல் 24ல் இடம்பெற்ற ஆனை யிறவை மீளக் கைப்பற்றும் நோக்கிலான படையினரின் தீச்சுவாலை உட்பட பல இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றியவர். 25 ஆண்டு காலம் ஓயாது அடித்துக்கொண்டிருந்த இந்தப் புயல் 2009 ஏப்ரல் மாதம் 4ம் திகதி புதுக்குடியிருப்பு ஆனந்த புரத்திலே எதிரிகளின் சூழ்ச்சியால் நிரந்தரமாக வீர காவியமானது.


லெப். சங்கர்
நவம்பர் 27
தமிழீழ தேசிய
மாவீரர் நாள் 2023
ரொரான்ரோர்
Markham Fairgrounds
10801 McCowan Rd
Markham ON L3P 3J3
(McCowan & Elgin Mills)
27.11.2023 திங்கட்கிழமை
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்பு: மாலை 6:00 மணி
Mirage Banquet & Convention Centre
1917 Albion Rd,
Etobicoke ON M9W 5S8
(HWY 27 & Albion Rd)
27.11.2023 திங்கட்கிழமை
நிகழ்பு: மாலை 5:00 மணி
மொன்றியல்
Le Château Royal
3500 Bd du Souvenir, Laval, QC H7V 1X2
27.11.2023 திங்கட்கிழமை
மாலை 5:00 மணி
ஒட்டாவா
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Avenue OTTAWA, ON
27.11.2023 திங்கட்கிழமை
மாலை 5:30 மணி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# தமிழீழத்தில் விதையாய் விழுந்த வேங்கைகளின் சுவடுகளே எமது வீர வரலாறு...!

*பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் ஆதவன் (கடாபி)



யாழ் மாவட்டம் வடமராட்சிப் பகுதியில் கொற்றாவத்தை, வதிரியைப் பிறப்பிட மாகக் கொண்டவர். விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் 1985-86 காலப் பகுதியில் இணைந்து கொண்டு இந்தியாவில் பயிற்சி பெற்றவர். விமான எதிர்ப்பு ஏவுகணைகள் சுடும் பயிற்சிக்காக இந்திய இராணுவத்தால் தெரிவு செய்யப்பட்ட பத்து விடுதலைப்புலிகள் உறுப்பினர்களில் ஒருவர். கடாபி அண்ணையைப் பொறுத்தவரையில் தாக்குதல்களோடு சம்பந்தப்பட்ட தாக்குதலணிகளை மட்டுமன்றி பயிற்சிகள், விசாரணைகள், புலனாய்வு போன்ற நிர்வாக நீதியிலான அணிகளையும் நிர்வகிக்கவேண்டிய பொறுப்பிலேதான் இருந்தார். இறுதிவரை உறுதியோடு போரிட்ட கடாவி அண்ணை ஆனந்தபுரக் களத்தில் படுகாயமடைந்தார். களத்தின் இறுக்கமான நிலையை உணர்ந்து, அக்களத்திலேயே சயனைற் உட்கொண்டு, இன்னும் பல வீரர்களுடன் ஆனந்தபுரம் மண்ணில் வீர வரலாறாகிப் போனார்.

*கிட்டுப் பீரங்கிப்படையணி சிறப்புத் தளபதி*

## பிரிகேடியர் மணிவண்ணன்



தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட மணிவண்ணன். தொடக்க காலத்திலேயே கேணல் ராயு அவர்களுடன் இணைந்து தனது விடுதலைப் பணியை மேற்கொண் டிருந்தார். விடுதலைப்புலிகளின் போராட்டவலுவை அடுத்த கட்ட பரிணாமத்திற்குள் நகர்த்திய மோட்டார் பீரங்கிகளும் ஆட்லறி பீரங்கிகளும் தான், ஆட்லறி பீரங்கிப் படையணி தளபதி பிரி கேடியர் மணிவண்ணனின் போராட்டவாழ்க்கையாக இருந்தது. இந்த நிலையில்தான் சிங்களப் படையின் தாக்குதலில் ஆனந்தபுர மண்ணிலே பிரிகேடியர் மணிவண்ணன் அவர்களும்; தமிழீழ காற்றோடு காற்றாக கலந்துபோனார்.

*தமிழீழ நிதிப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் தமிழேந்தி



பிரிகேடியர் தமிழேந்தி (சபாரத்தினம் செல்லத்துரை), 15.02.1950 யாழ். மாவட்டத்தில் பிறந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறு துணையாக தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றியவர். தனது தனித்துவமான திறமையால் நிதித்துறையை திறம்பட செயலாற்றி தேசியத் தலைவரினாலும், போராளிகளாலும் நன்மதிப்பு பெற்றிருந்தார். 10.03.2009 அன்று சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

*கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் சொர்ணம்



பிரிகேடியர் சொர்ணம், 26 வருடங்கள் அயராது உழைத்த வீரத்தளபதி. மானிப்பாயில் பிறந்த பொழுதும் திருமலை அரசடி வாழைத் தோட்டம் என்னும் ஊர்தான் இவரை சிறு பராயத்தில் இருந்து மாபெரும் வீரனாக வீரத்தை ஊட்டி வளர்த்த மண். தந்தை ஜோசப்புக்கும் தாய் திரேசம்மா (பரிபூரணம்) அவர்களுக்கும் மகனாக பிறந்தவன் தான் பிரிகேடியர் சொர்ணம். இவரது இயற் பெயர் அன்ரனிதாஸ். வெற்றிவாகை சூடிய சமர்க் களங்களே அதிகம்: ஆகாயக் கடல் வெளிச்சமர், மாங்குளம், தவளைப் பாய்ச்சல், மண்டைதீவு, மணகிண்டி மலை, இதய பூமி, புலிப்பாய்ச்சல், ஓயாத அலைகள், பிரிகேடியர எனப் பல வெற்றிச் சமர்களை எல்லாம் வழிநடத்திய சமரக் களத் தளபதிகளில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தார். இம்ரான் பாண்டியன் படையணியின் முதல் தளபதி யாகவும் செயற்பட்டவர். தேவிபுர ஊடறுப்பு தாக்குதலில் விழுப்புண் அடைந்து 15.05.2009ம் நாள் தன்னை மண்ணுக்கு விதையாக்குகினார்.

*கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் ஜெயம்



வன்னிக்கிராமங்களில் ஒன்றான பாவற்குளம் மண்தான் சுவேந்திரன் என்ற ஜெயம் ஆவார். புதிய போராளிகளை உருவாக்குதல் தொடக்கம் அந்தக்கால இறுக்கத்திற்கு ஏற்ப திட்டமிடல் பணிகளை விரிவுபடுத்தல் செயற்படுத்தல் என ஓய்வு மறந்து இயங்கிக் கொண்டிருந்த போராளி. ஆற்றலின் வடிவமாய் அமைதியின் உருவாய் கடந்து வந்த பாதைகளின் காலத்தை வென்ற போராளியாயிருந்த தளபதி தனது வாழ்க்கைத் துணைவியையும் போராளியாகவே தேர்ந் தெடுத்தார். கடைசிக்கள முடிவினை உலகம் எப்படியே எல்லாம் எழுதியும் ஆய்வுகள் செய்தும் கொண்டிருக்க அந்த முள்ளிவாய்க்கால் கரைகளில் தங்கள் இருவரின் உயிரையும் விதைத்து வீழ்ந்து வீளாத கனவுகளோடும் கலந்து போனார்கள் பிரிகேடியர் ஜெயமண்ணையும் அவரது துணைவி நளாக்காவும்.

*பீரங்கிப் படையணித் தளபதி*

## பிரிகேடியர் பானு



யாழ்ப்பாணம், அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட தளபதி பானுவின் இயற் பெயர் சிவநாதன் சோமசேகரன். இவர் யாழ் ஸ்ரான்லிக் கல்லூரியில் கல்வி பயின்றவர். 1983 காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் அணியில் தன்னை இணைத்துக் கொண்டவர். யாழ் மாவட்டத்தில், யாழ் பொலிஸ் நிலையத்தாக்குதல் உட்பட பல ஆரம்ப கால தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குபற்றியவர். வன்னி மாவட்டத்தில் ஓயாத அலைகள் என பல வெற்றிகரத் தாக்குதல்களில் பங்குபற்றிய பானு ஆனையிறவு மீட்பின் பின்னர் அதில் புலிக்கொடியை ஏற்றிவைத்தவர் இவரே. கருணாவின் துரோகத்தின் பின்னர் மட்டக்களப்பு தாக்குதல் நடவடிக்கையிலும் பங்குபற்றியவர். பீரங்கிப் படையணித் தளபதியாகவும் பணியாற்றிவர். முள்ளி வாய்க்காலில் போராடி வீரச்சவடைந்தார்.

*கடற்புலிகளின் கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் சூசை



பிரிகேடியர் சூசை அவர்களின் இயற்பெயர் தில்லையம்பலம் சிவநேசன் ஆகும். இவர் யாழ் மாவட்ட வடமராட்சி பொலிகண்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1979-80 காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். ஆரம்ப காலத்தில் பல தரை சார்ந்த தாக்குதல்களில் சிறப்பாகப் பங்குபற்றிய சூசை, 1991ல் விடுதலைப் புலிகளின் கடற் புலி களின் அணி என்ற விரிவாக்கத்துடன் கடற் புலிகளின் சிறப்புத் தளபதியாக தலைவரினால் நியமிக்கப் பட்டார். சிறீலங்கா கடற் படையினர் மீது, கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள முகாம்கள் மீதும், காவல் அரண்கள் மீதும் பாரிய வெற்றிகரத் தாக்குதல்கள் சூசை தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. போர் காலத்தில் சிறீலங்கா இராணுவத்தின் டோரா படகுகள் உட்பட பாரிய யுத்தக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடற் புலிகளின் கட் டளைத் தளபதியாக விளங்கிய பிரிகேடியர் சூசை, இறுதி யுத்தத்தில் களத்தில் போராடியபடி இறுதி நேரத்திலும் மக்களுக்கு குரல் கொடுத்தபடியே வீரச்சாவடைந்தார்.

*படைத்துறை வரைபடத் தளபதி*

## பிரிகேடியர் சசிகுமார்



பிரிகேடியர் சசிகுமார் அவர்கள் இராணுவ படைத்துறை வரைபடத் தளபதி ஆவார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் சிங்களப் படைமுகாம் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும், எதிரிகளின் படைப்பலம், படைக் கட்டமைப்புக்கள் போன்றவற்றினைத் தெரிந்து தகவல் கொடுக் கவும், எதிரியின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து பின் போராளிகளின் நட வடிக்கை சமர்களுக்கான தகவல்களை வழங்குவதற்கும் வேவுப்பிரிவு தேசியத்தலைவரால் உருவாக்கப்பட்டது. அதற்காக அல்லும் பகலும் தன் உழைப்பாலும் போராளிகளின் ஈகத்திற்க்கு உயிர்கொடுத்து வரைபடைமும் உயிரோட்டம் கொடுத்தவர்களில் பிரிகேடியர் சசிக்குமார் மாஸ் ரரின் பங்கும் அளப்பெரியது என்றால் மிகையாகாது. 2009ஆம் ஆண்டு மே 15ம் நாள் ஆயிரம் ஆயிரம் மாவீரர்களுடன் இணைந்துகொண்டார்.

*வான் புலிகள் தொழில் நுட்பத் தளபதி*

## கேணல் சாள்ஸ் அன்ரனி



கேணல் சாள்ஸ் அன்ரனி தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் மூத்த மகனாவார். தலைவரின் ஆரம்பகால நம்பிக்கைக்குரிய போராளியாகவிருந்து வீரச்சாவடைந்த முத்த தளபதி லெப். சாள்ஸ் அன்ரனியின் பெயரையே தனது மூத்த மகனுக்குச் சூட்டியிருந்தார். கேணல் சாள்ஸ் அன்ரனி வான் புலிகள் தொழில் நுட்பத் தளபதியாக செயற்பட்டு வந்தார். இறுதியாக யுத்தம் நடை பெற்ற காலத்தில் பல களமுனைகளில் புலிகளின் படையணிகளை வளிநடத்தி தாக்குதல்களைத் தொடுத்தார். பலர் வெளியில் செல்வதற்கு வற்புறுத்திய போதும் இறுதி வரை களத்தில் நின்று போராடி வீரச்சாவடைந்து தமிழீழ மண்ணில் விதையானார்.

*அரசியல் துறைப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் நடேசன்



பிரிகேடியர் நடேசன், இவரின் இயற்பெயர் பாலசிங்கம் மகேந்திரன். இவர் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். விடுதலைப் புலிகளின் அலுவலகம் இந்தியா, தமிழ்நாட்டில் இருந்த ஆரம்ப காலத்தில் தலைமை அலுவலகப் பொறுப்பாளராகவும் பின்பு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். 2007ஆம் ஆண்டு அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் வீரச்சாவடைந்ததன் பின்னர் இவர் அரசியல் பொறுப்பாளராக தலைவரினால் நியமிக் கப்பட்டிருந்தார். முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் சர்வதேச யுத்த நியதிகளின்படி சர்வதேச மத்தியஸ் தர்களின் வேண்டுதலின் பேரில் நிராயுதபாணியாக தனது அரசியல் குழுவினருடன் வெள்ளைக் கொடியுடன் சென்றவேளை சிறீலங்கா படையினரால் சுடப்பட்டு தமிழீழ மண்ணில் விதையானார்.

*சமாதானச் செயலகப் பணிப்பாளர்*

## பிரிகேடியர் புலித்தேவன்



புலித்தேவனின் இயற்பெயர் சீவரத்தினம் பிரபாகரன் ஆகும். இவர் புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்ளுடன் பல்வேறு அர சியல் பணிகளை முன்னெடுத்தவர். பல பேச்சு வார்த்தைகளிலும் பங்குபற்றிய புலித்தேவன் சமா தான செயலகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் சர்வதேச யுத்த நியதிகளின்படி சர்வதேச மத்தியஸ்தர்களின் வேண்டுதலின் பேரில், நிராயுதபாணியாக வேள்ளைக் கொடியுடன் சென்றவேளை சிறீலங்கா படையினரால் சுடப்பட்டு தமிழீழ மண்ணில் விதையானார்.

# மாவீரர் துயிலும் இல்லம்

**மாற்றார் சிதைத்தாலும் மாவீரர் கல்லறை**
**மண்ணாய் நிலைக்குமையா...**
**ஆற்றல் மிகுந்த மாவீரர் கல்லறை**
**மண்ணில் அனலே முளைக்குமையா...!**






# கல்லறையில் இருந்து கண்மணி ஒன்று

ஓ... யாரது
என் கல்லறைக்கு
மலர் தூவி அஞ்சலிப்பது
யார்...?

என் அம்மாவா...?
இருக்க முடியாது
நான் கதறியழ
கயவர் கரங்களில் என் தெய்வம்
அலங்கோலப்பட்டல்லவா
அடங்கிப் போனது.
என் அம்மா இல்லை இது...!

அப்போ... யார்?
யார் மலர் தூவி அஞ்சலிப்பது.

என் அப்பாவா...?
இருக்க முடியாது.
பயங்கரவாதி என்று பட்டம் கொடுத்து
என் பத்தாம் வயதிலேயே... அவரைப்
படுகொலை செய்து விட்டனரே
என் அப்பா இல்லை இது...!

அப்போ... யார்?
யார் மலர் தூவி அஞ்சலிப்பது.

கூடு கலைந்து
ஓடி வந்த போது
என் கரம் நழுவி தொலைந்து விட்ட
ஆசைக் தங்கச்சியா...
இல்லை... அவளுக்கு என் முகம் தெரியாது...
அவள்... எங்கே... அதுவும் தெரியாது.

அப்போ யார்?
யார் மலர் தூவி அஞ்சலிப்பது
பக்கத்துக்கு கல்லறையில்
படுத்திருந்தவன் சொன்னான்
ஏய்... நண்பா
எந்த மக்களுக்காக
உன் உயிரை ஈந்தாயோ...
அந்தக் கரங்கள் தான்
உன்னை அஞ்சலிக்கின்றது.
நாங்கள் அநாதைகளல்ல
அமைதியாகத் தூங்கு.
ஓ...
என் மக்களா...!
இறவா இன்னுமொரு பிறவிதா
இந்த மக்களுக்காக
போராடி விதையாக!

-காண்டிபன்



சங்கத்தமிழ்




# தமிழீழம் என்ற எண்ணக்கருவை அழிக்க நினைத்த சிங்களக் குடியேற்றங்கள்

சி. விபுலேந்திரன்




இலங்கை முழுவதும் தமிழர்களது முதற்குடிகள் அதாவது மூத்த குடிகள் 3,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தனர். இவர்கள் நாகர்கள், இயக்கர்கள் என அழைக்கப்பட்டனர்.

இவர்கள் நாகரீகத்தில் முன்னேறிய பண்டைய வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டமாக இலங்கையில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் கற்கருவி பண்பாடு வழிவந்தோர் என்பதும் வரலாற்று ஆய்வுகளின் மூலமும் அகழ்வாய்வுகள் மூலமும் கிடைத்த தொல்பொருட்சான்றுகள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்து. இதன் மூலம் இலங்கை முழுவதும் திராவிடருக்குச் சொந்தமாக விளங்கியதும் புலனாகின்றது.

சிங்ஹல விஜயனின் வருவையுடன் இலங்கையின் சிங்கள மக்களது தோற்றம் ஆரம்பமாவதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. விஜயனின் வருகைக்கு முன்னர் (2000 ஆண்டுகளுக்கு முன்) நாகரீகமடைந்திருந்த மக்கள் வசத்தில் இந்த நாடு இருந்ததாக “பார்க்கர்” என்பவர் தன் “புராதன இலங்கை” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

குடிசார் வரலாற்றுப் புவியியல் அடிப்படையில் திராவிட இனத்திற்குச் சொந்தமான மண்ணும் மக்களும் சிங்ஹல விஜயவின் வருகையால் தம் வளத்தின் ஒரு பகுதியை இழக்க நேர்ந்த சம்பவம் கி.மு. 438ம் ஆண்டு நிகழ்ந்தது.

## தமிழீழம்: –

சிங்ஹல விஜனின் வருகையும், இயக்கர்களின் தலைவியான குவேனியின் தொடர்பும், இந்தியாவிலிருந்து விஜயனால் கொண்டு வரப்பெற்ற மக்கள் கூட்டமும் புதிய கலப்பினச் சந்ததியான சிங்கள இனம் தோன்ற வழிவகுத்ததோடு இவர்கள் மகாவலி கங்கை, மாணிக்ககங்கை, களனி கங்கை ஆற்றங்கரைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் குடியமர்ந்த இயக்கர்கள் வாழ்ந்த இலங்கையின் தென் பகுதியை இழக்கும் நிலையை தமிழினம் அடைந்தது.

நாகர்கள் வலியையும், ஆளுமையும் மிக்வர்களாக இருந்ததனால் நாகர்கள் வாழ்ந்த இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாண கரையோரப் பகுதிகளும் தமிழர் இராச்சியமாக உறுதிபெற்று தமிழீழமாக நிமிர்ந்து நின்றது. இதுவே தமிழர்களின் தமிழீழத் தாயகமாகும்.

வடமாகாணம் மொத்தப் பரப்பளவு (சதுர கிலோமீற்றர்) 8879.6

கிழக்கு மாகாணம் மொத்தப் பரப்பளவு (சதுர கிலோமீற்றர்) 10001.0

வடமேல் மாகாண புத்தள மொத்தப் பரப்பளவு (சதுர கிலோமீற்றர் 1488.5

எனவே தமிழீழ மொத்தப் பரப்பளவு (சதுர கிலோமீற்றர்) 20369.1

## சிங்கள மயமாகும் தமிழீழம்: –

ஒரு நாட்டின் தலைமைப்பீடத்திற்கு சம்பூரணமாக கட்டுப்பட்டு தாங்கள் வாழும் இடத்தை விட்டு பிறிதொரு நாட்டிற்கோ, பகுதிக்கோ, இராச்சியத்திற்கோ சென்று புதிய தொரு வாழ்க்கையை விஸ்தரிப்பதே குடியேற்றம் என்னும் சொல்லின் மையப் பொருளாகும்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னர் விவசாய அபிவிருத்திக்காக வறுமை நிலையிலிருந்தோரை வரண்ட பிரதேசங்களில் குடியேற்றி காணிகள் பகிர்ந்தளிப்பதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டு நாட்டின் பல பகுதிகளிலும் விவசாய முன்னேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பெற்றன.

சுதந்திரத்திற்கு முந்திய ஆண்டுகளில் “டொனமூர் நிர்வாகத்தின் கீழ்” நாடு நிர்வகிக்கப்பெற்ற காலத்தில் இலங்கை இராஜதானியப் பகுதிகளான வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் குறிப்பாக வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் குடியேற்றத் திட்டங்கள் செய்ற்படுத்தப்பெற்றன.

சோல்பரி திட்டத்தினால் தேசபிதா என அழைக்கப்பெற்ற சுதந்திர இலங்கையின் முதல் மந்திரியாக இருந்த டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் காணி விவசாய அமைச்சராக இருந்தபோது இக்குடியேற்றத் திட்டங்களை ஆராய்ந்ததில் இவ் வட மத்திய மாகாண குடியேற்றத் திட்டங்களில் அக்காலத்தில் எவ்வித இனக்கலவரங்களும் இடம்பெறவில்லை என அறியப்பெற்றது. அதனால், பொலநறுவை மாவட்டத்தில் மின்னேரிய, பராக்கிரம சமுத்திர, எலகர,




கடுவங்குளம் பகுதிகளில் 100 வீதம் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் விஸ்தரிக்கப்பெற்றது. பொலநறுவைக்கு தனி நிர்வாக மாவட்டம் தமிழீழ எல்லைப் பகுதியில் ஏற்படுத்தப் பெற்றது. இதேபோன்று முற்று முழுதாக சிங்களவருடைய நன்மைக்காகவே தமிழீழத்தின் எல்லை மாவட்டங் களான பொலநறுவை, அநுராதபுரம், மொனறாகலை, பதுளை, சிலாபம், புத்தளம் ஆகியவற்றிலும் வேறு சிங் களப் பகுதிகளிலும் அநேக குடியேற்றத்திலட்டங்கள் நிறுவப்பெற்றன.

இவற்றைத் தொடாந்து தமிழீழப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் “சேன நாயக்கா சமுத்திரத்திட்டம்” என அழைக்கப்படும் குடியேற் றத்திட்டம் கல்லோயாத் திட்டத்துடன் ஆரம்பமாகியது.

கல்ஓயா ஆறு பதுளை மாவட்டத்திலுள்ள “பதுல்சிமா” விலிருந்து ஆரம்பிக்கின்றது. 62 மைல் நீளமான இந்த ஆற்றை மறித்து ஆற்று நீரைச் சேமித்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதே கல்லோயாத் திட்டத்தின் பிரதான நோக்கம் எனக் கூறப்பெற்றது. ஆனால், இத்திட்டம் நீர்த் தேக்க அரச காணிகளில் சிங்கள மக்களை குடியேற்றும் நோக்கத்தையோ கொண்டிருந்தது.

வரண்ட பிரதேசங்களில் நீர்ப்பாசனத்திட்டங்களை ஆரம் பித்தபோது தமிழர் வாழ்வு அதன் மூலம் பசுமை யடைவதை டி.எஸ். சேனநாயக்கா விரும்பததால் சிங்க ளவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் திட்டங்கள் தீட்டப்பெற்றது.

டி.எஸ். சேனநாயக்கா மகாபாக்கிரமபாகுவின் கோட் பாடுகளின் அடிப்படையிலேயே குடியேற்றங்களை ஒழுங் குபடுத்தினார். அதாவது, குளங்கள் மற்றும் நீர்த்தேக் கங்களை அமைத்தல், அதிலிருந்து நீர்ப்பாசனத் திட் டங்களை ஏற்படுத்தி மக்களை குடியமர்த்தல் ஆகும்.

சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்கு பிக்குகளும், இரா ணுவத்தினரும் சென்றனர். இவர்களின் அடாவடித்தனத் திற்கு 1956ல் கல்லோயா திட்டத்தில் நடைபெற்ற இனக் கலவரம் சான்றாகும்.

இக்கல்லோயாத் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சிங்கள மாவட்டமான அம்பாறை மாவட்டமும், அம் பாறைத் தேர்தல் தொகுதியும் உருவாக வழிவகுத்தது. “நாட்டின் அபிவிருத்திக்காக” என்ற திட்டம் தமிழர்களின் பாரம்பரியத்தாயகக் கோட்பாட்டை சிதைக்கும் என்பதைக் காட்டியது.

## தமிழ் ஈழக் கருவை அழிக்கும் திட்டம்:-

- ★ தமிழீழ மாவட்டங்களைத் துண்டாடல்.
- ★ தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு - வடமேல் மாகாண பகுதிகளின் இணைப்பைத் துண் டிப்பது.
- ★ தமிழீழ தலைநகரை சிங்கள மயப்படுத்தல்.

இத்திட்டமிடல்களின் அடிப்படையில் தமிழீழப் பகுதியில் கல்லோயாத்திட்டத்தைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் அலைலைக் - கந்தளாய் குடியேற்றத் திட்டங்களும், முல்லை, வவுனியா மாவட்டங்களில் பாவற்குளம் குடியேற்றத்திட்டமும் அதன் பின் பதவியா, வெலிஓயா குடியேற்றத்திட்டங்களும் செயற்படுத்தப் பெற்றன.

இதன் தொடர்ச்சியாக மகாவலி அமைச்சின் பெரும் புள்ளிகளால் இரகசியமாக தீட்டப்பெற்ற துரித மகாவலி அபி விருத்தித் திட்டத்தின் கீழ் குடியேற்றத் திட்டங்கள் தமிழீழக் கருவை அழிக்கும் திட்டங்களாக இரகசியமாகத் தீட்டப் பெற்றன.

மகாவலி அமைச்சை சேர்ந்த மாலிங்க ஹேர்மன் குண ரெட்ன என்பவரால் வெளியிடப்பெற்ற பத்திரிகைச் செய் திகளும் பேட்டிகளும் இச் சிங்களக் குடியேற்றங்கள் ஈழக் கோரிக்கையின் அடிப்படைக் கருவையே அழித்துவிடும் என்பதற்கு ஆதாரமாக அமைந்தது குடியேற்றத் திட்டங் களின் உண்மை நோக்கத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இதன்படி இத்திட்டமிடலில்.

- ★ முதற்பகுதி 45,000 நிலமற்ற விவசாயிகளை மதுறு ஓயாவுக்கு (மட்டக்களப்பு, பொலநறுவை மவாட்டங்களை அனுப்பவது.
- ★ இரண்டாவது யான் ஓயாவில் குடியேற்றம் (திரு கோணமலை மாவட்டம்) ஒன்றை அமைப்பது.
- ★ மூன்றவது ஈழக்கோரிக்கைக்கு எதிரானவர் களை மல்வத்து ஓயாவில் (மன்னார், புத்தளம் மாவட்டம்) குடியமர்த்துவது.




இத்திட்டங்கள் யாவும் 1983-1984 காலப்பகுதியில் ஆரம் பிக்கப்பெற்றன. மேலும், இத்திட்டங்கள் தமிழீழ விடு தலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவம் நோக்கத் தையும் கொண்டிருந்தன.

- ★ மதுறு ஓயாத் திட்டத்தின் மூலம் கிழக்கு மா காணத்தை துண்டாடுவதும் போராளிகள் தமி ழீழப் பகுதிகளிலிருந்து மட்டக்களப்பு வர மதுறு ஓயாவைத் தாண்டியே வர இருக்கின்ற நிலையை உருவாக்கி போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கமும் இருந்தது.
- ★ யான் ஓயாத் திட்டத்தில் திருகோணமலைக்கு வடக்கே இருக்கும் யான் ஓயாப் பிரதேசம் இன் றைய யுத்தத்தில் ஒரு முக்கிய இடமாகும். யான் ஓயாத்திட்டத்தின்படி அங்கு 50,000 மக்கள் குடி யேற்றப்படுவார்கள். இதன் மூலம் வடமாகாண மும் கிழக்கு மாகாணமும் தொடர்பு துண்டிக்கப் பட்டு பிரிக்கப்பட்டிருக்கும். அத்துடன், ஏற்கனவே உருவாக்கப்பெற்ற பதவியா, வெலிஓயா குடியேற் றத்திட்டங்களையும் பலப்படுத்தியிருக்கும். யான் ஓயாக்குடியேற்றத் திட்டத்தின் மூலம் போராளி களின் நடமாட்டத்தை வடக்கு - கிழக்கு மாகா ணங்களுக்கிடையே கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.
- ★ மல்வத்து ஓயா குடியேற்றம் மூலம் மன்னார் முழுமையாக வடமேல்மாகாணத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கும்.

இக்குடியேற்றத்திட்டங்களை அமைக்க 10,000 மில் லியன் ரூபாய்களை சிங்கள அரசு செலவிடும் வகையில் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பெற்று குடியேற்றவாசிகளை பயிற்சியுடனான ஆயுதபாணிகளாக்க வேண்டியதும் செயற்பாடுகளாக இத்திட்டம் கொண்டிருந்தது. மேலும், இக்குடியேற்றங்களை மக்கள் பலத்துடனும் இராணுவப் பலத்துடனும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத் தையும் கொண்டிருந்தது.

## தமிழீழ தலைநகர்:-

தமிழீழத் தலைநகரம் “திருகோணமலை மாவட்டம்” இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.

இலங்கையின் கிழக்குக் கரையோரமாக அமைந்துள்ள திருகோணமலை வடக்கே யான் ஓயாவையும் (முல்லைத் தீவு மாவட்டம்) தெற்கே வெருகல் கங்கையையும் (மட்டக் களப்பு மாவட்டம்) கிழக்கே வங்காள விரிகுடாவையும் மேற்கே அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

இங்குள்ள திருக்கோணஸ்வரம் கோவிலும், கிண்ணியா வென்னீர் ஊற்றுக்களும் வேறு பல சின்னங்களும் பண் டைய இலங்கை வேந்தன் இராவணனால் நிர்மாணிக் கப்பட்டதெனக் கூறப்பெறுகிறது. இங்குள்ள பிரெட்றிக் கோட்டை ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்துக்குரியது. இங்குள்ள முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம் உலகில் இரண் டாவது இயற்கைத் துறைமுகம் என வர்ணிக்கப் பெறுகிறது. இயற்கை அரண்கொண்ட இத்துறைமுகம் இரண்டாம் உலக யுத்த காலத்தில் சிங்கப்பூர் ஜப்பானிடம் விழ்ந்ததும் இதன் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங் கியது. இந்து சமுத்திரத்தில் கடலாதிக்கத்தைப் பேணு வதற்குரிய நாடாக இலங்கை பிரித்தானியரின் கையி லிருந்தது. இந்து சமுத்திரத்தில் கடலாதிக்கம் செலுத்

துவதற்குள் ஏடன், சிங்கப்பூர், திருகோணமலை ஆகிய துறைமுகங்களை பிரித்தானியர் பெரிதும் கருத்தில் கொண்டிருந்தனர்.

அன்றிலிருந்து இன்றுவரை திருகோணமலையைத் தக்க வைத்துக்கொள்ள நடைபெறும் இராஜதந்திரப் போரில் நேரடியாகப் பாதிக்கப் பெறுபவர்கள் தமிழ் மக்களேயாகும்.

## தலைநகரைச் சிங்கள மயப்படுத்தல்:–

தமிழீழம் என்ற அடிப்படை எண்ணக்கருவை அழிக்கும் திட்டத்தின் கீழ் தமிழீழ தலைநகரை சிங்கள மயப்படுத்தி "தமிழீழ தலைநகர் திருகோணமலை" என்ற எண்ணக் கருவைச் சிதைக்கும் திட்டங்கள் சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பெற்றன.

திருகோணமலை மாவட்டத்தில் "அல்லைக் - கந்தளாய்" குடியேற்றத் திட்டத்துடன் 1951ல் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பெற்று தொடர்ச்சியாக மேற்கொள் ளப்பெற்று "தமிழீழத் தலைநகர் திருகோணமலை" சிங்கள அரசுகளால் சிங்கள மயப்படுத்தப்பெற்றுள்ளது. இதற்கு இலங்கை சுதந்திரம் அடைய முன்னரும் (1949ம் ஆண்டு) இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இறுதி யாக (1987ம் ஆண்டு) எடுக்கப் பெற்ற புள்ளிவிபரத் தரவுகளே சான்றுகளாகம்.

## திருகோணமலை மாவட்ட குடித்தொகைப் பரம்பல்:–

***சுதந்திரத்தின் முன் (1946) சனத்தொகையும் வீதமும்***

தமிழர்கள் 33,795 (44.5 வீதம்), சிங்களவர்கள் 11,606 (15.3 வீதம்), முஸ்லீம்கள் 23,219 (30.6 வீதம்)

***சுதந்திரத்தின் முன் (1987) சனத்தொகையும் வீதமும்***

தமிழர்கள் 97,940 (35.79 வீதம்), சிங்களவர்கள் 98,435 (35.98 வீதம்), முஸ்லீம்கள் 74,756 (27.32 வீதம்)

சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தும் வகையில் தேர் தல் தொகுதிகள் பிரதேசச் செயலர் பிரிவுகளுக்கு காணி ஒதுக்கீட்டில் சிங்களப் பிரிவுகளுக்கு 50 வீதத்திற்கும் மேலதிகமான காணிகள் ஒதுக்கப்பெற்றன.

தேர்தல் தொகுதி - இனரீதியான தொகுதி -மொத்தப்பரப்பு (சதுரமைல்)

| | | |
|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | சேருவில |
| தமிழ் | முஸ்லீம் | சிங்களம் |
| 266 | 170 | 574 |

மொத்தம் 1010

புள்ளிவிபரப்படி மூன்று இடங்களையும் சரிசமனாகக் கொண்ட இம் மாவட்டத்தில் தற்போது 06 சிங்கள பிரதேச செயலர் பிரிவுகளும் 02 தமிழ்ப் பிரதேச செயல் பிரிவுகளும் 02 முஸ்லீம் பிரதேச செயலர் பிரிவுகளும் ஏற்படுத்தப் பெற்று இம் மாவட்டம் ஒரு சிங்கள மாவட்டமென எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த ஏற்பாடு என்பது வெள்ளிடமலை.

## பிரதேச செயலக பிரிவும் பெரும்பான்மை இனமும்:–

***திருகோணமலை பட்டணமும் சூழலும்: தமிழர், குச்ச வெளி: குச்சவெளி: தமிழர், தம்பலகமம்: சிங்களவர், மெறவேல: சிங்களவர், கோமரங்கடவல: சிங்களவர், கந்தளாய்: சிங்களவர், சேருவில்: சிங்களவர், பதவி சிறிபுர: சிங்களவர், மூதூர்: முஸ்லீம், கிண்ணியா: முஸ்லீம்***

சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் படும் வகையில் தமிழர்களது வாக்களைப் பிரிக்கவும், தமிழர்களது தேர்தல் தொகுதியில் தமிழர்களது வாக்கு களைக் குறைத்து சிங்களவர்களது வாக்குகளை அதி கரிக்கும் வகையில் பிரதேச செயலக மக்கள் தேர்தல் தொகுதிகளுக்கு பிரிவாக்கப்பெற்றனர்.

மிகக் கொடூரமான தாக்கம் "பதவிசிறிபுர" எனும் புதிய பிரிவை ஏற்படத்தி அநுராதபுர மாவட்டத்தில் நிர்வகிக் கப்பெற்ற பகுதியை திருகோணமலை மாவட்டத்திற்கு 1982ல் மாற்றி அதனை உள்ளடக்கி 574 சதுரமைல் பரப்புள்ள புதிய சிங்களத் தேர்தல் தொகுதியான "சேருவில தேர்தல் தொகுதியை" உருவாக்கியமை ஆகும்.

மேலும், சிங்களக் குடியேற்றங்களுக்கு வசதியாக தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவுகள் கூடிய சனத்தொகையில் இருக்கத்தக்கதாக சிங்கள பிரதேச செயலர் பிரிவுகள் குறைந்த சனத்தொகையுடன் ஏற்படுத்தப்பெற்றது.

## பிரதேச செயலர் பிரிவு 1971ம் ஆண்டு




## எண்ணிக்கை வீதம்:–

திருகோணமலை பட்டணமும் சூழலும் 58,013 (30.8), குச்சவெளி 14,986 (7.9), தம்பலகமம், கிண்ணியா 39,093 (20.7), மூதூர் 29,299 (15.5), கந்தளாய் 25, 029 (13.3), கோமாங்கடவல, மெறவேவா 8,634 (4.8), சேருவில 13,061 (7.0), பதவிசிறிபுர (1982 ஏற்படுத்தப் பெற்றது.)

**1981ம் ஆண்டு எண்ணிக்கை வீதம்**

குச்சவெளி 17,695 (6.8), தம்பலகமம் 20,770 (8.6), கிண்ணியா 31,142 (12.1), மூதூர் 39,992 (15.4), கந்தளாய் 3,837 (14.7), கோமாங்கடவல 7,096 (2.7), மெறவேவா 9,359 (3.6), சேருவில 20,161 (7.9), பதவிசிறிபுர 11,085

திருகோணமலை பட்டணமும் சூழலும் தமிழ்ப்பிரிவு, குச்ச வெளி தமிழ்ப்பிரிவு, தம்பலகமம் சிங்ளப் பிரிவு, கிண் ணியா முஸ்லீம் பிரிவு, மூதூர் முஸ்லீம் பிரிவு, கந்தளாய் சிங்களப் பரிவு, ஹோரமங்கடவல சிங்களப் பரிவு, மொர வேவா சிங்களப் பரிவு, சேருவில சிங்களப் பரிவு, பதவி சிறிபுர சிங்களப் பரிவு.

பாரம்பரிய தமிழ்ப் பெயர்களைக் கொண்ட 04 தமிழ்ப் பிரிவுகளும் அடைமொழியாக "பற்று" என்ற தமிழ்ப் பெய ருடன் வழங்கின. காலக்கிரமத்தில் சிங்கள அரசுகளின் சூழ்ச்சிகளினால் இப் பெயர்கள் நீக்கப்பெற்று புதிய சிங் களப் பெயர்கள் சூட்டப்பெற்றன.

**பாரம்பரிய தமிழ்ப் பிரதேச செயலக பிரிவுகள் அப் பிரிவுகளில் உருவாக்கப்பெற்ற புதிய பிரதேச செயலக பிரிவுகள்:–**

| | |
|---|---|
| *தம்பலகமம்பற்று* | கந்தளாய், கிண்ணியா |
| *கட்டுக்குளம்பற்று* | கோமரங்கடவல, மெறவேவா, பதவிசிறிபுர |
| *கொட்டியாரப்பற்று* | சேருவில |

| | *உருவாக்கப்பெற்ற ஆண்டு - இனரீதியான பிரிவு விபரம்* |
|---|---|
| கந்தளாய் | 1965 - சிங்களம் |
| கிண்ணியா | 1976 - முஸ்லீம் |
| கோமரங்கடவல | 1965 - சிங்களம் |
| மெறவேவா | 1976 - சிங்களம் |
| பதவிசிறிபுர | 1982 - சிங்களம் |
| சேருவில | 1971 - சிங்களம் |

1981ம் ஆண்டு இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தனா அவர்கள் திருகோணமலை கடற்படைத் தளத்தில் கடற் படையினர் மத்தியில் உரையாற்றியபோது பின்வருமாறு கூறினார்:-

திருமலைத் தொகுதி தமிழருக்காக (Tamils Trincomalee) என்று கூறி T.T. என்றார்.

மூதூர்த் தொகுதி முஸ்லீம்களுக்காக (Muslims Muthur) என்று கூறி M.M என்றார்.

சேருவிலத் தொகுதி சிங்களவருக்காக (Sinhalese Seruwila) என்று கூறி S.S என்றார்.

இந்தக் கூற்றிலிருந்து தலைநகரை சிங்கள மயப்படுத்த சிங்கள அரசுகளும் சிங்களத் தலைவர்களும் எவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் திட்டமிட்டு செயற்பெற் றுள்ளனர் எனக்காணமுடியும்.

அத்துடன் தலைநகரை சிங்களமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் திருகோணமலையை வர்த்தக நகரமாக்கவும் ஒரு நாவாய்ப் படைத்தளமாகவும், முத்துக்குளிக்கும் ஸதான மாக்கவும் திட்டங்கள் தீட்டப்பெற்றிருந்தது. இதன் ஒரு அம்சமே சந்திரிகா அரசால் திருகோணமலையை சமா தான நகரமாக்கியதும் ஆகும்.

**மாசே–துங்**கின் ஒரு வார்த்தை:

**"உனது எதிரி எதை எதிர்க்கிறானோ அதற்கு ஆதரவு கொடு. உனது எதிரி எதற்கு ஆதரவு கொடுக்கிறானோ அதனை எதிர்"**

எமது தமிழீழ விடுதலைப் போராட்டமும் இதனையே உணர்த்தி நிற்கிறது. சிங்கள இனவாதம் தமிழீழ மண்ணை ஆக்கிரமிக்கவும் சிங்கள மயப்படுத்தவும் கங்கணம்கட்டி நிற்கிறது.

தமிழர்களது தாயகப் பகுதியை ஆக்கிரமித்து சிங்கள மயப்படுத்தி எமது மொழியை அழித்து, வரலாற்றைத் திரித்து, கலை பண்பாட்டை சீரழித்து, எமது பொருளாதார வாழ்வை சீர்குலைத்து, தமிழீழ எண்ணக்கருவை அழிக்க நினைக்கும் சிங்கள அரசின் திட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகளும் அதன் தலைவரும் தவிடுபொடியாக்கி சிதறடித்து வருகின்றனர்.

தமிழீழத் தேசியத் தலைவரும் அவரது தியாக சேனையும் தமிழீழ மண் மீட்கவும், மண்காக்கவும் செல்லும் புனித விடுதலைக்கான பயணத்தில் தமிழ் மக்களாகிய நாமும் தலைவர் மேதகு வே. பிரபாகரன் கரங்களைப் பலப்படுத்தி எமது மண்ணை சிங்கள இனவாதத்திடமிருந்து மீட்கவும் காக்கவும் புறப்படுவோம்.

நன்றி: வெளிச்சம் கார்த்திகை - மார்கழி 2001






# மாவீரர் துயிலுமில்லங்கள் விபரம்

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில (5, துயிலும் இல்லங்கள்)**

1) சாட்டி தீவகம் துயிலுமில்லம்
2) கோப்பாய் துயிலுமில்லம்
3) எல்லங்குளம துயிலுமில்லம்
4) கொடிகாமம் துயிலுமில்லம்
5) உடுத்துறை துயிலுமில்லம்

**கிளிநொச்சி மாவட்டம் (3, துயிலும் இல்லங்கள்)**

6)கனகபுரம் துயிலுமில்லம்
7)விசுவமடு துயிலுமில்லம்
8)முழங்காவில் துயிலும்இல்லம்

**முல்லைத்தீவு மாவட்டம் (5, துயிலும் இல்லங்கள்)**

9) முள்ளியவளை துயிலுமில்லம்
10) அலம்பில் துயிலுமில்லம்
11) ஆலங்குளம் துயிலுமில்லம்
12) வன்னிவிளாங்குளம் துயிலுமில்லம்
13) களிக்காடு (நெடுங்கேணி) துயிலுமில்லம்

**மன்னார் மாவட்டம் (2, துயிலும் இல்லங்கள்)**

14) ஆட்காட்டிவெளி துயிலுமில்லம்
15) பண்டிவிரிச்சான் துயிலுமில்லம்

**வவுனியா மாவட்டம் (1, துயிலும் இல்லம்)**

16) ஈச்சங்குளம்துயிலுமில்லமும்

**மணலாறு பிரதேசம் (2 துயிலும் இல்லம்)**

17) உதயபீடம் (டடி முகாம்) துயிலுமில்லம்
18) இதயபீடம் (ஜீவன் முகாம்) துயிலுமில்லம்



**திருகோணமலை மாவட்டம் (4, துயிலும் இல்லங்கள்)**

19) ஆழங்குளம் துயிலுமில்லம்
20) தியாகவனம் துயிலுமில்லம்
21) பெரியகுளம் துயிலுமில்லம்
22) உப்பாறு துயிலுமில்லம்

**மட்டக்களப்பு மாவட்டம் (4, துயிலும் இல்லங்கள்)**

23) தரவை துயிலுமில்லம்
24) தாண்டியடி துயிலுமில்லம்
25) வாகரை கண்டலடி துயிலுமில்லம்
26) மாவடிமுன்மாரி துயிலுமில்லம்

**அம்பாறை மாவட்டம் (1, துயலும் இல்லம்)**

27)கஞ்சிகுடியாறு துயிலுமில்லம்

**மொத்தம் 27 துயிலும் இல்லங்கள் மட்டுமே**

2008 இறுதிவரை இருந்தது.
ஆனால் ...!
போர் உக்கிரமான போது அமைக்கப்பட்ட விபரம் வருமாறு

**மாவீரர் துயிலுமில்லங்கள் (6,துயிலும் இல்லங்கள்)**

28) தர்மபுரம் துயிலுமில்லம்
29) சுதந்திரபுரம் துயிலுமில்லம்
30 இரணைப்பாளை துயிலுமில்லம்
31) பச்சைப்புல்வெளி துயிலுமில்லம்
32) கரையா முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்
33) வெள்ளா முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்

ஆகிய ஆறு துயிலும் இல்லங்களும் 2008, தொடக்கம் இறுதிப்போர் 2009, மே,18 வரை அமைக்கப்பட்டன.



மாவீரர் நாள்
MAAVEERAR NAAL
நவம்பர்
NOVEMBER
27
காந்தள்
சிறுத்தை
வாகை
செண்பகம்
எங்களுக்காய், தமிழீழ மண்ணுக்காய், தமிழ் தேசியத்துக்காய் தம் உயிர் ஈந்த மாவீரர்களின் வீர வணக்க நாள்
In remembrance Our Heroes
Who Sacrificed their very Life for us,
for Our Homeland and or our Tamil Nationalism
கொடிகாமம்
முழங்காவில்
தேவிபுரம்
வன்னிவிளாங்குளம்
கள்ளிக்காடு
எள்ளங்குளம்
விசுவமடு
முள்ளிவாய்க்கால்
ஆலங்குளம்
ஆட்காட்டிவெளி
கனகபுரம்
இரட்டைவாய்க்காலையும் வலைஞர் மட கிரவல் வீதி பகுதி
கண்டலடி
தரவை
மணலாறு டடி முகாம்
ஈச்சங்குளம்
முள்ளியவளை
அளம்பில்
உடுத்துறை
தாண்டியடி
பெரிய பண்டிவிரிச்சான்
மாவடி முன்மாரி
பெரியகுளம்
சம்பூர் ஆலங்குளம்
சாட்டி
மணலாறு ஜீவன் முகாம்
இரணப்பாலை
கோப்பாய்
கல்லடி
இறுதிப் போர்க்காலத்தில் முல்லையில் மாவீரர் துயிலுமில்லகள்:
தேவிபுரம் "ஆ" பகுதி குடியேற்ற திட்டம்
(சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை)
இரணப்பாலை பெருந்தோட்டம்
(சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை)
வலைஞர் மடம் தெற்கு களித்தரைப் பகுதி
(பெப்ரவரி இறுதியில் இருந்து மார்ச் முதலாவது கிழமை வரை)
வெள்ளா முள்ளிவாய்க்கால் கப்பல் வீதிக்கு அண்மையில் உள்ள பகுதி
முள்ளிவாய்க்கால்
மே 13,14,15 அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றாற்போல விதைக்கப்பட்டது.
முல்லிவாய்க்கால்
மே 16,17,18
விதைக்கப்படவில்லை விடுபட்டன.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Tamileelam
சங்கத்தமிழ்



# தாகம் சுமந்தவரின் வாசலில் நின்று சத்தியம் செய்வோம்

சொரிந்த மேகக் கண்ணீரால்
நிலமூறிச் சிதம்பிக் கிடக்கிறது.
இப்போது மழையில்லையாயினும்
எப்போதும் உடைப்பெடுக்கலாம் என்பதான
மப்பும் மந்தாரமுமான வானம்.
மயிர்த்துளையூடு புகம் குளிர்காற்று
கூதல் தரவில்லை எமக்கு
மாறாய் நெருப்பாய்த் தகிக்கிறது தேகம்.
பிள்ளைகளின் முகம் தெரியுமெனும்
நம்பிக்கையில்
மணிக்கதவம் தாள்திறக்கும் பொழுதுக்காக
கல்லறைகளுக்கு முன்னே காத்திருக்கிறோம்.
துயிலுமில்லப் பிரகாரமெங்கம்
திரண்டிருக்கிறது தெய்வங்களின் சுற்றம்.
பயிர்களைக் காணவும் பேசவுமென்று
விளைந்து கிடக்கும் விடுதலை வயிலில்
விதைத்தவர் கூடியுள்ளோம்.
கையில் பூவுடனும் சுடருடனும்
நீண்டு கிடக்கிறது கிரியைக்கானவரிசை
கபாடம் திறந்ததும் கண்திறப்பார்களே
குழியிருந்து வெளியே வருவார்களே
புன்னகைப்பார்களே
பின்னர் பேசுவார்களே
கொண்டு வந்தீர்களா என்று கேட்பார்களே.
சென்றவருடம் வந்து திரும்பியபோது
அடுத்தவருடம் வரும்போது
அதனுடன் வருவோமென்றல்லவா
சொல்லித் திரும்பினோம்?
இப்போது என்ன சொல்லப்போகிறோம்?
இந்த வருடமும் வரிசைகட்டி விளக்கேற்றி
வாச மலர் தூவி
அந்தப் பாடலையும் படுவதற்கான
சம்பிரதாயக் கிரியைகளுக்காகவா இந்தக் கியூ?
குற்றமிழைத்தவர்களாகக் குறகி
வெற்றுக் கைகளுடன் போவது எத்தனை
வெட்கம்?
சுடரேற்றித் திரும்பும்போதுதான்
அவர்கள் வாய்திறப்பார்கள்
சுட்டெரிக்கப் போகிறது அந்தச் சுடுகேள்வி.
எங்கே தமிழீழம்?
என்னாச்சு தமிழீழம்?
எதிரொலிக்கப் போகும் அசரீரிக்கு
எங்களிடம் என்ன பதில் உண்டு?
மாவீரர் நாள்
சம்பிரதாயங்களுக்குள் இறுகிய
சடங்குநாளல்ல.

திருவண்ணாமலைச் சோதிப்பெருநாளல்ல
இத்தனை பேரையுமா இழந்தோமென்று
இரங்கியழும் நாளுமல்ல.
இன்னும் சொல்வதானால்
அது அவர்களுக்கான நாளல்ல
எங்களுக்கான நாள்.
துயிலுமில்ல வாசல் கடக்கும் ஒவ்வொரு
தடவையும்
உள்ளே ஏதொ ஊதிப்பெருக்கிறதே
அதற்கான நாள்.
கல்லறைகளில் வெய்யில்
வழிக்காணும் போது
ஓடிப்போய் கூரைவிரிக்கச் சொல்கிறதே
அதற்கான நாள்.
எத்தனை பிள்ளைகளை
எத்தனை எத்தனை விதமாய்க்
கொடுத்தோம்.
நரம்புகளில் நஞ்சு ஊறியதாய்
மேனியெங்கும் கந்தகம் பூசியதாய்
கூட்டியள்ளி வந்த சதைக்குவியலாய்
வகைமாதிரிக்கு எத்தனை
வழியிற்கொடுத்தோம்.
மௌனத்தில் உறைந்துகிடக்கிறது
பிள்ளைகளின் தொட்டில் பரப்பு.
நேரம் நொடிகளாய்க் கரைய
சுற்றம் விளக்கேற்றத் தொடங்கிறது.
மகனே!
மகளே!
சூழலில் வழிகிறது பிரிவின் கனதி.
கருவறை தாங்கிய உறவல்லவா?
அது பிள்ளையின் திருமுகம் தேடுகிறது.
மமமொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதிடு
நெஞ்சுருக்கி உள்ளே நெருப்பேற்றி
விடுகின்ற
அந்தப் பாடலும் தொடங்கிறது.
இனித்தான் கல்லறைக் கதவுகள் திறக்கும்.
இனித்தான் விழிமலர்த்தி
வெளியேவருவார்கள்.
அம்மா!...அப்பா!... எனத் தொடங்கி
தோழரே!...தோழியரே!...என நீண்டு
வழக்கத்திலுள்ள அத்தனை உறவும் சொல்லி
அசரீரிபோல அழைப்பது கேட்கும்.

வழிமூடி விதிர்விதிர்த்து நிற்பவர் முன்னே
அவர்கள் வருவார்கள்
வந்து தொடுவார்கள்
கட்டி அணைப்பார்கள்
பழையன இரைமீட்டிச் சிரிப்பார்கள்.
எங்கே தமிழீழம்?
என்னாச்சு தமிழீழம்?
திரும்பும் போதுதான் கேட்பார்கள்
இம்முறையும்.
பதிலற்றாவராகப் பந்த மேற்றப்போவது
எத்தனை பாவம்
எத்தனை குற்றம்.
காட்சிக்கு வைக்கப்பட்டவையல்ல
இந்தக் கல்லறைகள்.
இவை சாட்சிக்கு வைக்கப்பட்டவை என்பதை
கணக்கில் எடுக்கவும்.
தாகம் சுமந்தவரின் வாசலில் நின்று
சத்தியம் செய்யும் போது
உண்மைமனிதராய் ஒளிரவேண்டும்.
அழகான கவிதைகளும் பாடல்களும்
அனல்மூட்டும் பேச்சுக்களும் அல்ல
அவர்கள் வேண்டி நிற்பது.
அழுதழுது விதைத்த அழகு மேனிகளின்மீது
உறுதியெடுத்ததை நினைவிற்கொள்வோம்.
உயிராய் வழியனுப்பி
சடலமாய் வெளியில் எடுத்த
காலத்தை நினைவிற்கொள்வோம்.
தீராக்கனவுகளுடன் திரிந்த காலத்தை
இன்று தொலைத்தா விட்டோம்?
சகல ஊத்தைகளையும் ஊரஞ்சிக்கழுவி
உண்மைமனிதராய் கல்லறைகளுக்கு முன்னே
நிற்போம்.
அவர்கள் முகம் பார்த்து முறவல் செய்வோம்.
உங்கள் கனவுகளை நெஞ்சில் புதைத்தே
உறுதிசெய்வதாய் சொல்வோம்.
தாய் மீதும்
தமிழ் மீதும்
தலைவன் மீதும்
உங்கள் கல்லறை மீதும் கனவின் மீதும்
சொல்லும் உறுதியுடன்
தொடருமெம் பயணமெனச்சொல்லி
வெளியே வருவோம்.
சுமைகுறைந்தது போலவும்
நமக்கு நாமேபுதியவர் போலவும் தெரிகிறதே.
இதுதான் வழி
இனித்தான் பயணம்.

உலைக்களம் - வியாசன்

# நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
# நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்
# மாண்ட வீரர் கனவு பலிக்கும்
# மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்.



# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அண்ணனுடைய ஐம்பதாவது அகவைக்கு பொட்டு அம்மான் அவர்கள் எழுதிய பதிவிலிருந்து!



எம் தாயகம் பெற்றெடுத்த எங்கள் தேசியத்தலைவர் அவர்களது காலத்தில் வாழும் பெருமையுடன் பணி தொடர்கின்றோம். தலைவரது ஐம்பதாவது பிறந்த நாளுக்கு ஆக்கம் ஒன்று தாருங்கள் என்று கேட்டபோது முதலில் ஏற்பட்ட உணர்வு தலைவரைப் பற்றி நான் எழுதுவதா? என்பது தான்.

தேசியத்தினதும் மற்றும் அக்கறையுடைய அனைவரினதும் பார்வையும் அவர் மீது உன்னிப்பாகப் பதியும் இவ்வேளையில், அவரது பண்புகளைப் பகிர்ந்து கொள்வது தலைவரது விடுதலைக்கான விழுமியங்களை முழுதாய் அறியாதோருக்கு எடுத்துச் சொல்லும் பணியாகவே அமையுமென்ற கருத்து வலுப்பட்டது. அந்தக்கருத்தின் வலுவால் தலைவரைப்பற்றிய பெருமித உணர்வுடன் எழுதுகின்றேன்.

தலைவரைப்பற்றிய பெருமைகளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திற் பார்ப்பர். எந்தவொரு பின்புலமுமில்லாத சாதாரண குடும்பத்திற்பிறந்து, சுயமான அரசியல் தெளிவுடன் விடுதலைக்கான அத்திவாரத்தை அமைத்து, களத்தில் முன்னின்ற போராளியாயும் தளபதியாயும் சமகாலத்திற் செயற்பட்டு, அணிதிரட்டல் செய்து, விடுதலை இயக்கத்தை உருவாக்கிக் கொண்டது வரையான அவரது செயற்பாடுகள் அவரது வரலாற்றின் ஆரம்பச்சாதனைகள்.

விடுதலைப் போராட்டத்தின் பின்னே முழு மக்களையும் அணிதிரளக்கூடியபடி களச்செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தியமை அவரது அடுத்த சாதனைக்கான வளர்ச்சிக்கட்டம். சந்தித்த ஒவ்வொரு நெருக்கடிகளிலும் விடுதலைப் போராட்டம் ஓய்ந்து விடாதபடி முன்னெடுப்பதன் பின்னே உள்ளமை அவரது ஆற்றலின் வெளிப்பாடு. உலகினது வல்லாதிக்கங்களின் அபிலாசைகளுக்கும் நெருக்குதல்களுக்கும் எமது விடுதலைப் போர் விலையாகிப்போய்விடாதபடியான வழிகாட்டுதலே எமது விடுதலைக்கான அவரது தலைமைத்துவத்தின் மகுடம்.

ஒடுக்கப்பட்டு நசிவுறும் எமது இனத்தின் விடுதலைக்கான வழி 'சுயமாகப் போராடி, சுயமாக வலுவாகிக்கொள்ளுதல்' என்ற தத்துவத்தை உலகின் முன் நிறுவிக்காட்டிய பெருமையினாலேயே எங்கள் தலைவர் உச்சமான பெருமையைப் பெறுகின்றாரென நான் கருதுகின்றேன். எம் தலைவரது குணாம்சங்களே அவரது உயர் நிலைக்குக் காரணம் என்பது வெளிப்படை. அவரிடம் இயல்பாக அமைந்திருந்த நற்பண்புகளும் அவர் தனக்குத்தானே உருவகித்து வளர்த்துக்கொண்ட தலைமைத்துவப் பண்புகளும் இணைந்தே மிகச் சிறந்த அரசியல், இராணுவ ஆற்றலைக்கொண்ட தேசிய நிர்மாணியாக உலகின் முன் அவரை வெளிப்படுத்தியுள்ளது.

தன்னை ஒரு தலைவனாக உருவகித்துக்கொள்ளாமல் ஒரு போராளியாகவே அவர் தனது பொதுவாழ்வை ஆரம்பித்தார். இன்னும் சொல்வதானால் தனது செயலார்வத்திற்கு ஒரு வழிகாட்டியைத் தேடி அலையும் இளம் போராளியாக அவர் நீண்டகாலத்தைச் செலவு செய்தார். அக்காலப்பகுதியில் அவர் பெற்ற பக்குவமும் பட்டறிவுமே அவரை இன்றைய உயர்ந்த தலைமை நிலைக்கு உயர்த்தியுள்ளது எனலாம்.

அக்காலத்தைய தலைமை நிலையில் உள்ளவர்களிடம் முறையான செயற்திட்டம் இல்லாமையை அவதானித்தார். அத்துடன் அவர்களிடம் அர்ப்பணிப்புணர்வு இல்லாதிருப்பதையும் அடையாளம் கண்டுகொண்டார். அவை அவருக்குப் பல பாடங்களைக் கற்பித்தன. அந்தப் பாடங்களினாலேயே அவரது தலைமை உருவானது. தலைமை உருவானது என்பதைவிட வரலாற்றின் வாசலின் ஊடாகத் தலைமை நிலைக்கு அவர் அழைத்துவரப்பட்டார்.

ஆம். தனக்குத் தலைவர்களாகக் கருதிச்செயற்பட்ட அக்காலத்தைய மாணவர்பேரவை, இளைஞர்பேரவைத் தலைவர்கள் பேச்சளவிலேயே தலைவர்களாக இருந்தமையைக் கண்டுகொண்டார். எதிரியின் முறியடிப்பு முயற்சிக்கு நெஞ்சுரத்துடன் முகம்கொடுக்கத்தவறிய அவர்களது பொறுப்பின்மை அவரை வருத்தியது. அக்காலத்தைய போராட்ட அமைப்பையே சிதறடிக்கும் வகையாக சின்னத்தனத்துடன் அவர்கள் நடந்துகொண்டபோது தனியானதொரு அமைப்பை உருவாக்கும் நிலைக்கு உள்ளானார்.

விடுதலை அமைப்பொன்றை உருவாக்கிச் செயற்படுத்திய போதும் தான் தலைவராகும் எண்ணமின்றி இன்னொருவரைத் தலைவராக்கி தன்னைச் செயற்பாட்டாளராக வைத்துக்கொண்டார். ஒரு விடுதலைப்போராட்டத் தலைமை இயற்கையாக உருவாகவேண்டும் என்பதை அந்தச் செயற்கைத் தலைமை நிரூபித்தது. அவர்களது தனிப் பலவீனங்களுக்காக ஒரு விடுதலை இயக்க மாண்பு குலைக்கப்பட்டு, நெறிமுறைகள் சிதறடிக்கப்பட்டபோது செயற்கைத் தலைமைகள் அடையாளம் காணப்பட்டமையும் அகற்றப்பட்டமையும் நடந்தேறின. அந்த வேளையில் அவர் விடுதலைக்கு வழிகாட்ட முன்வந்தார்

அதனால் அவர் தலைமை நிலைக்கு அழைத்துவரப்பட்டார். தலைமைக்குத் தேவையான தீர்க்கதரிசனப் பார்வைக்கு உதாரணமாக கொள்ளத்தக்கவர் எமது தலைவர் என்பதை நாம் பெருமையுடன் இங்கு கூறிக்கொள்ளலாம். இந்திய அரச பிரதிநிதிகளால் எமது தமிழீழ விடுதலைப் போராட்டப் போராளிகளுக்கான ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்ட நேரம் அது.

1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் வடமாநில மலைகளாற் சூழப்பட்ட பிரதேசத்தில் நாம் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தோம். அங்கு பயிற்சி ஆசிரியராக இருந்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் எமது பயிற்சி விடயங்களிலும் எமக்குப் பழக்கப்படாத உறைபனி நிலையை எதிர்கொள்வதற்கான தனிப்பட்ட கவனிப்பிலும் அதீத அக்கறை எடுத்துச் செயற்பட்டிருந்தார். பயிற்சி பெறும் அனைவருக்கும் பொறுப்பாக இருந்த பொன்னம்மானுக்கு அடுத்த நிலையில் இருந்த கிட்டண்ணை உட்பட எம்மிற் பலருடன் நெருக்கமான உணர்வு உறவினை குறித்த அதிகாரி ஏற்படுத்தி விட்டிருந்தார்.

தலைவர் அவர்கள் எமது பயிற்சி முகாமிற்கு வருகைதந்து பயிற்சிகளைப் பார்வையிட்டார். அவ்வேளையில் எம்மிற் பலர், குறித்த அதிகாரி பற்றியும் அவர் எம்மீது கொண்ட கரிசனை பற்றியும் சொன்னதை தலைவர் அமைதியாக கேட்டபடி இருந்தார். அன்றிரவு தெரிவு செய்யப்பட்ட பொறுப்பாளர்களுடன் தலைவரின் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. அப்போது அவர் கூறிய கருத்துக்கள் இன்னும் எனக்குப் பசுமையாக நினைவில் உள்ளது. அதாவது 'இந்தியா தனது சுயநல நோக்கிலேயே செயற்படுகின்றது – உண்மையில் எமது விடுதலைக்காக நாமே சொந்தமாகப் போரிட வேண்டும்.

போராளிகளாகிய நாம் எமது விடுதலையை இந்தியா பெற்றுத் தரும் என்ற எண்ணத்துடன் இருப்பது எமது விடுதலைப் போரைப் பலவீனப்படுத்திவிடும். எனவே இந்தியாவை நம்பியிருக்காது எமது விடுதலைக்காகப் போராடும் மனஉறுதியைப் போராளிகளிடையே ஏற்படுத்துங்கள்' என்பதாகத் தலைவரின் கருத்து அமைந்திருந்தது. இந்தியா எமது விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை. எமது விடுதலைக்காக நாமே போரிட வேண்டியிருக்கும் என்று அன்றே கூறிய அவரது தீர்க்கதரிசனமான சிந்தனையே எமது விடுதலைப் போராட்டம் சொந்தக்காலில் நிற்பதற்கும் நெருக்கடியின்போது அழிந்துவிடாமல் நிலைத்து நிற்பதற்கும் அடிப்படை ஆதாரமாக அமைந்ததெனலாம்.

எமது விடுதலைப் போராட்டம் சார்ந்த இந்தியாவின் நிலை சார்ந்து மட்டுமல்லாமல் எமது விடுதலைப் போராட்டத்தின் போக்கு, எமது விடுதலைப் போராட்டத்தின் மீதான சிங்கள அரசியல்வாதிகளின் அணுகுமுறை மற்றும் எமது விடுதலைப் போராட்டத்திற்காக மக்களை எவ்வாறு அணிதிரட்டுவது என அனைத்து நிலைகள் பற்றியும் தெளிவாகச் சிந்தித்து வடிவம் ஒன்றை வகுத்திருந்தார். எதிர்காலக் கட்டமைப்புகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதனையும் கற்பனையாகத் தன் மனதில் உருப்போட்டு வைத்திருந்தார்.

எம் தலைவர் அவர்கள் அரசியல் ஞானம்மிக்க இராசதந்திரி என்பதில் சந்தேகமே இல்லை. தலைவர் இராணுவ விடயங்களில் விற்பன்னராக உள்ளதைச் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளும் சிலர், அரசியல் விடயத்தில் தலைவர் அவர்கள் தேர்ச்சி பெறாதவர் என்ற வகையில் கருதுவதுண்டு. அக்கருத்து மிகவும் தவறு. இன்று வன்னியில் ஒரு அரசுக்குரிய கம்பீரத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது விடுதலை இயக்க நிர்வாக அலகுகளுடனும் ஆட்களுடனும் தொடர்புபட உலகின் பிரதிநிதிகள் வந்து போகும் சூழல் ஏற்பட்டது - ஏற்படுத்தப்பட்டது.

இது ஒரு அரசியல் வெற்றி. யாழ்ப்பாணத்தில் இருந்து எமது இயக்கம் பின்வாங்கவேண்டி ஏற்பட்ட அந்த இராணுவ நெருக்கடியின் சூடு தணிவதற்கிடையில் நீண்டநெடிய ஜெயசிக்குறு ஆக்கிரமிப்புப்போரை எதிரி தொடர்ந்தான். கடந்த 90களின் பிற்பகுதியில் எமது இயக்கம் சந்தித்த இராணுவப் பின்னடைவு நிலைமையை மாற்றி வெற்றி கொள்ள வைத்தது தலைவர் அவர்களது இராணுவ வெற்றி.

அந்த இராணுவ வெற்றியை மேற்சொன்ன அரசியல் வெற்றியாக ஆக்கி எமது விடுதலைப்போரின் மீதான பார்வையைச் சர்வதேச நிலைக்கு நகர்த்தி எடுத்துள்ளமை எமது தலைவரது இராசதந்திர நகர்வின் பெறுபேறே. எம்மினத்தின் நூற்றாண்டுகால அரசியல் வரலாற்றைத் தெளிவுறப்புரிந்து வைத்திருப்பதிலும் உலகில் நடந்த, நடைபெறுகின்ற விடுதலைப் போராட்டங்கள் அனைத்தினது வரலாறுகளையும் அறிந்து வைத்திருப்பதிலும் நாடுகள், இயக்கங்கள் என்பவற்றின் வாழ்வையும் வளர்ச்சிப்போக்கையும் தீர்மானிக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிவைக் கொண்டிருப்பதிலும் கூர்ந்து அவதானித்து வருவதிலும் தலைவர் அவர்களது அறிவு மிகமிக அதிகம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களது காலத்தில் எமது விடுதலைப்போரைத் தமக்குச் சாதகமாகக் கையாண்டு கொள்வதில் இந்தியா கொடுத்த அரசியல் நெருக்குவாரங்கள் மிக அதிகம். இன்றும் இந்தியாவின் அதிகார நாற்காலிகளை அலங்கரித்து வீற்றிருக்கும் மூத்த அரசியல் தலைவர்களும் ராஜீவ்காந்தி அவர்களும் எமது விடுதலைப் போராட்டத்தையும் தலைமையையும் 'சின்னப்பெடியளின் குழுப்படியாக' சித்திரித்து கையாள முற்பட்டனர்.

அந்த அரசியல் நெருக்கு வாரங்களில் எமது விடுதலைப் போராட்டம் மூழ்குண்டு போகாதவாறு எதிர்நீச்சலிட்டுத் தக்கவைத்த அரசியல் மேதமையுடன் விடுதலைப்போரை வழிநடத்தினார். விடுதலைப் போராட்டம் அரசியல் நெருக்குவாரங்களையும் இராணுவ நெருக்கடிகளையும் சந்திக்கும் வேளைகளிற்கூட விட்டுக்கொடுக்க முன்வராத தலைவரின் பண்பையே சிலர் அரசியல் ஞானமின்மையாகச் சிந்திக்கத் தலைப்படுகின்றனர். மறுவளமாகக் கூறுவதானால் தலைவர் அவர்கள் கொண்டுள்ள தேர்ந்த அரசியல் ஞானத்தெளிவின் அடிப்படையிலேயே குறித்த விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வருவதில்லை.

இராசதந்திரம், கொள்கைப்பற்றுறுதி, சரணாகதி போன்ற பதங்களை அதனதன் சரியான அர்த்தப் பரிமாணங்களுடன் புரிந்து கொள்வார் எமது தலைவர். கொள்கைப்பற்றுறுதி இல்லாது எதிரியிடம் மண்டியிடுபவர்கள் அல்லது இனத்தினது உரிமைகளை விலைபேசிச் சலுகைகளைப் பெற முனையும் கயவர்கள் தம்செயலை நியாயப்படுத்த இராசதந்திரம் என்ற பதத்தின் பின்னே மறைந்து கொள்வதைக் கோபமாகவும் கேலியாகவும் சுட்டிக்காட்டுவார்.

எமது இனத்தினுடைய நலன்களை விட்டுக்கொடுக்க மறுக்கும் தலைவர் அவர்களது கொள்கைப்பற்றுறுதியானது அவரது அரசியல் தெளிவினால் விளைந்த பயனே. காலத்திற்குக்காலம் எம்மினத்தினிடையே தோன்றிய தலைமைகள் இன விடுதலை



சார்ந்த தீர்க்கமான பார்வையைத் தம்மிடையே கொண்டிருக்கவில்லை. அவ்வக்காலத்தைய மக்களினது மன உணர்வுகளைப் பிரதிபலித்தும் மக்களது மன எழுச்சியை ஒருமுகப்படுத்தியும் அத்தலைவர்கள் விளங்கினர் என்பது ஓரளவு உண்மைதான். ஆனாலுங்கூட உண்மையான விடுதலை நோக்கிய பயணத்திற்காக மக்களைத் தயார்படுத்தும் தீர்க்க தரிசனமோ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அர்ப்பணிப்புணர்வோ இல்லாதிருந்தனர்.

மாறாக எம்மை அடிமைப்படுத்தி வைத்துள்ளவர்களுடன் ஒத்துப்போவதாகவே இருந்தது அவர்களது அரசியல். எமது இனத்தினது விடுதலை உணர்வுகள் பொங்கிப் பிரவாகிக்கும் வேளைகளில் தலைவர்களாக இருந்த மனிதர்களுடன் தனிப்பட்ட முறையிற் சமரசம் செய்து கொள்வதையே ஆக்கிரமிப்பாளர்கள் செய்து கொண்டிருந்தனர். ஆக்கிரமிப்பாளர்களது தந்திரோபாயத்திற்குப் பலியாகி இன விடுதலையைக் காவு கொடுக்கும் கயமைக்குப் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரம் எமது தலைவருக்குத் தெரியாதுதான்.

குமுறிக் கொண்டிருக்கும் எமது மக்களது விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க ஏதாவது ஒரு பெயரிலான அற்ப தீர்வுக்கான பேச்சுவார்த்தையிலோ தேர்தலிலோ பங்குகொண்டு எதிரிக்குத் துணைபோதலுக்குப் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரம் எமது தலைவருக்குத் தெரியாதுதான். விடுதலைக்கான கொள்கைப்பற்றுறுதியை முதன்மைச் சிந்தனையாக்கி, அந்த இலட்சியத்திற்குப் பங்கமின்றிச் செயற்பட நண்பர்களை நாடுவதன் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரத்தில் எமது தலைவர் வல்லவர்.

விடுதலைப் போரியலுக்கும் அதனிடையேயான போரோய்ந்த அரசியல் நகர்வுகளுக்கும் கருத்துலகு பற்றிய பார்வையுடன், காலச் சூழல் பற்றிய கணிப்பீடும் அவசியம். இவ்வுணர்வலை வரிசைகளை உய்த்தறிவதும் கணிப்பிட்டுக் கையாள்வதும் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரத்தில் எமது தலைவர் ஒருவித்தகர். இந்தியாவில் அமைந்த எமதியக்க ஆரம்பகாலப் பயிற்சித் தளங்கள், தமிழ் நாட்டு முதலமைச்சர் எம.ஜி.ஆர் அவர்களுடனான நட்புறவு, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காலத்திற் சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடனான பேச்சுவார்த்தை என்பன தலைவரது இராசதந்திர நகர்வின் சில வெளிப்பாடுகள்.

அந்த இராசதந்திர நகர்வில் விளைந்த நட்புறவுகள் எமது இனத்தின் உரிமைகளை விலையாகக் கேட்க அனுமதிக்காத அவரது ஆளுமையே இங்கு முதன்மையானது. கொள்கைப்பற்றுறுதிக்கும் இராசதந்திர நகர்விற்கும் இடையே தலைவர் அவர்கள் சுயமாக வகுத்து வைத்திருந்த எல்லைக்கோட்டினைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தனக்குத் தனிப்பட்ட முறையில் ஒவ்வாத தன்மைகொண்ட பலருடனுங்கூட அவர் நட்புறவுடன் பழகுவதைக் கண்டிருக்கின்றேன். தனிப்பட்ட நலன் சார்ந்து அமைவதாக அவர்கள் எண்ணிவிட இடம் கொடாமல் நிகழும் மேற்கண்ட பழக்கங்கள்கூட அவரது இராசதந்திர ஆளுமையின் இன்னுமொரு பக்கம்.

இனத்தின் விடுதலை மீது அவர் கொண்ட கொள்கைப்பற்றுறுதியே அவரது அந்த ஆளுமையின் இரகசியம். போராட்டப் போக்குகளிற் கடும் நெருக்கடிகள் காலத்திற்குக்காலம் ஏற்படுவதுண்டு. அப்படியான நெருக்கடிகளிலும் அந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகவேனும் செய்யப்படும் எந்தப் பணியிலும் நேர்மை தவறுவதை அல்லது வஞ்சகமான செயற்பாடுகளை தலைவர் அவர்கள் அனுமதிப்பதில்லை. மில்லர் கரும்புலியாகக் களம் செல்வதற்கு முந்திய நிலைமை அது.

சிறிய முகாமினைக்கூட இயக்கம் தாக்கியழிக்க ஆரம்பிக்காத 1985 ஆண்டு முற்பகுதியாக இருக்க வேண்டும். அவ்வேளையில் இராணுவ முகாம் ஒன்றைத் தாக்குவதென்பது எமதியக்கத்திற்கு மிகப்பெரிய வெற்றியாக அமைந்திருக்கும். களத்தில் நின்ற பொறுப்பாளர்களால் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருந்தது. அதாவது, தனியார் வாகனங்கள் சிறு பரிசோதனையுடன் செல்லும் வீதியின் ஓரமாக அமைந்திருந்தது அந்த இராணுவ முகாம். அவ்விராணுவ முகாம் ஊடாக வழமையாகச் சென்று வரும் பொது ஆள் ஒருவருடைய வாகனமும் பொதுநபரான சாரதியும் வழமையாகச் சோதனை செய்யும் இராணுவத்திற்குப் பழக்கமாய் போய்விட்டதால் சோதனை இல்லாமலே போய்வரக் கூடியதாக அமைந்திருந்தது.

அதனை அவதானித்த எம்மவர்கள் வாகனச் சாரதிக்குத் தெரியாமல் வாகனத்தில் வெடிகுண்டை பொருத்திவிட்டு, ‘வாகனம் இராணுவ முகாமின் மத்தியிற் செல்லும்போது, தூரக்கட்டுப் பாட்டுக்கருவி மூலமாக’ (றிமோட்) குண்டை வெடிக்க வைத்து, முகாமிற்கு பேரிழப்பை ஏற்படுத்திவிட்டு, மேலதிக அணியை உள்ளனுப்பி, முகாமைக் கைப்பற்றுவதாகத் திட்டம் அமைந்திருந்தது. திட்டம்பற்றி அறிந்தவுடன் தலைவர் அவர்கள் கடுஞ்சினமுற்று திட்டத்தை நிறுத்திவிட்டார்.

சாரதிக்கே தெரியாமற் குண்டைப் பொருத்தும் யோசனையைக் கடுமையாகக் கண்டித்ததுடன், ‘உங்களுக்குள் ஒரு துணிவுள்ளவன் இருந்தால் தன்னை அழிக்கும் மனநிலையுடன் வெடிகுண்டை எடுத்துச் சென்று வெடிக்க வைக்கலாமே தவிர, இவ்வாறு வஞ்சகம் புரிவது கடும் தவறென்று’ கண்டித்தார். அதன் பின்னர் கொஞ்சக் காலமாக இத்திட்டத்தின் தவறுபற்றி அடிக்கடி பொறுப்பாளர்களுக்கு எடுத்துச் சொல்லி சுலபமாக வெற்றிகள் பெறுவதற்காக நியாயமில்லாத திட்டங்கள் வகுக்கக்கூடாதென கருத்தேற்றம் செய்தவண்ணமே இருந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போதான நெருக்கடியான காலமது. அர்த்தமற்ற அரைகுறைத் தீர்வுகளைக் கடைபரப்பிய இந்திய வஞ்சகத்தை நன்கு தெரிந்தும் தெரியாததுபோல் துணை நின்றனர் துரோகிகள். ‘ஆண்டவன்தான் இனித்தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும்’ என்றுரைத்த தந்தை செல்வாவின் வழிவந்தவர்களாகத் தம்மைக் கூறிக் கொண்டவர்கள் அவர்கள். தமிழினத்தின் விடுதலைக்காகக் குருதி சிந்திப் போராடும் இளைய சந்ததிக்குப் பக்கத்துணையாக இருக்கவும் துணியவில்லை.

ஆண்டவன் காப்பாற்றட்டும் என்று ஒதுங்கியிருக்கவும் விரும்பவில்லை. மாறாக ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணையிருக்கத் துணிந்தனர். பதவி மோகத்தில் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த துரோகிகளை அகற்றுவது தவிர்க்கமுடியாததானது. துரோகிகளை அழித்துவிட வேண்டும் என்பதை மட்டுமே சிந்தனையில் இருத்திய நடவடிக்கையாளர்கள் நெறிதவறிவிட்டனர். நடவடிக்கைக்கு பொருத்தமான வாய்ப்புக் கிடைக்காததால் சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்து அங்கேயே தாக்குதலைச் செய்துவிட்டனர்.

தாக்குதல் செய்யப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்ட தலைவர் அவர்கள் பேரதிர்ச்சியும் துயருமுற்றார். நேர்மையான வீரத்துடன் நடவடிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும். மாறாகக் கலந்துரையாடலுக்கான சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதும் அந்தச் சந்திப்பு தாக்குதலுக்குத் தெரிவு செய்யப்பட்டதும் மிகவும் தவறான அணுகுமுறை. இந்த அணுகுமுறை எமது இயக்கத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தி விட்டது. ‘எமது போராளிகள் பின்பற்ற வேண்டிய வீரமான அணுகுமுறையாக இது அமையவில்லை.

இந்த அணுகுமுறை அனுமதிக்கப்பட்டிருக்கவே கூடாது. எமது விடுதலை இயக்க அறநெறிக்கு மாறாக இவை நடந்துவிட்டன’ என்றெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லிக் குமுறித் தீர்த்தார். வீரம், சுத்தமான வீரம் என்பனபற்றிக் கனல்தெறிக்கும் வார்த்தைகளாலும் உணர்வுகளாலும் அவர் கொடுத்த விளக்கத்தைக் கேட்ட எந்த ஒரு போராளியும் இதுமாதிரியான ஓர் திட்டத்தை தம்மனதால் கூட நினைக்கத்துணியமாட்டார். நிகழ்வுகள் நடந்துமுடிந்து பல்லாண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் வேறேதாவது புதிய தாக்குதல்கள் பற்றியதான உரையாடல்களில் மேற்படி தவறான அணுகுமுறை பற்றிய விடயத்தைச் சுட்டிக் காட்டுவார்.

நெறிமுறை மீறிய அந்த அணுகுமுறைக்கான அவரது வேதனையுடன் எமது இயக்கம் எப்படியிருக்க வேண்டும் என்ற அவரது எதிர்பார்ப்பும் அவ்வேளையில் வெளிப்படும். தலைவர் அவர்களது இந்த நேர்மைப் பண்பே எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கான ஆத்ம பலத்தைக் கொடுத்து நிற்கின்றது எனலாம். வேறொரு விதத்திற் சொல்வதானால், தனது மனச்சாட்சியை சிறிதளவேனும் களங்கப்படுத்திக்கொள்ள அனுமதிக்காத அவரது நேர்மையே எமதினத்தின் தலைமைத்துவத்திற்கான ஆளுமையாக வடிவம் பெறுகிறது எனலாம்.

காலத்திற்குகாலம் விடுதலைப் போராட்டத்தின் தேவைகருதி அறிமுகம் செய்யப்படும் கட்டுப்பாடுகளைத் தானே கடைப்பிடிப்பதில் தலைவர் முன்னிற்பவர். குறிப்பாகத் தன்னைச் சொல்லி எவரும் சலுகைகளைப் பெற்றுவிடாதபடி அவர் எடுக்கும் கவனமானது, குறித்த கட்டுப்பாடுகளை செயற்படுத்துவோரிற்கு மனவுந்துதலைப் பெரிதும் தரும். தலைவர் அவர்கள் மனம் கலங்கியதை நான் பார்த்த மிக அரிதான சந்தர்ப்பங்களில் ஒன்று நினைவிற்கு வருகின்றது. இது சுமார் பத்து வருடங்களுக்கு முன்னைய சந்தர்ப்பம். எமது இயக்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியே பயணம் செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதில் தோல்வியடைந்த ஒருவர், தலைவர் அவர்களுக்கு நெருக்கமான ஒருவர் மூலமாக குறுக்குவழி முயற்சி ஒன்றினைச் செய்திருந்தார்.

ஒரு சலுகைமுறைச் சிபாரிசிற்காகக் குறித்த விண்ணப்பம் மிக நெருக்கமான ஆடாகத் தன் கவனத்திற்கு தரப்பட்டபோதும், தலைவர் அதற்காக சிபாரிசு செய்ய மறுத்துவிட்டார். அந்த மறுப்பை பெற்றுக்கொண்டவரது கோபம் அல்லது மனக் கவலையானது தலைவர் அவர்களிற்குங்கூட தனிப்பட்ட முறையில் மனக்கலக்கம் தருவதாய் அமைந்தபோதிலும் அந்த விண்ணப்பத்திற்காகச் சிபாரிசு ஒன்றைச் செய்வதற்கு அவர் சம்மதிக்கவேயில்லை.

பயண அனுமதிக்காகத் தன்னை அணுகுபவர்களின் போராட்டப் பங்களிப்பின் காரணமாகவோ தனது பொதுவான சமுதாயப் பார்வை காரணமாகவோ ஏராளமான சிபாரிசுகளையும் சில வேளைகளில் அவசரமான கட்டளைகளையும் தலைவர் எமக்குத் தருவதுண்டு. ஆனாலும் மேற்குறிப்பிட்ட விடயத்திற் பயண அனுமதிக்கான வேண்டுகோளுக்குரியவர் அதற்குப் பொருத்தமான தன்மையைக் கொண்டிராத காரணத்தால் அந்த விண்ணப்பத்திற்கு தனது சிபாரிசைச் செய்யத் தலைவர் உறுதியாகவே மறுத்துவிட்டார்.

இதுபோன்ற இறுக்கமான தன்மையைப் பலவேளைகளிலும் கடைப்பிடிப்பதால் தனிப்பட்ட நண்பர்கள் பலருடனும் உறவுகள் இல்லாதுபோகும் சூழலும் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டே வந்துள்ளது. இலட்சியத் தெளிவு மற்றும் தனிப்பட்ட நேர்மையால் விளைந்த பக்கம்சாராத்தன்மை என்பவற்றையே தனது பலமாகக் கருதுபவர். அதனால் இந்த நட்பிழப்புகளுக்காக வருந்தாமல் தனது நேர்மைக்காகவே பெருமைப்பட்டுக் கொள்வார். தாயக விடுதலைக்காகப் போராட அல்லது போராட்டத்திற்கு பங்களிக்க முன்வரும் ஒவ்வொருவரையும் தனது உறவுகளாக ஏற்றுப்போற்றும் பண்பினைத் தனதியல்பாகவே வளர்த்துக்கொண்டுள்ளார்.

இன்னும் சொல்வதானால் தனிப்பட்ட நட்பு, உறவு எனும் வட்டத்திற்குள் சிக்கிக்கொள்ளாத தன்மையே, ஒரு இனத்தையே, அவர் பின்னால் அணிதிரள வைத்துள்ளது எனலாம். பூமி எங்கும் சூரியனின் ஒளியிற் குளிக்கும். அதே சூரியனை நெருங்கிச் செல்லும்போது ஒளியை மட்டுமின்றி வெம்மையாலும் சுடும். அதேபோல் எங்கள் தலைவரை நெருங்கியிருப்போரும் அவரது குளிர்மையான ஒளியை பெறுவதுடன் மட்டுமல்லாது, வெம்மையான கண்டனத்தை அல்லது கோபத்தைப் பெறவும் தவறுவதில்லை.

குறிப்பாக அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருந்து அதனை நியாயமின்றிப் பிரயோகிப்போர்மீது அவருக்கு வரும் கோபத்தை மாற்றவோ, மறக்கவோ முடியாது. அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருப்போர் அதனைத் தவறாகப் பயன்படுத்துவதே அநேக பிரச்சனைகளுக்குக் காரணமென்பதும் அணுகுமுறைகளைச் சீராக்கினால் அவற்றுக்குரிய தீர்வுகள் கிடைக்குமென்பதும் தலைவர் தொடர்ந்து வலியுறுத்தும் விடயம். பொதுமக்களை அதிகாரத் தொனியுடன் அணுகும் புலனாய்வுத்துறையினர் பற்றிய முறைப்பாடுகளைப் பெறும்வேளையில் தலைவர் அவர்களது கோபத்தைப் பலதடவைகளில் சந்தித்துள்ளேன்.

அப்படியான உணர்வு வெளிப்பாட்டுச் சந்தர்ப்பத்தில்தான், அதிகாரத்தாலும் பணபலத்தாலும் உருவாக்கப்படும் புலனாய்வுக் கட்டமைப்பு காலத்தால் அழிந்துவிடும். அன்பான அணுகுமுறையாலும் விடுதலை உணர்வை தட்டி எழுப்புவதாலும் உருவாக்கப்படும் கட்டமைப்பே காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் எனும் வழிகாட்டும் கருத்து வடிவத்தை முன்வைத்தார். எமது தலைவர் அவர்களது அவ்வாறான கோபத்தின் வெளிப்பாடுகளை நாம் விடுதலைக்கான அவரது கோட்பாடுகளின் வெளிப்பாடுகளாக பார்க்கலாம்.

எமது இனத்தின் விடுதலை பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கும் அல்லது எமதினத்தின் விடுதலைக்கான பணிதவிர வேறொன்றையும் சிந்திக்க மறுக்கும் அவரது எண்ண வெளிப்பாடுகளே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படும். வார்த்தைகளினால் மட்டுமல்லாது வாழ்க்கையினால் வழிகாட்டியாக செயற்படும் எமது தலைவரின் காலத்தில் அவரின் பின்னே அணிதிரள்வோம். எம்தலைவரது வழிகாட்டுகையில் விடுதலை மீதான உறுதிப்பாட்டின் வழித்தடத்தில் அணிதிரள்வதே தமிழ்த்தேசிய உணர்வுடையோரின் கடமையாகும்.

அவரது வழிநடத்தலின்கீழ் இணைந்துள்ள ஒவ்வொருவரும் அவரது எண்ணங்களையும் கருத்துக்களையும் சரிவரப்புரிந்து விடுதலையை விரைவுபடுத்த உழைப்பது பொறுப்பாகும். விடுதலையின் வழிகாட்டியாகத் தன்வாழ்வை அமைத்துக்கொண்ட எங்கள் தலைவரினது ஐம்பதாவது அகவையின் நாளில் பெருமிதத்துடனும், நம்பிக்கையுடனும் வாழ்த்துக்கூறும் தமிழ்த் தேசியத்தின் குரலுடன் நானும் இணைவதிற் பெருமை கொள்கின்றேன்.

-ச.பொட்டு

புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர்,

தமிழீழ விடுதலைப் புலிகள்,

தமிழீழம்.





# திருவெலாம் சூழ வாழ்க பல்லாண்டு!

விண்வரை விரியும் வியத்தகு வீரம்
விரிந்தோர் மலரை நிகர்த்திடும் அழகு
பண்ணெடுத் தெவரும் பாடிடும் பண்பு
பரணியொன் றெழுத் வல்லவுன் வெற்றி
கண்வழி வழியும் கருணையின் கசிவு
களத்தினில் பகையை வெல்லுமுன் ஆற்றல்
இன்னும் பல்லாண்டு ஆண்டென வளர்க.
இளமையோடிருந்து வாழ்க பல்லாண்டு!

ஆயிரம் அகவை நினக்கெனவாகும்
அன்பினர் வாழ்த்து அதையுருவாக்கும்.
நாவிருந்த தெழுமென் நற்கவி யெழுதும்.
நலன்பெறும் சொற்கள் நடப்பனவாகும்.
காவியப் பொருளே! காலையின் கதிரே!
கவினுறப் பொலியும் அருள்மிகு திருவே!
தேவியின் கடைக்கண் பார்வை பெற்றவனே
திருவெலாம் சூழ வாழ்க பல்லாண்டு!

-புதுவை இரத்தினதுரை

**நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.**

---

# தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்
# அகவை 69


சிங்கள ஆக்கிரமிப்பு அரசே!
நிறுத்து
தமிழீழ நில
ஆபகரிப்புகள்
எங்கள்
நிலம்
தமிழர்
உயிர்


தமிழீழத் தேசிய
மாவீரர் நாள்
நவம்பர் 27
2023
THAMILEELA
"MAAVEERAR NAAL"
NOVEMBER 27
தாயக
விடுதலைப்
போராட்டத்தில்
வீரச்சாவை
தழுவிக் கொண்ட
மாவீரர்களுக்கான
வீர வணக்க நாள்
In remembrance of Our Heroes
Who Sacrificed their lives for us,
for Our Homeland and for Thamil Nationalism
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்
The Thirst of Thamils is the Homeland of Thamileelam